1646

மானக் கல்வி.

ஆண்டு. பகுதி-8.

Oct. Nov. Dec. 1937

JL
T15m21, N36P
N37.2.6
147645

46 640

பகுதி 2] [பகுதி 6

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

8 NOV 1937

ஈஸ்வர ௵ புரட்டாசி ௴
- OCTOBER 1937 -

பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

**41, சிங்காராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.**

வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதியின் விலை 0—4—0

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பாஷாபி விருத்தி முறைகள் .... ... —எஸ். ஜெகன்னாதன் | 135 |
| 2. | கிராமப் பள்ளிக்கூடங்களும் தேசப் பிரஜைகளும் .... —மொழி பெயர்த்தவர் : "சிவகுமார சர்மா" M.A.L.T. | 144 |
| 3. | தமிழ்ச் செய்யுள் கற்பிக்கும் முறை .... .... —M. இரமகிருஷ்ண பிள்ளை | 155 |
| 4. | வேங்காடன்பட்டி கிராமப் படிப்பு முறை .... —கே. ஸீ. வீரராகவையர். M.A.L.T. | 161 |
| 5. | ஆரம்பக் கல்வி முறையும் காலப்போக்கும் .... —ஜி. ஸ்ரீனிவாசாசாரியர், மயிலாப்பூர் | 166 |
| 6. | பெற்றோர்களுக்கு வேண்டுகோள் .... .... | 173 |
| 7. | குழந்தைகளின் கைவேலை .... .... —கே. சுவர்ணவல்லி | 177 |
| 4. | பத்திராதிபர் குறிப்பு .... .... .... | 179 |


---


## கௌரவப் பத்திராதிபர்கள்

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. ஷுல்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்

—நிர்வாகப் பத்திரிகாசிரியர்

# பாலர் கல்வி

| தொகுதி 2 | 1937 ௵ அக்டோபர் ௴<br>ஈஸ்வர ௵ புரட்டாசி ௴ | பகுதி 6 |
|---|---|---|


## பாஷாபி விருத்தி முறைகள்

### பாடம் சொல்லுவதும் பாடம் கேட்பதும்


எஸ். ஜெகன்னாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.


*செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்—அச்செல்வம்*
*செல்வத்துளெல்லாந் தலை.*

பாஷாபி விருத்திக்கு நல்லபாஷையைக் குரு சொல்லி சிஷ்யன் கேட்பது, மறுநாள் பாடம் ஒப்புவிப்பது, சந்தேகத்தை விளங்கச்செய்து கொள்வது இவை முறைகளாயிருந்தன. மேலும் செய்யுள்களைத்தான் பெரும்பாலும் முன்னாளில் பாடங்களாயிருந்தன. குரு தாமே அவற்றை அனுபவித்துப் பாடம் சொல்லுவார். கவனம் குன்றாச் சீடர்களும் அவற்றைப்பரிவுடன் கேட்டுப் பயன்பெறுவர். வயதிற்குறைந்த இளைஞர்களுக்கு இம்மாதிரி சில செய்யுள்களை எப்படிப்பாடம் சொல்லிக் கொடுப்பது என்பதைப்பற்றி நாம் ஆராய்வது அவசியம். குரு தாமே அவற்றின் ரஸத்தையறியவேண்டும். குழந்தைகளும் அந்த இன்பரஸத்தைப் பருகும்படி செய்யவேண்டும்.

சிறு குழந்தைகளுக்குப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், உபமானம், உபமேயம் சொல்லிக் கொடுப்பது, மறுநாள் பதவுரை சொல்லச்செய்வது, வசனநடையாகப் படித்துக் காட்டச்செய்வது போன்ற முறைகளை நாம் கையாண்டு வருகிறோம். பாட்டுப் புஸ்தகத்திற்கும் அர்த்த புஸ்தகம் ஒன்று 6 பை முதல் ஒரு அணாவரையில் விலையுள்ளதாயிருக்கும். அதையும் உபாத்தியாயர் வாங்கிக்கொடுத்து படித்துவரும்படி செய்கிறார். மறுநாள் பிள்ளைகள்.

| | |
|---|---|
| கான - காட்டிலே | தானும் - தானும் |
| மயில் - மயில் | அது - அந்த மயில் |

147645
சென்னை-600 005.



| | |
|---|---|
| ஆட - ஆட | ஆக - ஆக (போல்) |
| கண்டு - பார்த்து | பாவித்து - நினைத்து |
| இருந்த - இருந்த | தானும் - தானும் |
| வான்கோழி - வான்கோழி | (அந்த வான்கோழியும்) |

என்று தட்டுத்தடுமாறிச்சொல்ல யத்தனிப்பதையும் யான் கண்டிருக்கிறேன். இவையெல்லாம் காணும்பொழுது எனக்கு ஒன்று தோன்றி வருகிறது. சக்கையெல்லாம் மென்றுகொண்டு சாற்றைத் துப்புகிறவன் என்ன மனநிலைமையுள்ளவனோ அதேபோலவும் இதுவும் காணப்படுகிறது என்பதேயாம்.

செய்யுள்களை எழுதினவர்கள் உலகத்துள்ள வஸ்துக்கள், சம்பவங்கள், அவர்களது ஞானதிருஷ்டிக்கு எழுந்துள்ள தோற்றங்களைப் பற்றியும் முத்துக்களைப்போன்ற பதங்களைப்பொருக்கி முத்துமாலைகளான செய்யுள்களை இயற்றியிருக்கிறார்கள். அல்லது அமிர்த தாரையாக வர்ஷிக்கின்ற பாஷையிலிருந்து வெள்ளம் பெருகி ஓடும் மஹாநதிகள் போன்ற செய்யுள்களையும் பாட்டுகளையும் கவனம் செய்திருக்கிறார்கள். கதைகளும் கருத்துகளும் இச்செய்யுள்களில் நிரம்பியுள்ளன. இவைகளை உபாத்தியாயர் சொல்லவும் பிள்ளைகள் கேட்பதுமே பாடம் கற்றுக் கொடுப்பதுஆகும். மேலும் சிறுவர்களுக்கோ வென்றால் இக்கதைகளும் கருத்துகளும் மனதின்முன் தோன்றும்படி சித்துரரூபமாக விளக்கப்பட வேண்டும். இதைமுன்னிட்டே அடியேன் எனது தாழ்ந்த கவனத்தைச் செலுத்திவருகிறேன். அச்சமயத்தில்

"ஒன்றை நினையாது முன்வந்துநிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்"

என்றபிரகாரம் சில செய்யுள்களும் பாட்டுகளும் என்முன் தோன்றின. யான் அவற்றைக் குறித்து சிற்சில சமயம் கேட்டுத் தெரிந்துகொண்டதுண்டு, சிந்தித்ததுண்டு, குழந்தைகளுக்கும் சிலவற்றைச் சொல்லிக் கொடுத்ததுண்டு. அவைகளையே யான் இங்கு விளக்கிக்காட்டியிருக்கிறேன். இவற்றைக்காணும் உபாத்தியாயர்கள் அனைவரும் இவற்றைப் போல் சுவரில் தொங்கவிடுதற்கேற்ற பிரகாரம் பெரிய எழுத்துக்களில் எழுதி சித்திரங்கள் வரைந்து அல்லது அவைகளுக்கேற்ற படங்களைக் கத்தரித்து ஒட்டி அழகுபெறச்செய்வித்தல் வேண்டும்.

உபாத்தியாயர் செய்யுளைப்படித்து நன்கு அனுபவிக்கிறவராய்இருக்கவேண்டும். அப்பாட்டுகளைக் கதைகள், படங்கள்மூலமாக விளக்குவதனால் அச் செய்யுளில் அமைந்துள்ள கதையும் கருத்தும் பாஷையும் நன்கு விளங்கும். பிறகு உபாத்தியாயர் கருத்து விளங்கும்படி அப்பாட்டை 2, 3, தரம் தாமே படிக்கவேண்டும். பிறகு உபாத்தியாயர் படிக்கப் பிள்ளைகளும் அவரைப் பின்பற்றிப் படிக்கவேண்டும். கடைசியாகவே



ஒவ்வொருவனும் ஒருதடவைத் தானே படிக்கவேண்டும். அதிகக் கடினமான பதத்திற்கு மாத்திரம் அர்த்தம் சொல்லுவது போதும். மறுநாள் அப்பாடல்களை ஒப்புவிப்பதும் பொருந்தும். மனதிற் தோற்றமும் நாக்கில் அப்பாஷையும் நன்கு பதிய வேண்டுமென்பதுமுக்கியநோக்கம்.

சில பதங்களைப் படங்களுடன் பொருந்த வைத்துக் காட்டுவதும் பொருந்தும். குழந்தைகளும் இம்மாதிரிப் பாட்டுகளைப் படமூலமாக விளக்கிக் காட்டுவதும் மிகவும் போற்றத்தக்க விஷயமாகும். சித்திரம் வரைய சக்தியுள்ளவர்கள் வரையலாம். உசிதமான படங்கள் எங்கேனும் கிடைத்தால் அவற்றை கத்தரித்தும் ஒட்டலாம். நல்ல புஸ்தகங்களிலுள்ள படங்களைக் கிழிக்க அல்லது கத்தரிக்க முயலுவதில் எச்சரிக்கை செய்விப்பதுதகுதியே.

மேலும் செய்யுள்களையும் பாட்டுகளையும் இராகத்துடன் பாடக் கூடிய ஒருவரைக்கொண்டு பாடச்செய்து பிள்ளைகள் கேட்கும்படி செய்விப்பது, செய்யுள் அல்லது பாட்டுகளை இயற்றியுள்ள பெரியாரின் உருவங்களைப் படமூலமாகக் காட்டுவது, அவர்களது ஜீவிய சரித்திரத்தில் சில பகுதிகளைப் படித்துக் காட்டுவது இவை அவசியம். தமிழ் வித்துவான்கள், கவிகள் இவர்களின் பெயர்களைக் கேட்டிருந்தாலும் அவர்களது உருவப் படங்களைப் பார்த்திருந்தாலும் பின்னால் அவர்களைப்பற்றி மேன்மேலும் படிக்க அல்லது கேட்க ஆசை உண்டாகும்.

I. முன்னம் ஒருதடவை வரதராஜர் வாகனப் பாட்டுகள் என்ற தலைப்பின் கீழ் மூன்று பாட்டுகள் எழுதியிருந்தேன். மற்றும் எனக்கு ஞாபகம் வந்த சிற்சிலவைகளை இங்கு குறித்திருக்கிறேன். ஒன்று மாத்திரம் படத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.



| | | |
|---|---|---|
| 2. | முனிவர்கள் செய்வது யாகம் | —வரதா |
| | பங்காளிகள் பிரிப்பது பாகம் | —வரதா |

கொத்தித் திரிவது காகம் —வாதா
வரதராஜர் ஏறுவது நாகம்

3. உருண்டு ஓடுவது சக்கரம் —வாதா
களிம்பு ஏறுவது தாமிரம் —வாதா
பிள்ளைகள் ஆடுவது பம்பரம் —வாதா
வரதராஜர் ஏறுவது சப்பரம்.

குறிப்பு :

சப்பரம் என்பதற்கு "தெரு அடைச்சான்" என்று சொல்லுவது வழக்கம். ஒரு தெரு அகலத் நச் சரியாய் சக்கரங்கள் அமைத்துக் கட்டப்பட் பலபேர் சேர்ந்து கயிறு கொண்டு இழுக்கக் கூடி முன் பாகம் தென்னங் குருத்துகளால் செய் பட்ட பலவித உருவங்கள் நிறைந்து ஒரு கோபு போல் அமைக்கப்பட்டு வெகு நேர்த்தியாய் க்கும்.

கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி.
கைப்பொருள் மெய்ப்பொருள்
பொருள் செல்வம் கல்விச் செல்வம்
வெள்ளத்தாற் போகாது, வெந்தண லால்
வேகாது ; வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது ; கொடுத்தாலும்
நிறை வொழியக் குறைபடாது ;
கள்ளர்க் கோபயமில்லை காவலோ
மிக எளிது ; கல்வி என்னும்
உள்ளத்தே பொருளிருக்க உலகெல்லாம்
பொருள் தேடி யுழல்வ தென்னே.

பெண்ணுக்கு வரன் தேவேது

் வேண்டுமென் றிருப்பார் குலத்துள்ளார்
கல்வியினற் குறையா ஞானப்
வேண்டு மென்றிருப்பார் தந்தைமார்
பரந்த பெருஞ் செல்வமுள்ள
வேண்டு மென்றிருப்பார் தாய்மார்கள்
பவ்வனமும் அழகும் சார்ந்த
வேண்டு மென்றிருப்பார் நாறுகுழல்
நங்கைமார் நலத்தின் மிக்காரம்.







2. சம்பிரதாயத்தில் பாடிவரும் ஊஞ்சல் பாட்டு, (மீனாக்ஷி கலியாணம்)
கன்னூஞ்சலாடி யிருந்தாள்
காஞ்சன மாலை மகிழ்ந்தாள்



பொன்னூஞ்சலில் பூரித்து பூஷணங்கள் தரித்து
ஈஸ்வ ரனிடத்தில் ஆசைகள் ரொம்ப வைத்து (கண்)

உக்தமி பெற்ற குமாரி நித்தியம் சர்வாலங்காரி
பக்தர்கள் பாப சம்ஹாரி பத்ம முகஒய்யாரி (கண்)

அசைந்து சங்கிலிபாட உயர்ந்து ஊர்வசி யாட
இசைந்து தாளங்கள் போட மீனாக்ஷிப்பிரியாள் கொண்டாட (கண்)

குறிப்பு : தலை முறையாகப் பாடப்படும் இப்பாட்டுகளைக் குழந்தைகள் கற்றுக் கொள்வது தகுதியே. பெண் குழந்தைகள் கட்டாயமாக இவற்றைக் கற்றுக் கொள்ளவேண்டும்.




"அரனவனிடத்திலே ஐங்கரன் வந்துதான்
ஐயவென் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினா னென்றே சிணுங்கிடவும்
அத்தன் வேலவனை நோக்கி
விரைவுடன் வினவவே யண்ணனென் சென்னியில்
விளங்கு கண் எண்ணின னென





கணபதி ஐங்கரன் அரன் - சிவன். உமை - பார்வதி.

வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து நீ யப்படி
விகடமேன் செய்தாயென
மருவுமென் கைந்நீள முழமளந் தானென்ன
மயிலவ னகைத்து நிற்க
மலையரையனுதவ வரு முமையவளை நோக்கி
மைந்தனைப் பாராயென [கின்
கருதரிய கடலாடை யுலகுபல வண்டங்
கருப்பமாய்ப் பெற்ற கன்னி
கணபதியை யருகழைத் தகமகிழ்வு கொண்ட
களிப்புட னுமைக் காக்கவே.'' [னள்



ஆறுமுகன் வேலவன் மயிலவன்

குறிப்பு :

படம். 4. அஞ்சு ; ஐந்து; அதாவது பஞ்ச பூதங்கள் வாயு, ஜலம், ஆகாயம், பூமி, நெருப்பு. ஹனுமானைப்பற்றி இச்செய்யுளுக்குப் பொருத்தமான கதைகள் பட மூலமாக விளக்கப்பட்டிருப்பதை இங்கு காணலாம்.

படம். 5. ஸ்ரீராம பட்டாபிஷேகப் படம் ஒன்று இருத்தல் அவசியம். இப்பாட்டிலுள்ள சில பதங்கள் பட மூலமாக விளக்கப்பட்டிருப்பதை இங்கு காணலாம்.

படம். 6. கணபதி முருகன் இவர்களுக்குள் நடந்த சச்சரவை பார்வதியும் பரமசிவனும் விசாரிக்கிறார்கள். இரு பிள்ளைகளுக்கு நேரிடும் சண்டை இப்பாட்டின் மூலமாக விளங்குகிறது.

## பாடம் படித்துக் காட்டுதல்.

சில உதாரணங்கள் பாஷையானது மனதில் ஏற்படும் எண்ணங்களையும் தோற்றங்களையும் குறிக்கின்றன. பாஷையைக் கேட்டுக் கேட்டு பாஷை வளர்ச்சியடைகிறது. செய்யுளை எப்படி உபாத்தியாயர் பல தடவை படிக்கக் குழந்தைகள் கேட்டுச் சந்தோஷப்பட வேண்டும் என்று சொன்னேனோ அதே மாதிரி மன நிலைமையைக் காட்டும் மற்றும் சிலவற்றையும் நாம் படித்துக் காட்டுவது மேலானது.

## மன வருத்தத்தைக் காட்டும் சந்தர்ப்பம்.

மனுச் சோழனின் பட்டத்துப் பிள்ளை பசுங்கன்றின் மீது தேர் ஓட்டி அதை இறக்கச் செய்ய அச்செய்தியைக் கேட்ட சோழன் மனம் நொந்து கொள்ளுதல் சமயத்துப் பலவித பாபங்களைக் குறித்துப் புலம்புதலில் சில வகையான பாபங்கள் அடியிற் கண்டவாறு :

“ குருவை வணங்கக் கூசி நின்றேனோ !
குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ !
கற்றவர் தம்மைக் கடுகடுத்தேனோ !
பெரியோர் பாட்டிற் பிழை சொன்னேனோ !
பக்ஷியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ !
கன்றுக்குப் பாலூட்டாது கட்டிவைத்தேனோ !
ஊன் சுவையுண்டு உயிர் வளர்த்தேனோ !
கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ !
அன்புடைய வர்க்குத் துன்பம் செய்தேனோ !
குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தேனோ !
வெய்யிலுக் கொதுங்கும் விருக்ஷத்தை யழித்தேனோ !
பகைகொண்டு அயலோர் பயிரை அழித்தேனோ !
பொது மண்டபத்தை போயிடித்தேனோ !
ஆலயக் கதவை யடைத்து வைத்தேனோ !
.................................................................................
தந்தைதாய் மொழியைத் தள்ளி நடந்தேனோ !
தெய்வத்தை யிகழ்ந்து செருக்கடைந்தேனோ !”

2. ஈசன் கிருபையால் எல்லோரும் உயிர் பெற்றெழுவே மனத்தில் உண்டான சந்தோஷத்தைக் காட்டும் சந்தர்ப்பம் பின் கண்டபடி சொல்லப்பட்டுள்ளது.

(வசனம்) மறுமுறை கண்ட வாசம்.

“ அந்தக்கணமே நித்திரை நீங்கி யெழுகின்றது போல், இளங்கன்றானது உயிர் பெற்று எழுந்து தன் தாய்ப்பசுவினிடத்தில் சென்றது. மந்திரியும் புதல்வனும் உயிர் பெற்றெழுந்து, ஆண்டவனை வணங்கி அருகே மலர்ந்த முகத்தோடு வந்தனை செய்துகொண்டு மகிழ்ந்து நின்றார்கள்



அது கண்டு அந்நகரத்திலுள்ள ஜனங்களும் மற்றவர்களும் தம்மையறியாத பெருங்களிப்புடையவர்களாகச் சிலர் “ அற்புதம், அற்புதம், அற்புதம், அற்புதம் ” என்று ஆடினார்கள் ; சிலர் “ புண்ணிய பூசை பலித்தது, பலித்தது” என்று பாடினார்கள்; சிலர் “சூரியகுலம் தோன்றியது, தோன்றியது ” என்று துதித்தார்கள் , சிலர் “ துக்கம் நீங்கியது, சுகம் நெருங்கியது ” என்று துள்ளினார்கள் ; சிலர் “ குறை யெல்லாந் தீர்ந்தது குறை யெல்லாந் தீர்ந்தது” என்று கொண்டாடினார்கள் ; சிலர் “ கும்பிட்ட தெய்வம் குறுக்கே வந்தது ” என்று குதித்தார்கள். சிலர் “ எம்பெருமான் எதிர்ப்பட்டால் என்ன முடியாது,” என்று எக்களித்தார்கள்; சிலர் ஒருவரை யொருவர் கட்டித் தழுவிக்கொண்டு ஒரு காதமட்டும் ஓடித் திரும்பினார்கள் ; சிலர் “ கலக்கந் தீர்ந்தது, களிப்பு வந்தது ” என்று கை கொட்டினார்கள் ; சிலர் தோள் தட்டிக்கொண்டும், தொடை தட்டிக் கொண்டும், முகரோமத்தை முறுக்கிக் கொண்டும், முகமலர்ந்து கொண்டும், உடல் நிமிர்ந்துகொண்டும், உலாவி நின்றார்கள். சிலர் “வாழ்வு வந்தது ” என்று மனம் பூரித்தார்கள்.”

பாடம் சொல்லுவது கேட்பது, பாடம் படிப்பது கேட்பது இவற்றைத் தவிரத் தாமே படித்து அறிந்து கொள்ளுவது என்று மற்றொரு விதம் உண்டு. சிற்சில இடங்களில் இம்முறையையே முக்கியமான முறையாகக் கையாண்டு வருகிறார்கள். பரீக்ஷையில் தேறுதலே முக்கியமான லக்ஷியமாகக் கொண்ட படிப்பிற்கு இம்முறை மிகப் பயன்படுகிறது. ஆயினும் பாஷை அபிவிருத்திக்கு உபாத்தியாயர் படிப்பது, அவர் படிக்கும் முறையைக் கவனிப்பதும், மன உணர்ச்சியை உண்டுபண்ணுவதற்கு முன் சொல்ல இரண்டு முறைகளும் ஏற்றவையாகும். மனதிற் தாமே படித்து பல விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்கும் அப்பியாசம்கொடுக்க வேண்டியதிலும் அவசியமிருக்கிறதென்றே சொல்லலாம். ஆனால் அதுவே சிறந்த ஒரே ஒரு முறையாகாது. பல முறைகளை பிள்ளைகளின் வயது பாஷை நிலைமை, பாஷை அபிவிருத்திக்குத் தக்க பிரகாரம் பயன்படுத்துவதே உபாத்தியாயரின் கடமை. உபாத்தியாயரால் ஆராய்ந்து பார்க்க வேண்டிய விஷயங்கள் மற்றும் அநேகம் இருக்கின்றன. அவற்றை மற்றொரு சமயம் கவனிப்போமாக.

*(All rights reserved)*

# கிராமப் பள்ளிக்கூடங்களும் தேசப் பிரஜைகளும்

மொழி பெயர்த்தவர் "சிவகுமார சர்மா" M.A.,L.T.

இவ்வுலகத்தின்கண்ணுள்ள எல்லாத் தேசங்களும், தன் ஜனங்கள் சுயநலம் பாராட்டாதவர்களாயும், தேசாபிமானம் உடையவர்களாயும் இருக்கவேண்டுமென்று விரும்புகின்றன. இந்தியத் தாயும் தன் மக்கள் அவ்வாறே இருக்கவேண்டுமென்று விரும்புகிறாள். ஆனால் தேசாபிமானமும் தேச சேவையுமே பிரதானமெனக் கருதும் பிரஜைகள் பயிற்சினாலேற்படுகின்றனர். இப்பயிற்சியை அளிக்கக்கூடிய இடங்கள் மூன்றாகும்—ஒருவன் பிறந்து வளரும் வீடு, கல்வி பயிலும் பாடசாலை, மதாபிமானத்தை விருத்தி செய்யக்கூடிய கோவில். ஆனால், கிராமங்களிலுள்ள பெற்றோர்களில் வெகு சிலரே இப்பயிற்சியை அளிக்கக் கூடியவராயிருக்கின்றனர். மத உணர்ச்சியினால் தேசாபிமானத்தை அபிவிருத்தி செய்யும் இடங்கள் வெகு குறைவு. ஆகவே இப்பொறுப்பு முழுமையும் பாடசாலைகளே ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியம்.

சென்ற ஆண்டில், இந்தியச் சிறுவர்களில் நூற்றுக்கு 50 விகிதமும், சிறுமிகளில் நூற்றுக்கு 16 விகிதமுமே பள்ளிக்கூடங்களிலிருந்தனர். அதாவது, பள்ளி செல்லக்கூடிய வயதுள்ள சிறுவர் சிறுமிகளில் சுமார் மூன்றிலொருவரே கல்வி பயின்றனர். இதிலும், முதல் வகுப்பில் சேரும் ஆண் பாலரும் பெண் மக்களும் 5 ம் வகுப்புவரை வாசிப்பதில்லை. சிறுவர்களைக் காட்டிலும் சிறுமிகள் அதிசீக்கிரத்தில் படிப்பை நிறுத்திவிடுகின்றனர். ஆரம்ப பாடசாலைகளில் வாசிக்கும் மக்களிற் பெரும்பான்மையார் இரண்டொரு வருஷங்களிலேயே தங்கள் கல்வியை நிறுத்திவிடுகின்றனர். ஆகவே நாம் நம் சிறுவர் சிறுமிகளை இப்பொழுதே தேசத்தின் சிறந்த ஊழியர்களாக பயிற்சிவிக்கவேண்டும். எழுதப் படிக்கத் தெரியவேண்டுவது கூட அவ்வளவு அவசியமான, அவசரமான, காரியமல்ல.

எம்முறைகளினால் அவர்களுக்கு தகுந்த பயிற்சி கொடுக்கலாம் என்று ஆராய்வோம்.

1. ஓர் பிரஜை எவ்விஷயத்திலும் ஆழ்ந்த ஆலோசனை செய்து ஓர் முடிவான தீர்மானத்திற்கு வருகிறான்.

ஒவ்வொரு சமூகக் கூட்டத்திலும், மற்றவரை பின்பற்றுபவர் அதிகம் இருக்கின்றனரே தவிர தாமாக ஓர் காரியத்தை தொடங்குபவரோ ஆலோசிப்பவரோ கிடையாது.



கிராமப் பள்ளிக்கூடங்களில் இக்குறைகளை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம்? பள்ளி உபாத்தியாயர் அவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் தீர ஆலோசித்து பிறகு முடிவான அபிப்ராயத்திற்கு வரும்படி பயிற்சி செய்வதாகும். ஓர் வகுப்பில் இரண்டு படங்களை எடுத்துச்சென்று "இப்படங்களில் எது உங்களுக்கு விருப்பமோ அதை நீங்கள் எடுத்து அநுபவிக்கலாம்," என்று ஒருவன் கூறினால், 100 க்கு அனைவரும் தங்கள் வகுப்பு உபாத்தியாயரின் பதிலை எதிர்பார்ப்பர். ஆயின், அவரை பேசவிடாது, படங்களைக் கூர்ந்து கவனிக்க பிள்ளைகளுக்குப் போதிய அவகாசமளித்து ஒவ்வொரு படத்தின் தாரதம்யத்தை அவர்களையே சொல்லச்சொல்லி பிறகு ஓட் எடுத்துப் பார்த்தால் அடுத்த முறை இம்மாதிரி விஷயங்களில் அவர்கள் வெகு விரைவில் எந்த விஷயத்திலும் முடிவான அபிப்ராயத்திற்கு வரக்கூடியவர்களாயிருப்பர். "அடுத்த சனிக்கிழமை உல்லாசப் பிரயாணம் நாம் போவோம், ஆறு, மலை, அல்லது ஆலை. அல்லது எதற்குப் போவோம் என்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்," என்று நாம் சொல்லியிருந்தால் அடுத்த நாள் அவர்கள் பள்ளிக் கூடத்திற்கு வரும் பொழுது தங்களுக்குள்ளாகவே சரியான தீர்மானத்திற்கு வந்திருப்பார்கள். "நான் ஒரு பென்சில் கண்டெடுத்தேன்; அதை நான் வைத்துக் கொள்ளலாமா; அல்லது பென்சில் இல்லாத நண்பன் ஒருவனுக்கு கொடுக்கலாமா; அல்லது அப்பென்சில் யாருடையதென்று விசாரிக்கலாமா? இவற்றில் எது நியாயமானது?" என்ற பிரச்னையை பிள்ளைகளுக்குள் உண்டாக்கினால அவர்கள் நியா நியாயங்களை தீர ஆலோசித்து நேர்மையான முடிவிற்கு தாங்களாகவே வருவார்கள்.

சில வருஷங்களுக்கு முன் ஓர் பள்ளிக்கூடத்தில் Foot Bal Captain ஒருவனை தேர்ந்தெடுக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. இரண்டு மூன்று பெயர்கள் ஆலோசனைக்கு கொண்டுவரப்பட்டன. அங்கிருந்தோர் அனைவரும் காரணம் ஏதுமின்றி முதற் பெயரையே ஆமோதித்தனர். அவர்களுக்கு யோசனையே கிடையாது. அவ்வாறேயிருந்தால் சமூக வாழ்க்கையில் பிரயோசன மற்றவர்களாவார்கள். அடுத்த முறை பள்ளிக்கூடத் தலைவர் அவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளித்தார். நான்கு பெயர்களை எழுதி அவர்களின் குணாதிசயங்களை விவரித்து, முடிவான அபிப்ராயத்திற்கு மற்றவர்களை எதிர் பார்த்து நிற்பவரை கேலி செய்து **Foot Ball Captain**-ஐ தேர்ந்தெடுக்கச் செய்தார். பிற்கால வாழ்க்கையில் அவர்கள் சமூகத்தில் சிறப்பாய் வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

10 வருஷத்திற்கு முன் அம்மாதிரி ஆரம்பப் பாடசாலை ஒன்றில் ஓர் பையன் படித்துக்கொண்டிருந்தான். அவன் இப்பொழுது **Secondary Grade Trained** உபாத்தியாயராய் இருக்கிறான். அவன் சென்ற வருஷம் எனக்கு எழுதி இருந்த ஓர் கடிதத்தில் "நான் ஓர் இளம் வித

வையை விவாகம் செய்துகொள்வதாய் இருக்கிறேன். சாதகமான காரணங்கள் இவை. ஆக்ஷேபிக்கத்தக்க காரணங்கள் இவை. ஆனால் சாதகமாயிருக்கும் காரணங்கள் அதிகம் என்று எண்ணுகிறேன்." என்று எழுதியிருந்தான். இவ்வாறு காரணங்களைக் காட்டி தன் வகுப்பினர் தன் எண்ணத்தை எதிர்த்த போதிலும் தன் தீர்மானத்தை பின்பற்றி நிற்பது ஓர் சிறந்தகுணமாகும். கிராமப் பள்ளிக்கூடங்களில் சிறந்த முறைகளினால் தங்களுக்குத் தாங்கள் தீர்க்க ஆலோசனை செய்யும்படி பழகியவர்கள் தங்களுக்கும், தங்கள் சமூகத்தாருக்கும் என்றென்றும் உபயோகமாக உள்ளவர்களாக யிருப்பார்கள்.

2. ஓர் நற்குடி தன் சமூகத்தின் ஆரோக்கியத்தை பாதுகாக்கிறான். பிற்காலத்தில் பிரஜையாகும் பள்ளிச் சிறுவன் சமூக ஆரோக்யம் கெடாமலிருக்க செய்யவேண்டியவைகளை அறிந்துகொள்கின்றான். அவன் முன்னோர்கள் சுகாதாரவிதிகளை அலக்ஷியம் செய்பவர்களாயிருந்தாலும் கிராமச் சிறுவன் ஒருவனுக்கு இவைகளை கற்பித்து அவைகளை அவன் பின்பற்ற செய்ய முடியும். ஓர் பள்ளிக்கூடத்தின் கக்கஸ் சுவர் ஒன்றில் "இதை, உனக்கு எவ்வளவு சுத்தமாக யிருக்கவேண்டுமென்று எண்ணுவாயோ அவ்வளவு சுத்தமாக பிறருக்கும் இதைநீ வைத்துவிட்டுப் போகவும்" என்று கண்டிருந்தது. அப்பள்ளிக்கூடத்து ஆசிரியர் ஒருவர் எச்சில் உமிழ்ந்திருந்தால் அதைமண்ணால் மூடுவதுவழக்கம். அதை அப்பள்ளிக்கூடத்து சிறுவர்களும் பின்பற்றலாயினர். வேறொருகிராமத்தில், கிராமக்கிணற்றிற்கு சுவர்இல்லை. அசுத்தம் நிறைந்த ஜலம் கிணற்றிற்குள்ளே ஓடிக்கொண்டே யிருந்தது. அக்கிராமத்திலிருந்த வாலிபச்சங்கம் பெரியோர்களை வற்புறுத்தி கிணற்றைச் சுற்றி சுவர் எழுப்பும்படிசெய்தது. அநேக உதாரணம் இம்மாதிரி கொடுக்கக்கூடும்.

காலரா, பிளேக் முதலிய தொத்துவியாதிகளினால் துன்பங்கள் நேரும்பொழுது நாம் அவைகளை எவ்விதம் தடுத்திருக்கலாம் என்று எண்ணுகிறோம். பள்ளிக்கூடங்களில் இம்மாதிரி வியாதிகளை சிறுவர்களின் உதவியால் தடுக்கலாம் என்பதை யாரும் சிந்தனை செய்யவதில்லை. பல வருஷங்களுக்குமுன்னர் பசுமலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் பிளேக் வந்திருந்தபொழுது எங்களிடத்தில் பிளேக் சிறிதும் அணுகாமல்தடுக்க முடிந்தது. ஏனெனில் சிறுகுழந்தைகள்கூட எங்கள் வாசஸ்தலங்களை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கும் இறந்துகிடந்த பிளேக் எலிகளை கண்டுபிடிப்பதற்கும் உதவிசெய்து தாங்களும் இனாகுலேஷன் செய்து கொண்டார்கள்.

ஓர் இரவு நடுநிசியில் எட்டுவயது சிறுவன் ஒருவன் தான் கண்டெடுத்த ஓர்பிளேக் எலியை தூக்கிக்கொண்டு துணைக்கு தன் தாயாரை அழைத்துவந்தான். பயிற்சி செய்விக்கப்பட்ட சிறுவர்கள் தொத்துவியாதிகளை தடுப்பார்கள்.



இந்த ஜில்லாவில் சில உபாத்தியாயர்களுக்கு குஷ்டரோகம் இருந்தது. இவ்விஷயம் எவருக்கும் தெரியாது. ஆனால் இந்த ரோகமுள்ளவர்கள் பிறரோடு பழகுவதனால் உண்டாகக் கூடிய அபாயம் அதிகம். இவர்கள் குஷ்டஆஸ்பத்திரிக்குபோக மறுத்துவிட்டார்கள். அதேசமயத்தில் திண்டுக்கல் ஆரம்பப் பாடசாலையில் குஷ்டரோகத்தினால் உண்டாகும் தீமைகளைப்பற்றி சொல்லப்பட்டிருந்தது. தெய்வசிகாமணி என்னும் சிறுவன் தன்காலில் ஓர் இடத்தில் நிறம்மாறுவதைக்கண்டு உடனே டாக்டரிடம் காண்பித்தான். அதை அவர்குஷ்டமென்றறிந்து 70 மைல் தூரத்திலுள்ள குஷ்டஆஸ்பத்திரிக்கு அவனை அனுப்புவித்தார். இச்சிறுவன் தனியாக அங்கு 6 மாதமிருந்து தன் வியாதிமுழுவதையும் நீக்கிக்கொண்டு தேக ஆரோக்யத்துடன் வந்துசேர்ந்தான். இச்சிறுவனின் தைரியமும் சுகாதார எண்ணங்களும் பிறரால் பின்பற்றத்தக்கன.

ஈரோடு மாடல் பள்ளிக்கூடத்தில் நாலாம் வகுப்புப் பிள்ளைகள் மருந்து சாமான்களையும், முதல் உதவிக்கு வேண்டியவைகளையும் வைத்துக் கொண்டு பிறருக்கு உதவி செய்ய காத்திருக்கின்றனர். இது ஓர் நற்பயிற்சியாகும்.

3. நற்பிரஜை ஒருவன் சமூகத்திலுள்ள சண்டை சச்சரவுகளை நியாய விரோதமில்லாமல் முடிவு செய்ய உதவுகின்றான். இந்தியாவில் எல்லாக் கிராமங்களிலும் சண்டை, சச்சரவு, விரோதம் முதலியன உண்டு. இதனால் கொலை களவு, வியாஜ்யங்கள் முதலியவை ஏற்படுகின்றன. கிராமச் சிறுவர்களையும், சிறுமிகளையும் இவைகளை தடுக்கும் வழிகளில் பயிற்சி செய்விப்பது சாத்யமா? பள்ளிக்கூடத்தில் இரு சிறுவர்களுக்குள்ளோ, சிறுமிகளுக்குள்ளோ அபிப்ராயபேதம் ஏற்பட்டு சண்டை உண்டாயிற்று என வைத்துக்கொள்ளலாம். அவர்களை தங்கள் வகுப்புகளிலிருந்து பட்சபாதமில்லாத ஐந்துபேர்களை தேர்ந்தெடுக்கச் செய்து அவர்கள் சண்டையைப்பற்றி தீர்மானம் சொல்லச் சொல்லலாம். ஆசிரியரும் ஒவ்வொரு சமயம் தீர்மானம் சொல்வதற்கு உதவ வேண்டியிருக்கும். இம் முறையே கிராமப் பஞ்சாயத்தார்கள் பின்பற்றுவதாகும். ஈரோடு மாடல் பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு வகுப்பும், ஓர் தலைவனை தேர்ந்தெடுக்கிறார்கள். வகுப்பிலுண்டாகும் சண்டைகளை யெல்லாம் அவனே விசாரித்து தீர்மானம் செய்கிறான். இந்த ஜில்லாவில் கோபிநாயகன் பட்டி இவ்விஷயத்தில் சிறந்தது. தலைமை உபாத்தியாயர் தன் சிறுவர்களை மன்னிப்பினாலும், பஞ்சாயத்தாலும் தங்கள் சண்டைகளை தீர்த்துக் கொள்ளும்படி பயிற்சி செய்திருக்கிறார். ஆனால் கிராமத்திலுள்ள பெரியோர்கள் அநேக வருஷங்களாகவே சண்டைக்காரர்களாகவே யிருந்தார்கள். இம்முறையையே வயது வந்த சிறுவர்களோடு பின்பற்றி 3-வருஷகாலத்தில் மாணவ சமூகத்தில் சண்டையில்லாமல் செய்து விட்டார்கள். சமூக வாழ்க்கையில் சமாதானம் ஏற்படுத்துபவர்கள் நீடூழி வாழ்க!

4. கிராம சமூக வாழ்க்கை ஒழுங்காக நடைபெறுவதற்காக ஒவ்வொரு பிரஜையும் உழைக்கிறான். கிராமத்திலுள்ள தெருக்கள், சாக்கடைகள், தபால்காரன், முன்சீப், கர்ணம் இவர்களின் வேலை சரியாக நடக்கின்றனவா என்று பார்த்துக் கொள்கிறான். நம் பள்ளிச் சிறுவனும் அம்மாதிரியே. ஓர் நாள் காலையில் ஆறே வயதுள்ள ஓர் சிறுமி எட்டு மணிக்கே பள்ளிக்கூடம் போவதைக் கண்டேன். இதைக் கண்டு ஆச்சரியப்பட்டு "நீ ஏன் இவ்வளவு சீக்கிரம் பள்ளிக்கூடம் போகிறாய்? உனக்கு பள்ளிக்கூடம் எப்பொழுது ஆரம்பிக்கிறது?" என்று நான் கேட்டேன். "எனக்கு 9-மணிக்குத்தான் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கிறது. ஆனால் நான் கரும் பலகைகளின் அதிகாரி." என்று அவளிடமிருந்து பதில் வந்தது. "கரும் பலகை அதிகாரியா? அவர் வேலை என்ன?" "என்று நான் ஆச்சரியத்துடன் கேட்டேன். "என் வேலை பள்ளிக்கூடத்திலுள்ள எல்லா கரும்பலகைகளும் சுத்தமாயும், தேவையான சாக்குக்கட்டியும், துடைக்கும் துணியும் (Duster) இருக்கிறதா என்று பார்த்துக்கொள்வது" என்று பதில் சொன்னாள். "வேறு உத்யோகஸ்தர்கள் இருக்கிறார்களா?" என்று நான் கேட்டேன் "இருக்கிறார்கள்—புத்தகசாலை, பள்ளிக்கூட வேலைகளை மேற்பார்த்தல், ஒவ்வொன்றிற்கும் அதிகாரிகளிருக்கிறார்கள்" என்று அவள் மறுமொழி கூறினாள். "உங்கள் பள்ளிக்கூடத்தில் முதல் வகுப்பில் எத்தனை பெயர்?" என்று நான் கேட்டேன். "25" "எத்தனை அதிகாரிகள்?" "10 அல்லது 12; ஆனால் ஒவ்வொரு மாதமும் புது அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்." முதல் வகுப்பிலேயே பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு இம்மாதிரி பழக்கப்படுவது சிறுவர்களுக்கு நன்மையை விளைவிக்கும்.

நான் இருந்த வேறொரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் வருவதற்கு சிறிது நேரமானால் சிறுவர்களே பாடங்களைத் தொடங்குகிறார்கள். வேறொரு பள்ளிக்கூடத்தில் குழந்தைகளை அழைத்துவருவதற்காக நியமிக்கப்பட்டிருந்த வேலைக்காரி நின்றுவிட்ட பொழுது மேல் வகுப்பில் படிக்கும் பெண்கள் அவர்களை அழைத்துவர ஒப்புக்கொண்டனர். தோட்டம், காக்ஷிசாலை, சுகாதாரம், இவைகளை மேல் பார்வை பார்த்துக் கொள்வதில் குழந்தைகளுக்கு எவ்வளவு குதூகலம் இருக்கிறதென்பதை நேரே அநுபவித்தவர்களே உணர முடியும். இம்மாதிரி பொறுப்பை ஏற்றுக்கொள்வதில் பழக்கப்பட்ட சிறுவர்கள் வயதடைந்த பிரஜைகளாகும் பொழுது அவர்கள் வசிக்கும் சமூகத்திற்கு ஓர் குறைவுமிராது. உலகெங்கும் புகழ்பெற்ற லிங்கன். (Lincoln), காகவா (Kagawa), ஏசுநாதர் (Jesus) முதலியோர் இம்முறையிலேயே வளர்ந்தவராவார்கள்.

5. தன்னைக் காட்டிலும் குறைந்த கல்வி அறிவு உள்ளவனை அறிவாளியாக்குவதில் நற்பிரஜை உழைக்கிறான். அதாவது ஆடு மாடுகளை போஷித்தல், விதைகளை தேர்ந்தெடுத்தல், உலக செய்திகளை அறிந்துகொள்ளல் முதலியவைகளில் தன் அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து



கொள்வதில் ஒவ்வொருவனும் ஆசிரியனாகின்றான். ஓர் மூன்றாம் வகுப்புக் குழந்தையை ஓர் மனக் கணக்கு பின்வருமாறு கேட்போம்:—"என்னிடம் ஒரு ரூபாய் இருக்கிறது. நீங்கள் அறுவர். உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு அணா கொடுத்தால் என்னிடம் மீதி என்ன இருக்கும்?" வெகு சிலரே இதற்கு சரியான பதில் கூறுவார்கள். அவர்களைக் கணக்குத் தெரியாதவர்களுக்கு விடை அறியும் விதத்தை சொல்லித் தரும்படி விரும்பினால் அவர்கள் தியங்குவார்கள். ஆனால் சிறந்த பள்ளிக்கூடங்களில், கல்வியில் சிறந்த பிள்ளைகள் தங்களைக் காட்டிலும் அறிவில் சிறியவர்களுக்கு பாடம் சொல்லித் தருவது பழக்கத்திலிருந்து வருகிறது. சிறுவர்களுக்கும் இம்முறை சந்தோஷமளிக்கிறது. கணக்கு வகுப்பில் சிறுவர்கள் ஒருவருக்கொருவர் எதிர்முகமாய் நிற்பதும், கணக்கு போட்டு முடித்ததும், படேரென்று பலகைகளை கீழே வைப்பதும் வழக்கத்திலிருந்து வருகிறது. இது மனோ தத்துவ நியாயங்களுக்கு முற்றிலும் விரோதமானது; ஒருவருக்கு ஒருவர் உதவிக்கொள்வது தப்பானதல்ல.

மற்றொரு பள்ளிக்கூடத்தில் சிறந்த முறை கையாளப்பட்டு வருகிறது. நாலாம் வகுப்பில் எழுத்துக்கூட்டல்; "நம் தப்புகளை நாமே திருத்திக்கொள்ள முடியுமா என்று இன்று பார்ப்போம். பெருமாள் (ஓர் சிறுவனின் பெயர்) பத்து வார்த்தைகளை நிதானமாய் உரக்கப்படிக்கட்டும். பிறகு, அவன் அவ்வார்த்தைகளுக்கு சரியாக எழுத்துக் கூட்டுவான். நீங்கள் உங்கள் நோட் புஸ்தகங்களை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ளுங்கள். முடிவில் ஒவ்வொருவரும் எவ்வளவு வார்த்தைகளை தப்பாக எழுதியிருக்கிறார்களென்று பாக்கலாம். பிறகு நவமணி (வேறொரு சிறுவன்) வேறொரு பத்து வார்த்தைகளை சொல்லுவான்." என்று ஆசிரியர் சொல்வதைக் கேட்கிறோம். இதே சமயத்தில் ஆறாம் வகுப்பில் மும்மூவராக ஒன்றுகூடி கணக்குகள் போட்டுக்கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தியாவில் ஆகாய விமான மூலம் தபால் போகும் வழிகளை காட்டும் படமொன்றை தயார் செய்துகொண்டிருந்தனர். இம்முறை எவ்வளவு சிறந்தது! Dr. லாபேக் (Laubach) என்னும் பெரியார் வயதடைந்த ஒருவன் தான் கற்றறிந்த முதல் பாடத்தை தன் நண்பன் ஒருவனுக்கு கற்பித்தால் அப்பாடம் அவன் மனதில் பதிவதோடு கூட சுயநம்பிக்கையும், பரோபகாரச் சிந்தையும் உண்டாகின்றன என்று கூறுகிறார். இதேமாதிரி முறைகளில் பழக்கப்பட்ட கிராமச் சிறுவர்கள் தாழ்த்தப்பட்டவர்களின் ஊழியர்களாய் இருந்தார்கள்.

6. பொது ஜனங்களின் தீர்மானத்தின்படி, சமூக கட்டுக்கு அடங்கி நற்பிரஜை ஒருவன் நடக்கின்றான். ஜனநாயக ஆட்சி இந்தியாவில் பரவிவருகிறது. ஆனால் சமூகத்திலும் தேச ஆட்சியிலும் இம்முறை வெற்றி அடைய வேண்டுமாயின் பள்ளிக்கூடங்களிலேயே ஜன நாயக ஆட்சி முறையின் தத்துவங்களில் சிறுவர்கள் பழக்கப்படவேண்டும். 10, 12 வயதுடைய சிறுவர்களும், முக்யமான விஷயங்களைப்பற்றி விவரமாகப்

பேசி பொது அபிப்பிராயத்தின்படி நடக்கும்படி செய்வது உடனே நம்மால் செய்யத்தகுந்த காரியமாயில்லாதபோதிலும் சில கிராமப் பள்ளிக்கூடங்களில் இம்மாதிரியான பயிற்சி அளிக்கப்படுகிறது. கிராமப் பஞ்சாயத்தார் போலவோ, முனிசிபல் கவுன்சில் போலவே அல்லது ஜில்லா கல்வி சங்கம் போலவே ஒன்றுகூடி அந்தந்த சபைக்கு சம்பந்தமான விஷயங்கள் ஒன்றைக்குறித்து விவாதிக்கச் செய்வது சிறந்த முறையாகும்.

என் சொந்த அநுபவம் ஒன்றை இங்கு குறிப்பிடுகின்றேன்; எனது 12 வது வயதில் கட்குடியைப்பற்றிய விவாதம் ஒன்று எங்களுக்குள் நடந்தது. அந்த விவாதத்தில் ஆகாரம், குடி, முதலியவற்றில் ஒவ்வொரு மனிதனுக்குமிருக்கவேண்டிய சுதந்திரத்தைப்பற்றி வெகு தீவிரத்துடன் நான் பேசினேன். ஆனால் பஞ்சாயத்து அங்கத்தினர்களில் ஒருவர், என்னுடைய சுதந்திரத்தால் சமூகத்திற்கு தீமை ஒன்றும் நேரிடக்கூடாது என்று என்னுடன் விவாதித்து முடிவில் என் அபிப்ராயத்தை மாற்றினார். எங்கள் விவாதம் மற்றவர்களுக்கு புரிந்ததோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் ஜனநாயக ஆட்சி முறையின் வழியை அன்று அறிந்த ஐவரும் உண்மை வழியை பின்பற்றினார்கள் என்பதற்கு சந்தேகமில்லை. இந்திய தேசத்திலுள்ள அநேகம் ஆயிரம் பள்ளிச்சிறுவர்கள் பொதுஜன அபிப்ராயத்தின்படி நடக்கக் கற்றறிந்தார்களானால் வெகுசீக்கிரத்திலேயே இந்தியாவிற்கு சுயராஜ்யம் கிடைக்கும் என்பதற்கு ஐயமில்லை.

7. தான்வசிக்கும் உலகைஅழகு பெறச்செய்வதில் நற்பிரஜை ஒருவன் சந்தோஷமடைகிறான். ஜப்பான் தேசத்தில் மிக்க எளியவர்களின் வீடுகளில்கூட வீட்டை அழகுபெறச்செய்வதற்கு அவர்கள் விரும்புகிறார்கள். இந்தியாவும் கலையறிவில் முன்னேற்றமடைந்து பிரசித்திபெற வேண்டுமானால் இதற்கு அஸ்திவாரம் பள்ளிக்கூடங்களிலேயே கட்டப்படவேண்டும். "சிறந்த தேசபடம் எவன் வரைகிறானோ, சிறந்தவர்ணப்படமொன்றை எவன் ஒருவன் தீட்டுகிறானோ, அழகுநிறைந்துவிளங்கும் ஆடை ஒன்றை எவன் ஒருவன் நெய்கின்றானோ, அவை பள்ளிக்கூடத்தில் நிரந்தரமாக எல்லோரும் காணும் பொருட்டு காக்ஷிசாலையில் வைக்கப்படும்." என்று கூறுவது பிள்ளைகளுக்கு ஓர் தூண்டுகோலாகும். அழகிய படம் ஒன்றை தாமே சட்டம் போட்டுக்கொள்ள எவர்முன்வருகின்றனரோ அவர்களுக்குபடம் அளிப்பது மற்றோர் முறையாகும். பின்கண்ட முறை அநுஷ்டிக்கப்பட்ட ஓர் பள்ளிக்கூடத்தில் கலா ஞானத்தின் பூரண அபிவிருத்தியைக்காட்டும் எண்ணிறந்த படங்கள் ஓர் வகுப்பில் சேர்ந்திருக்கின்றன. பள்ளிக்கூடதோட்டத்தை அழகு நிறைந்த நந்தவனமாக்குவதோ, விசேஷநாட்களில் பள்ளிக்கூடத்தை அலங்கரிப்பதோ, பத்திரிகைகளில்வரும் பலவிதமான படங்களை கத்தரித்து அர்த்தமுள்ள வகையில் ஒட்டுவதோ பிள்ளைகளுக்கு விளையாட்டாக கலாஞானத்தை போதிக்கும்.



147645 சென்னை-600 008.

ஆபர்லின் Oberlin என்பவர் தன் சமூகத்திற்காக உழைத்த பிரான்ஸ் தேசத்துபாதிரி, பஞ்சம், உள்நாட்டுக்கலகம் எதிரிகளின் படையெடுப்பு முதலியபல கஷ்டகாலங்களிலும் நேர்மையானவழியை போதித்தவர். ஒரு சமயம் அநேகமரங்கள் அழிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. ஆகவே அவர் தன்னிடம் மதபோதனைபெற விரும்பிவந்த ஒவ்வொரு சிறுவனும் குறைந்தது இரண்டுமரங்களையாவது தகுந்த இடங்களில் நட்டுவளர்த்தான் என்று அத்தாட்சிப் பத்திரம்ஒன்று கொண்டுவந்தாலொழிய உபதேசம்செய்வதில்லை என்று உறுதிகொண்டார். லிங்கன் என்னும்ஓர் சிறுவன் கல்விபயிலுவதற்கென்றுபள்ளிக்கூடம்சென்ற ஓர் வருஷத்திற்குள்ளேயே "நான் இறந்தபிறகு முட்செடி ஒன்றை பிடுங்கி வாசனை பொருந்திய புஷ்பச்செடி ஒன்றை அதுவளருமென்றுநம்பி முள்செடி இருந்த இடத்தில் நட்டான் என்று என்னை பிறர்சொன்னால்போதும்" என்று சொன்னான்.

8. உபயோகமுள்ள ஏதாவது ஒன்றை நற்குடி ஒருவன் செய்கிறான். பெரும்பாலான மனிதர்கள் வெகு சிலரின் உழைப்பினால் உண்டாக்கப்படும் பொருள்களைக் கொண்டு ஜீவிக்கிறார்கள். அவர்களுக்கு தங்கள் உழைப்பினால் உலகத்திற்கு உபயோகப்படக் கூடிய பொருள் செய்யவேண்டுமென்னும் உணர்ச்சி கிடையாது. இதற்கும் ஆதாரமாயிருக்கக்கூடிய இடம் கிராமப் பள்ளிக்கூடங்களே யாகும். சிறு பிள்ளைகள் கனிமண்ணால் பொம்மை செய்யவும், பிறகு அவைகளுக்கு வர்ணம் தீட்டவும் செய்யக்கூடும். புஸ்தகங்கள் எடுத்துச் செல்லும் பை; பென்சில், பலப்பங்களை வைக்க காகிதப் பெட்டி; கூடை; துணிப்பந்தும் அட்டையினால் செய்த தடுப்பும், இவை போன்ற அநேகம் சிறு வஸ்துக்களை சிறுவர்களும் செய்யலாம். இவை முற்றிலும் திருத்தமாகச் செய்யப்பட வேண்டும். இம்முறையினால் சிறு குழந்தைகளுக்கும் கூட தாமே தனியாக இதைசெய்துமுடித்தோம் என்ற எண்ணத்தினால் மனத் திருப்தியும் பிறரால் செய்யப்பட்ட வஸ்துக்களின் அருமையும் தெரிகிறது.

சில வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் தொழிலாளக் கட்சியினர் ரஷிய தேசத்தில் பள்ளிக்கூடங்களுக்கும், தொழிலுக்கும் உள்ள சம்பந்தத்தை தீர அறிவதற்காக ஓர் கமிட்டி அனுப்பினர். அவர்கள் ஓர் கிராமப் பள்ளிக்கூடத்தில் பின்வருமாறு சுவற்றில் எழுதியிருப்பதைக கண்டு ஆச்சரியமுற்றனர். "குடியானவன் உழைப்பினால் உண்டாகும் கோதுமை பால் முதலியவைகளை நாங்கள் பிரதி உழைப்பில்லாமல் சாப்பிடுவதில்லை. அவன் மேஜோடுகளை தைத்தும், குழந்தைகளுக்கு ஆடைகள் தைத்தும் கொடுக்கிறோம்."

சென்ற வருஷம் பசுமலை ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயர் தன் பள்ளிக்கூடத்தில் படிக்கும் ஒவ்வொரு சிறுவனும் ஏதாவது ஒரு கைத்தொழிலை அறிந்தவனாயிருக்கச்செய்ய உறுதியான எண்ணம்கொண்டார்.

அவர் தம் பிள்ளைகளை நோக்கி "பள்ளிவேலை முடிந்த பிறகு வாரத்தில் மூன்று நாள் விளையாடுவோம். மூன்று நாள் உபயோகப்படக்கூடிய கைத்தொழில் ஏதாவது பயிலுவோம்,—தையல் வேலை, புத்தகம் தைத்தல், தச்சவேலை, பாய் முடைதல், பண்ணை வேலை, படம் பிடித்தல், கம்பியில்லாத் தந்தி முதலியவைகளில் ஏதாவது ஒன்றை ஒவ்வொரு சிறுவனும் அறிந்துகொள்ள வேண்டும்," என்று கூறினார். ஆட்சேபித்தவர் சிலர்; குதூகலத்துடன் இதில் கலந்துகொண்டவர் அநேகர். இவ்வருஷம் மிகச் சிறுவர்கள் கூட கைவேலை ஏதாவது செய்ய ஏற்பாடாயிருக்கிறது, ஆறும் வகுப்பும், அதற்கு மேல்பட்டவர்களும் காலை 6½ மணிமுதல் 8½ மணி வரையிலாவது 8½ மணி முதல் 10 மணி வரையிலாவது ஏதாவது ஒரு கைத்தொழிலை கட்டாயம் கற்கவேண்டும். இதனால் கைத்தொழிலில் உயர்ந்த அறிவாளிகளாக அவர்கள் விளங்குவார்கள் என்று சொல்ல முடியாது. ஆயினும் பசுமலையில் இம்மாதிரி பயின்றவர்களுக்கு ஒவ்வொரு கைத்தொழிலிலும் சிறிது அறிவாவது இருக்கும். இதுடன் அவர்கள் செய்யும் வேலைக்குத் தகுந்த ஊதியமும் கிடைக்கிறது.

ஸ்ரீமான் தீசன் (Thiessen) என்பார் Mauhadih என்னும் ஊரிலுள்ள தன் கிராமப் பள்ளிக்கூடத்தில் மேற்சொன்ன அனுபவத்தை ஊர்ஜிதப்படுத்தி Christian Education என்னும் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்; அப்பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள் எல்லோரும் பரீக்ஷையில் தேறிக் கொண்டிருந்தார்களே ஒழிய வேறொன்றும் அறிந்தவரில்லை. பெற்றோரும் பள்ளிக்கூடத்திலிருந்த உபாத்தியாயர்களும் ஒருவிதமான மாறுதலையும் விரும்பவில்லை. ஆனால் புதிதாக தலைமை ஆசிரியராக வந்தவர் இவ்வழக்கத்தை மாற்ற ஆரம்பித்தார். பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த ஹாஸ்டலிலிருக்கும் ஒவ்வொரு மாணவனும் தன் துணிகளை தானே தோய்த்து உலர்த்தி கட்ட வேண்டுமென்று வற்புறுத்தினார். பிறகு நெசவுக்காரன் ஒருவனை வரவழைத்து ஆடைகள் நெய்யும் விதத்தை காண்பித்தார். பள்ளிக்கூட தச்சனை வரவழைத்து தச்சஆயுதங்களின் உபயோகத்தை விளக்கினார். பையன்களுக்கு முதலில் இதில் சிறிதும் விருப்பமில்லை. ஆயினும் தலைமை ஆசிரியரின் கோபத்திற்கு பயந்து அரைமனதுடன் இவைகளை பழகினார்கள். சிறிது காலத்தில் நெசவுத் தொழிலிலும் தச்ச வேலையிலும் திறமை வரவும் அவர்கள் ஊக்கம் அதிகரித்து நிர்ப்பந்தமில்லாமல் தாமே வரத் தொடங்கினார்கள். தையல் வேலை எல்லோருக்கும் பிடித்ததாயிருந்தது கிருஷித் தொழிலும், கூடை முடைவதும் வெகு சீக்கிரத்தில் சேர்க்கப்பட்டன. சர்க்கார் உத்யோகஸ்தர்களும் இதில் ஊக்கம் காட்டினார்கள். இவ்வேலைக்காக வருஷத்திற்கு 100 ரூபாய்களே கொடுக்கப்பட்டு வந்தன. பண நெருக்கடி ஏற்பட்டபொழுது இத்தொழில்களை நிறுத்திவிடுவார்களென்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் மிஷன் அதிகாரிகள் இவ்வேலையை நிறுத்தக் கூடாதென்று பணம் அளித்து உதவி செய்தனர். ஆரம்பப் பாடசாலை



யில் படிக்கும் பிள்ளைகள் 6 அல்லது 8 மணி நேரம் ஊக்கத்துடன் படிக்க முடியுமென்று தலைமை ஆசிரியர் இருந்தார். அவ்வாறு அவர்கள் எல்லாரும் படித்தால் கைவேலை செய்வதற்கும், விளையாடுவதற்கும் போதுமான அவகாசம் கிடைக்கும் "வேலை செய்தல் ஓர் உரிமையாகும்," என்கிற நீதியையும் அவர்கள் உணர்ந்தவர்களாயிருந்தார்கள்.

9. தன் ஓய்வு நேரத்தை மனதிற்கு நிம்மதியையும் சந்தோஷத்தையும் அளிக்கக் கூடிய வழிகளில் ஓர் பிரஜை செலவழிக்கின்றான். தற்காலம் கிராம வாசிகள் தங்கள் ஓய்வு நேரங்களை வீண் வார்த்தை பேசுவதிலும், ஊர்வம்பு அளப்பதிலும், சூதாட்டம், குடி, சண்டை, முதலியவைகளிலும் போக்குகிறார்கள். இவர்கள் குழந்தைகளும் இப்பொழுதே சீர்திருத்தப்படாவிட்டால் பெரியவர்களாகும்போது இவர்களைப்போல் இருப்பார்கள் அல்லவா?

சிறந்த கிராமம் ஒன்றில் மாலை வேளைகளில் பலவிதமான பந்து விளையாட்டுகளில் கலந்துகொள்ள வாலிபர் அநேகர் வருகின்றனர். மதுரைக்கு அடுத்த ஓர் கிராமத்தில் 25 வாலிபர்கள் நாள் முழுவதும் நெற்றி வியர்வை நிலத்தில் விழ கரிமுட்டைகளை தள்ளி மாலை 5½ மணிக்கு வீட்டுக்கு வருகின்றனர். Y. M. C. A. வால் நடத்தப்படும் இரவுப் பள்ளிக் கூடத்திற்கு சென்று கட்குடியில் விழாமல் சிலரே தப்புகின்றனர். அநேகர் கள்ளுக்கடையை தேடிச் செல்கின்றனர். சமீபகாலத்தில் பொது ஜனங்களிடமிருந்து பண வசூல் செய்து Volley Ball Court ஒன்று ஏற்படுத்தினர். அன்றுமுதல் அவர்கள் கள்ளுக்கடைக்குச் செல்லும் வழக்கம் குறைந்திருக்கிறது. இவர்களின் சந்ததியார்கள் பள்ளிக்கூட விளையாட்டுகளில் ஈடுபட்டு கள்ளரக்கனின் வலையில் விழாமலிருப்பார்கள் என்பது நிச்சயம்.

பள்ளிக்கூட புத்தகாலயத்தில் ஊக்கமளிக்கக்கூடிய சுவாரஸ்யமான புத்தகங்கள் இருந்தால் சிறுவர்கள் ஆவலுடன் அவைகளை வாங்கிப் படிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. தற்கால உலக நடவடிக்கைகளைப்பற்றி கூட்டங்கள் அடிக்கடி சேர்ந்தால் விலைமலிந்த பத்திரிகைகளை சிறுவர்கள் வாங்கி மற்றவர்களுக்கும் அறிவூட்டுவார்கள். சிறந்த நாடகங்கள், பஜனைகள், உல்லாசப் பிரயாணங்கள், சிறுவர், சிறுமிகளுக்கு சாரண இயக்கங்கள் முதலியவை பிள்ளைகளுக்கு சிறந்த வழியில் பொழுது போக்கச் செய்யும்.

புது இங்கிலாந்தில் ஆடை செய்பவர்கள் வேலை செய்ய மறுத்தபோது அநேக யுவதிகள் வைத்திருந்த கொடிகளில் "எங்களுக்கு ஆகாரத்தோடு ரோஜா புஷ்பங்களும் வேண்டும்" என்று எழுதப்பட்டிருந்தது. அமெரிக்க தொழில் முதலாளி ஒருவர் ருஷிய தேசத்துக்கு சென்றிருந்தபொழுது "உங்கள் தொழிற்சாலைகளில் கணக்கிலடங்கா யந்திரங்கள் செய்யப்படுகின்றன. அதனால் வெகு சீக்கிரத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும்" என்று கூறினார். அதற்கு பதில் "அப்பொழுது

நாங்கள் Pianoக்கள் செய்வோம்" என்று தொழிலாளிகள் கூறினார்கள். ஆனைமலையான்பட்டி என்பது மலையடிவாரத்திலுள்ள ஓர் கிராமம். அக்கிராமத்திலுள்ள 12 முதல் 25 வயது வரையில் உள்ள சுமார் 30 ஸ்திரீகளும் பெண்களும் மலைச் சரிவுகளில் ஏறிச் சென்று மரச்சுள்ளிகள் வெட்டி, விறகுச் சுமையை அநேகம் மைல்கள் தூக்கிச்சென்று 3 அல்லது 4 அணாவிற்கே விற்கிறார்கள். இருட்டிய பிறகே தங்களுக்கு வேண்டிய உணவுப் பண்டங்களை வாங்கி கிராமத்திற்கு திரும்புகிறார்கள். ஆனாலும் சாப்பிட்டபிறகு தங்கள் தேக சிரமத்தை கவனியாது. இரவுப் பள்ளிக்கூடத்திற்கு சென்று கல்வி கற்கிறார்கள். சில நாட்களுக்கு முன் அவர்கள் 10 மைல்களுக்கு அப்பால் நடந்த ஓர் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு தாங்கள் கடவுளுக்கென கொண்டுவந்திருந்த வஸ்துக்களை ஆராதனைசெய்து சந்தோஷப்பட்டார்கள். அச்சமயத்தில் விறகுச்சுமை தூக்கிச் சென்றதால் ஏற்பட்ட சிரமத்தை சிறிதும் உணரவில்லை. மனதில் சந்தோஷமே குடிகொண்டிருந்தது. ஆகவே ஓய்வு நேரத்தை குதூகலத்துடன் செலவழிக்க தகுந்த ஏற்பாடுகளை பள்ளிக்கூடங்களிலேயே செய்ய வேண்டும்.

10. கடவுளிடத்திலும் பிற மனிதர்களிடத்தும் நற்பிறஜையாயுள்ளவன் அன்பு பாராட்டுகிறான். கடவுள் பக்தியும் பிறரிடத்தில் சகோதர வாஞ்சையும் இல்லாத மனிதன் மிருகத்திலும் கேடுகெட்டவனாகின்றான். அவன் செய்யும் காரியங்கள் அரிய தொண்டாயினும் நிஷ்பிரயோஜனமாகின்றன. கிராமப் பள்ளிக்கூடத்திலிருக்கும் பள்ளிச்சிறுவன் சர்வ வல்லமையுள்ள கடவுளின் பரந்த அன்பையும், கருணையையும் அறிய வேண்டும். தாய், தகப்பன், குரு, நண்பன் இவர்கள் அன்பிலிருந்து கடவுளின் அன்பை அவன் அறியலாம். இம்மாதிரி நேர்மையான பழக்க வழக்கங்களில் பயிற்சி செய்விக்கப்பட்ட ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் தாங்கள் வசிக்கும் இடத்தையும் தம்மோடுவாழும் ஜனங்களையும் இந்திய தேசத்தையும் கடவுளின் கிருபையால் சிறந்ததாகச் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

(L. LORBBEER)

# தமிழ்ச் செய்யுள் கற்பிக்கும் முறை

M. இராமகிருஷ்ண பிள்ளை

உதவி ஆசிரியர், கவர்மெண்ட் டிரெயினிங் ஸ்கூல், சென்னை.

(14-8-1937-ல் சென்னை திருவல்லிக்கேணி ஆரம்பப் பாடசாலைகளின் ஆசிரியர் சங்கத்தில் நிகழ்த்தப்பட்ட விரிவுரையின் சாராம்சம்.)

ஆரம்பப் பாடசாலைகளில் இரண்டாவது வகுப்புத் தொடங்கி எட்டாவது வகுப்பு வரையில் தமிழ்ச் செய்யுள் கற்பிக்கும் முறையைப் பற்றியச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தமிழ் மொழியின் பெருமை

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்
துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி
இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா
ளமும்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல
ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து
சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே"

தமிழ்மொழி வெகு காலமாய் வழங்குவது - தமிழானது மிகவும் பழைய மொழிகளில் ஒன்றாகும் - கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவு இவைகள் தமிழ் மொழியினின்றும் பிறந்தவை - பழைய மொழிகளில் சில உலக வழக்கத்திலில்லாமல் மறைந்தனபோல் தமிழ் மொழி மறையாமல் இன்றும் அது பேச்சு வழக்கில் இருக்கிறது. என்றும் அழியா நிலைமை பெற்றுள்ளது.

## தாய்ப் பாஷையைக் கற்பிப்பதின் நோக்கம்

இவ்வளவு சிறப்பு வாய்ந்த தாய்ப்பாஷையாகிய தமிழைப் பிள்ளைகட்குக் கற்பிப்பதின் நோக்கம் என்ன எனில், பிள்ளைகள், பிறர் சொல்லுவதை அறிந்து கொள்வதற்கும், பிறர் எழுதியவற்றைப் படிப்பதற்கும்,

தாம் கற்றதும் கேட்டதுமாகிய விஷயங்களைப் பிழையின்றி பேசுவதற்கும், பொருள் தெரியும்படி எழுதுவதற்கும் தாய்ப்பாஷையைக் கற்பிக்கின்றோம்.

### தாய்ப் பாஷை சம்பந்தமாய்க் கற்பிக்கவேண்டிய பாடங்கள்

மேற்கண்ட நோக்கங்கள் நிறைவேறுவதற்கு தாய்ப்பாஷை சம்பந்தமாய்க் கற்பிக்க வேண்டிய பாடங்களாவன.

(1) வாசகம், 2. செய்யுள், 3. வியாசம், 4. இலக்கணம், 5. கடிதம் எழுதுதல், 6. கையெழுத்து வாசித்தல், 7. மௌன வாசிப்பு. இந்த ஏழு பிரிவுகளையும், 1. பேசுவது, 2. படிப்பது, 3. எழுதுவது என மூன்று பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

### செய்யுள் பாடம் கற்பிப்பதால் ஏற்படும் நன்மைகள்

மேற்கண்ட ஏழு பாடங்களுள் ஒன்றாகிய செய்யுள் பாடத்தைப் பிள்ளைகட்குக் கற்பிப்பதினால் ஏற்படும் நன்மைகளாவன.

1. ஞாபகசக்தியும் கற்பனைசக்தியும் விருத்தியாகிறது. 2. ராகப் பயிற்சி ஏற்படுகின்றது. 3. இலக்கியத்தில் சுவையை உண்டாக்கி அநேக நூல்களைப் படிப்பதற்கு ஆசை ஏற்படுகிறது. 4. புதிய வார்த்தைகளின் பிரயோகம் தெரிவதால் பாஷையில் ஞானம் உண்டாகிறது. 5. நல்ல வியாசங்கள் எழுதுவதற்கு முன் மாதிரியாக இருக்கிறது. 6. கல்வியையும் ஒழுக்கத்தையும் சீர்ப்படுத்துகிறது. சுருங்கச்,சொன்னால் கருங்கல்லை ஓர் உளியானது எப்படி அழகான உருவம் ஆக்குகிறதோ அதைப்போல நல்ல செய்யுளானது மனதைக் கல்வியிலும் ஒழுக்கத்திலும் திருத்தமடையச் செய்கிறது. பரிசனவேதி பட்டமாத்திரத்தில் இரும்பு பொன்னாகிறதுபோல நல்ல கல்விகள் வாடை வீசின மாத்திரத்திலேயே புல்லொழுக்கம் அறவே நீங்கி நல்லொழுக்கமும் உண்டாகின்றன

### மாணவர் அறிவொழுக்கம்பெற உதவி செய்யக் கூடியவர் தமிழ் கற்பிற்கும் ஆசிரியரே

எல்லா நூல்களைப் படிப்பதாலும் அறிவு சேர்க்கை ஏற்படுகின்றது. இந்த அறிவு சேர்க்கைக்கு சிறப்புண்டாக்குவது நல்லொழுக்கம். அறிவும் ஒழுக்கமும் சேர்ந்ததே கல்வியாகின்றது. மனத்தில் உணர்ச்சி எழுப்பக்கூடிய வலிமை தாய்மொழிக்கு இருப்பதுபோல் பிறமொழிகளுக்கில்லை. தாய் மொழியில் உள்ள நீதிவாக்கியங்கள் நமது மனதைக் கவர்வது போல் பிறமொழி நீதி வாக்கியங்கள் கவர்வதில்லை. எனவே மாணவர் அறிவொழுக்கம் பெற உதவி செய்யக்கூடியவர் தமிழ் கற்பிக்கும் ஆசிரியரே. இவ்வுண்மையை திருவாளர் மைகேல் உவெஸ்தார் (Mr. Michael West) என்ற ஆங்கிலப் போசிரியரே எடுத்துச் சொல்லியுள்ளார்.



### செய்யுளின் பிரிவுகள்

மாணவர்களுடைய அறிவொழுக்கத்திற்கு ஆதாரமாயுள்ள செய்யுளைக் கற்பிக்கும் பிரிவுகளைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். பிள்ளைகட்குக் கற்பிக்கவேண்டிய செய்யுள்களை யெல்லாம் மூன்று பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ளலாம். அதாவது 1. உலகநீதி, ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, ஆகிய நீதி வரிகள். இவ்வரிகளைக் கருத்தையொட்டிப் பல பிரிவுகளாகப் பிரித்துப் போதிப்பது. உலகநீதி வரிகளை a. மறக்கக்கூடாதவை. b. பேசக்கூடாதவை. c. சொல்லக்கூடாதவை எனப் பிரித்துப் போதித்தல் நல்லது. 2. அபிநயப் பாட்டுக்கள், கூடுமானால் நாடகத்துடன் சேர்த்துக்கொள்வது. இவைகள் பிள்ளைகளின் மனப்போக்கை நல்வழிப்படுத்தக் கூடியதாய் இருக்கவேண்டும். 3. முறைமையில் அமைக்கப்பட்ட செய்யுள்கள். வெண்பா, விருத்தம், அகவற்பா.

### செய்யுள் கற்பிக்கும் முறை (5 வகுப்பு வரையில்)

ஆரம்பத்தில் பிள்ளைகட்குப் போதிக்கப்படுகிற செய்யுள்கள் எல்லாம் கதை, இயற்கை வஸ்துக்கள், சரித்திரம் இவைகளை யொட்டினதாய் தெரிந்தெடுத்துப் போதிப்பது நல்லது. எந்தச் செய்யுளாயினும், முதலில் செய்யுளில் அடங்கியுள்ள விஷயத்தைப்பற்றிப் பிள்ளைகளோடு சம்பாஷிப்பது. 2. உபாத்தியாயர் செய்யுளை மாதிரியாக வாசித்துக் காட்டுவது. 3. பிள்ளைகள் செய்யுளை வாசிப்பது. 4. கடின பதங்கட்கு அர்த்தம் கற்பிப்பது. 5. கடின பதங்களை வேறு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுவது. 6. கருத்தை விளக்குவது· 7. செய்யுளை ராகத்தோடு வாசிப்பதும் மனப்பாடம் பண்ணுவதும், மேற் கண்டவைகளை பின்வரும் செய்யுள் மூலமாக விளக்குவோம்.

### எல்லாம் தெய்வச் செயல்

கரியொரு திங்களாறும் கானவன் மூன்றுநாளும்
இரிதலை புற்று நாகம் இரண்டுநாள் இரையாமென்றே
விரிதலை வேடன் கையின் விற்குதை நரம்பைக்கௌவி
நரியனார் பட்டபாடு நாளைநாம் படவே நிற்போம்.

1. செய்யுளின் பொருளை அறிவது.

ஒரு வேடன் காட்டில் ஓர் யானையின்மீது அம்பு எய்து கொல்லும்போது அவனை ஓர் பாம்பு கடிக்க அவன் அப் பாம்பையும் அம்பு எய்து கொன்று விஷம் தலைக் கேறினதால் தானும் கீழே விழுந்து இறந்தான். அந்த சமயத்தில் அவ்வழியே வந்த நரியொன்று யானை 6 மாதத்திற்கும், மனிதன் மூன்றுநாளைக்கும், பாம்பு இரண்டு நாளைக்கும் உணவாகும் என்று நினைத்துத் தனக்கு அன்றையதினம் விரத தினமாய் இருப்பதால்

மாமிசம் புசிக்காமல் புல்லைக் கடித்து வரும்போது வேடன் கையில் இருந்த வில்லின் நாணைக் கடிக்கவே நாணில் பூட்டப்பட்டிருந்த அம்பு நரியின் தலையில் ஏறி நரியின் தலை இரண்டு துண்டாய்ப் போய்விட்டது.

மேற்கண்ட விஷயங்களை மேற்கண்ட படங்களின் உதவியைக் கொண்டு பிள்ளைகள் அறியும்படிச் செய்வது.

2. உபாத்தியாயர் செய்யுளை மாதிரியாக வாசித்துக் காட்டுவது.

இதில் உபாத்தியாயர் செய்யுளைப் பதம்பிரித்து கருத்து விளங்கும்படியாக நிறுத்தி, வார்த்தைகளைச் சரியாக உச்சரித்து ராகத்தோடுப் படித்துக் காட்டவேண்டும்.

3. பிள்ளைகள் செய்யுளை வாசித்தல்

பிள்ளைகள் செய்யுளை வாசிக்கும்போது வார்த்தைகளின் உச்சரிப்பையும், பதம்பிரித்துப் படிப்பதையும், நிறுத்து மிடங்களையும் பிள்ளைகள் கவனிக்கும்படிச் செய்வது உபாத்தியாயர் கடமை.

4. கடினபதங்கட்கு அர்த்தம் கற்பித்தல்

கரி - யானை, திங்கள் - மாதம், கானவன் - வேடன், இரிதலை - பெரியதலை, இரை - ஆகாரம், விற்குதை - வில்லில் உள்ள, நரியனுர் - நரி. இதில் பதங்கட்குரிய அர்த்தங்களை உபாத்தியாயர் தாமே சொல்லாமல் பிள்ளைகட்கு ஏற்கனவே தெரிந்த கதை மூலமாகவும் படத்தின் மூலமாகவும் கடினபதங்கட்குரிய அர்த்தத்தைத் தக்க கேள்விகள் மூலமாய் வரவழைத்து கரும்பலகையில் எழுதுவது.

5. கடினபதங்களை வாக்கியத்தில் அமைத்துக்காட்டுவது

இவ்வாறு கடினபதங்கட்கு அர்த்தம் கற்பித்தபிறகு கடினபதங்களை வாக்கியத்தில் அமைத்துக்காட்டுவது அவசியம். உதாரணம் :-மிருகங்களில் கரி பெரியது, கரிக்கு தும்பிக்கைஉண்டு, 12 திங்கள் கொண்டது 1 வருஷம், 1 திங்களுக்கு 30 நாள், கானவன் காட்டில் இருப்பான் பூனைக்கு இரை எலி. இம்மாதிரியான வாக்கியங்கள் பலவற்றைப் பிள்ளைகட்கு எழுதிக்காட்டி வார்த்தைகளின் அர்த்தத்தைப் பிள்ளைகள் மனதில் பதியவைப்பது அவசியம்.

6. கருத்தை விளக்குவது

கடினபதங்களை வாக்கியத்தில் அமைத்துக் காட்டியபிறகு செய்யுளில் அடங்கியுள்ள சிக்கலான கருத்தை விளக்கிக் காட்டுவது அவசியம். அதாவது "எல்லாம் தெய்வச் செயல்" என்ற கருத்தை விளக்குவதற்கு வேடனும் புறவும் என்ற கதையைச் சொல்வது அல்லது அதைப்போன்ற வேறுகதைகளைச்சொல்லி, மக்களுடைய பிரயத்தனம் இல்லாமலும் மக்க



ளுக்குத் தெரியாமல் நடைபெறுகிற காரியங்கள்யாவும் தெய்வச்செயலாலேயே என்பதை விளக்குவது.

7. செய்யுளை ராகத்தோடு வாசிப்பதும் மனப்பாடம்பண்ணுவதும்

செய்யுளில் அடங்கியுள்ள கருத்துக்களும் கடினபதங்கட்குரிய அர்த்தமும் நன்றாய்த் தெரிந்தபிறகு செய்யுளை ராகத்தோடு வாசிக்கச் செய்வதும் பிறகு மனப்பாடம் செய்விப்பதும் நலம். இனி 6 வது 7வது 8 வது வகுப்புகட்குச் செய்யுள் போதிக்கவேண்டியிருந்தால் மேற்கண்ட முறைகளை அனுசரிப்பதோடு அடியிற்கண்டவைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதாவது செய்யுளை இயற்றிய

1. நூலாசிரியரன் வரலாற்றைச் சொல்வது

இதனால் கவிகளின் குணங்களைப்பிள்ளைகள் அறிந்துகொள்வார்கள்.

2. செய்யுளின் பொருளைக்கூறுவது

இதைப்பற்றிமேலே விளக்கப்பட்டிருக்கிறது.

3. செய்யுளை உபாத்தியாயர் இசையுடன் பாடுவது

இதில்கருத்து விளங்கும்படியாகப் பாடுவதுமுக்கியம். தாளத்திற்காகப் பாட்டை பதச்சேதம் செய்யக்கூடாது? "தோடுடைய செவியின் விடையேறி" என்பதை தோ - டுடைய எனப்பிரித்துப்பாடுவது தாளத்திற்காக—நமக்குத்தாளம் முக்கியம் அல்ல. கருத்துமுக்கியம். இசையோடு படிக்கவேண்டுமென்று சொன்னால் அதற்காகப் பாட்டுக் கச்சேரி வைக்க வேண்டியதில்லை.

4. மாணவர் படிப்பது

இதைப்பற்றி முன்னமேயே விளக்கப்பட்டிருக்கிறது.

5. அந்வயம் சொல்லுவது

இதுவிஷயமாய்க் கவனிக்கவேண்டியவைகள். 1. விளிச்சொற்களை முன்னேவைப்பது. 2. உவமானம், உபமேயம் இவற்றை முறையில் வைப்பது. 3. சந்திகளைப்பிரித்து பதங்களைத் தனிமையாய் எடுத்துக் காட்டுவது உதாரணம் :—

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவால் பொங்குங்கடல்.

பொன்செய் அதிர்வளையாய் ! கடல்அழல் கதிரால் பொங்காது, தண் என் கதிர்வரவால் பொங்கும்,

இருநீர் வியன் உலகம்என்றும் இன்சொல்லால்
அன்றி வன் சொல்லால் மகிழாது.

6. பதத்திற்குப் பொருள் கற்பிப்பது

இதுவிஷயமாய் கவனிக்கவேண்டியவைகள் :- 1. அடைமொழிக்குப் பொருள்கூறுவது, 2. அந்வயம் செய்தமுறையிலேயே பொருள்கூறுவது, எல்லாப் பதத்திற்கும் பொருள் கூறுவது.

7. உவமானம் உபமேயங்களை விளக்குவது

8. செய்யுளில் அடங்கியுள்ள கருத்தைவிளக்குவது

இதுவிஷயமாய்க் கவனிக்கவேண்டியவை 1. செய்யுளின் பகுதிகளில் கிளைக்கதைகள் அடங்கியிருந்தால் அவற்றைச் சொல்வது அல்லது 2. சிக்கலான கருத்தை விளக்குவது. நாம் எடுத்துக்கொண்ட பாட்டில் உள்ள சிக்கலான கருத்து என்னவெனில், கடல் பொங்குவதற்குக் காரணம் என்ன என்பதேயாம்.

கடல் பொங்குவதற்குக் காரணம்

பூமி, சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் ஆகிய இவற்றிற்கெல்லாம் ஒன்றையொன்று இழுக்கும் சக்தி உண்டு. அச்சக்தி அவைகள் தாம் இருக்கும் தூரத்திற்குத் தக்கபடி மாறுபடும். பூமிக்கு வெகு அருகில் இருக்கும் சந்திரனது இழுக்கும் சக்தியால் பூமி இழுக்கப்படுகிறது. பூமியில் உள்ள நிலப்பாகத்தைவிட நீர்ப்பாகம் எளிதில் இழுக்கப்படுவதால் கடல் பொங்குகிறது. சந்திரன் பூமியைச் சுற்றி வருவதால் அது பூமியைச் சுற்றி நெருங்கிச் செல்லும் இடங்களிலெல்லாம் கடல் பொங்கிக் கொண்டிருக்கும். இவ்விஷயத்தைப் படங்கள் மூலமாயும் உருவங்கள் மூலமாயும் பிள்ளைகளை கவனிக்கச் செய்து கற்பிப்பது (9) பொருளையும் கருத்தையும் பிள்ளைகளிடமிருந்து வரவழைப்பது (10) சிறப்புரைகள் இருந்தால் அவைகளைச் சொல்வது (11) செய்யுளை ராகத்தோடு படித்துப் பிறகு மனப்பாடம் செய்விப்பது.

பயிற்சி

இந்த முறையில் செய்யுளை போதித்தான பிறகு பிள்ளைகள் தாம் பெறும் அறிவை அவ்வப்பொழுது தமது அநுபவத்தில் ஈடுபடுத்தி விடுவதால் பிள்ளைகட்கு அதில் ஒரு சந்தேகமும் ஏற்படாது. அதற்காக நாம் பிள்ளைகட்கு பயிற்சி அளிக்கவேண்டும். பயிற்சிகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம். 1. பேச்சுப் பயிச்சி, 2. படிப்புப் பயிற்சி, 3. எழுத்துப் பயிற்சி 4. இலக்கணப் பயிற்சி ஆகிய பயிற்சிகளில் ஒவ்வொன்றையும் ஒரே சமயத்தில் தான் கவனிக்கவேண்டுமென்பதில்லை. இயன்றவரையில் சமயம் வாய்க்கும்பொழுதெல்லாம் ஒவ்வொரு வகையிலும் பயிற்சி கொடுத்து வருவது நலம்.

*All Rights Reserved*

ஆவணக்காப்பக
14765
சென்னை-600 008.

# வேங்கடன் பட்டி கிராமப் படிப்பு முறை

கே. ஸீ. வீரராகவையர் எம். ஏ., எல். டி.

வேங்கடன் பட்டி என்பது தென்பாண்டி நாட்டில் ஒரு சிறு கிராமம். அதில் பார்ப்பனர் சேரி கிடையாது. ஆனால் அது "ஆடுசா பட்டி" போன்றது மன்று. ஏறக்குறைய நூறு குடிசைகளும் சில காறைக்கட்டிட வீடுகளுமுண்டு; ஜனத்தொகை 617; அதில் ஆண்கள் 300; பெண்கள் 317. அக்கிராமத்தில் தெருக்களில் விளக்குக் கிடையாது; குப்பை கூளங்கள், மற்றக் கிராமங்களில் போலவே, மலிந்து கிடக்கும். கக்கூசுகள் கிடையாது; மலங்கள் மறைவதற்கு சில குறவர்கள் வளர்க்கும் பன்றிகளின் தயவையே எதிர்பார்த்திருந்தனர். வழக்கம்போல, ஜலக்கஷ்டமும் உண்டு; தெருவுக்கு ஒரு கிணறு, யார் செய்த புண்ணியத்தாலோ, இருந்தபோதிலும், கோடைக்காலங்களில் அவைகளில் ஜலத்தைக் காண்பது அரிதாகிவிடும்.

எந்தக் காரணத்தினாலோ வேங்கடன்பட்டியில் கிருஸ்துவப் பாதிரிமார்கள் நுழையவில்லை; ஆதலின் அங்கு மாதா கோயிலுங் கிடையாது, பள்ளிக்கூடமும் கிடையாது. ஆனால் சில "மாடன் கோயில்'களும், ஒரு பிள்ளையார் கோயிலுமுண்டு. அக்கிராமத்தில் வசித்த ஆண்டான் கவிராயர் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்திவந்தார். அவர்' தனக்குத் தெரிந்த நீதி வாக்கியங்களையும், "குள்ளப் பெருக்கம், தானப் பெருக்கம்" முதலியவற்றையும் அங்குள்ள சிறுவர்களுக்குக் கற்பித்தார். பெரியவர்கள் தாம் படித்தவற்றை மறந்த போதிலும், சிறுவர்கள் படிப்பதைக் கேட்குங் காலத்தில், எங்கோ எப்பொழுதோ கேட்ட மாதிரியிருந்ததாகப் பேசிக் கொள்வார்கள். இப்படிப் பல வருஷங்கள் கழிந்தன.

1920ல் சுமார் ஐந்நூறு ஜனங்கள் வசிக்கும் கிராமங்களில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தவேண்டுமென்று காருண்ணியமுள்ள புது சர்க்கார் சங்கல்பித்துக்கொண்டபடி, அக்கிராமத்தில் "போர்ட் ஸ்கூல்" ஒன்று ஏற்பட்டது. அதில் இரண்டு வாத்தியார்கள் அமர்ந்தனர்; பையன்களும் அறுபதுபேர் சேர்ந்தனர்; பெண்கள் படிக்க முன் வரவில்லை. பையன்களைச் சில வகுப்புகளாகப் பிரித்து,வாத்தியார்களும் தாங்கள் கற்ற சில பாடங்களை அவர்களுக்குப் போதித்தார்கள். ஆனால் பள்ளிக்கூடத்தைக் கண்காணிக்கவரும் டிபுட்டி இன்ஸ்பெக்டர்களையும், போர்ட் அதிகாரிகளையும் மகிழ்வித்து அவர்கள் மனதுகளை குளிரச் செய்வதில் உபாத்தியாயர்கள் கவனம் மிகுதியாகச் செல்லும்படி நேரிட்டது; முதுகில் அடி பொறுக்கலாம், வயிற்றிலடி பொறுக்கமுடியாதல்லவா?

இரண்டு வருஷங்கள் சென்றன. அக்கிராமத்துக்கு சங்கரர் என்ற ஒரு வாலிபர் வந்தனர். அவர் பி. ஏ. பட்டம் பெற்று, ஒத்துழையா வியக்கத்திலடிபட்டு, சில காலம் சிறைவாசமிருந்து, பிறகு பழம் பெரு நாடாகிய நமது பாரத நாட்டிலுள்ள பல ஸ்தலங்களுக்குச் சென்று, அங்கங்கு சிறியாரும் பெரியாரும் செய்துவரும் அரிய தேசத் தொண்டுகள் பலவற்றை ஆராய்ந்து, அவைகளின் நன்மை தீமைகளை உணர்ந்து, தன் வீடு திரும்பி வந்து, தனது வாழ்நாளை வீணே கழியாது புனிதமாக்கும் வழியைக் காணத் தவித்தனர். அப்பொழுது பாதசாரியாகப் பல கிராமங்களுக்குச் சென்று அவைகளின் பொதுவான குறைவுகளைத் தெரிந்தனர். தெரிந்த அக்குறைவுகளை நீக்கிக் கிராம வாழ்வைச் சீர்பெறச் செய்யும் துண்ணிய கருமத்தை எண்ணித் துணிந்து வேங்காடன்பட்டி வந்து சேர்ந்தனர்.

சங்கரர், வேங்காடன்பட்டியிலுள்ள சில பிரமுகர்களைச் சந்தித்து, அவர்களுடன் அளவளாவித் தனது நோக்கங்களைத் தெளிவுற அவர்களுக்கு விளக்கிக் காட்டினார். அவர்களும் அவர் யோஜனையை ஒருவாறு அங்கீகரித்துத் தக்க துணை புரிவதாக வாக்களித்தார்கள். இடர்களை ஒன்றன் பின் ஒன்றாய் விலக்கித் தனது உயரிய நோக்கங்களைச் சிறிது சிறிதாக அனுபவத்தில் காட்ட ஆரம்பித்தார். சங்கரர் அக்கிராமத்தில் வசிக்கத் தீர்மானித்தார்; தனக்கு உதவிபுரிய தன் மனோபாவங்களையுடைய இரண்டு சினேகிதர்களை வற்புறுத்தித் தன் கூட அங்கு வசிக்க ஏற்பாடு செய்தார். அம்மூவரும் ஒரு சாலை மாணவர்கள்; பாரதிப் பாட்டுகளின் ஆழங்கண்டவர்கள்; புதிய சகாப்தத்தின் தூதர்கள்; கிராமங்களில் அஞ்ஞான இருளைப் போக்கி, சிற்றுயிர்க் குற்ற துணையாகிய கல்வியைப்புகட்டி, கிராமத்தார்களின் மனோபாவங்களைச் சீர்திருத்தி, சுக வாழ்வைப்பெறச் செய்வதற்காகக் கங்கணங் கட்டிக்கொண்டவர்கள். அவர்களுடைய ஊக்கமும் உற்சாகமும் அக்கிராமத்திலுள்ள பெரியவர்களின் மனதை இழுத்து அவர்களுக்கு வேண்டிய பணத்தை அளித்தன.

சங்கரரும் அவருடைய தோழர்கள் இருவர்களும் பரபரப்புடன் தங்களது தினசரி வேலையைச் செய்தார்கள். நல்ல மைதானத்தில் இரண்டு கொட்டகைகளைப் போட்டார்கள்; அங்கு அக்கிராமத்துச் சிறுவர்களைக் கூட்டுவித்துக் கல்வியைப் போதித்தார்கள். அவர்கள் அனுஷ்டித்த முறை பின்வருமாறு:—காலையில் ஏழு மணி முதல் பத்து மணி வரைச் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் தமிழ், கணக்கு இரண்டையும் தினசரி போதித்தார்கள்; சரித்திரம், பூமி சாஸ்திரம், இயற்கை யறிவு, சித்திரம், வாய்ப்பாட்டு முதலியவைகளை ஒவ்வொரு நாளைக்கு ஒன்று ஒன்றாகப் போதித்தார்கள். தஞ்சையில் டேனியல் பிரமுகரால் வெளியிடப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டு வரும் போதனா முறையை இவர்களும் மேற்கொண்டார்கள் அக்கிராமத்திலுள்ள ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயது வரையுள்ள எல்லாப் பையன்களும் பெண்களும் தினந் தவறாமல் வந்து படித்தார்கள்.



கடவுள் துதியுடன் தினசரிப் பாடங்களை ஆரம்பிப்பார்கள்; கடவுள் துதியுடனே பாடங்களை முடிப்பார்கள். பிறகு அவர்களைத் தங்களது இஷ்டம் போல விளையாடவோ, படிக்கவோ, பிற வேலை செய்யவோ விட்டுவிடுவார்கள்; அவர்களும் உற்சாகமாக பள்ளிக்கூடத்தின் வெளியிடங்களில் கூடி, ஆடி, பாடிக் களித்தார்கள்.

பகல் இரண்டு மணி முதல் நான்கு மணி வரை வேலைக்குச் சென்றிராத ஸ்திரீகளுக்கு உரிய கல்வியைப் போதித்தார்கள். தமிழில் புதுப் புத்தகங்களையும் தினசரி, வார, மாதாந்தரப் பத்திரிகைகளையும் சாதாரணமாகப் படிக்கும் வன்மையை அவர்களுக்கு அளித்தார்கள்; பால், தயிர், மோர் முதலியயற்றை விற்று அடையும் பணக்கணக்குகள், நாடோடி சமாசாரங்கள், உலக வினோதங்கள், பிரதேசங்களில் மனப்பான்மைகள் முதலியவற்றைப்பற்றி அவர்களுக்குக் கதை கதையாக விளங்க உரைப்பார்கள். வீடுகளைச் சுத்தமாக வைத்தல், காய் கறிகளை அலம்பி சுத்தமாகச் சமைத்தல், கூழானாலும் குளித்துக் குடித்தல், கந்தையானாலும் கசக்கி உடுத்தல், உணவு வகைகளின் தாரதம்மியங்கள், கணவர்களுடன் கோபங்கொள்ளாது அவர்கள் சம்பாதித்துத் தந்ததை உவகையுடன் பெற்றுச் சிக்கனமாகக் குடித்தனம் செய்தல், பிறர் பொருளைக் கவரு திருத்தல், கடவுளைத் தொழுதல் முதலிய ஸ்திரீ தர்மங்களைப் போதிப்பார்கள். நாளடைவில் அக்கிராமத்தில் ஒரு ஸ்திரீ கூடத் தவறாமல் எல்லாரும் பகல் வேளைகளில் அக்கொட்டகைகளில் கூடி, வெளிக் காற்றையும் சூரிய வெளிச்சத்தையும் நன்றாக அனுபவித்து, வம்புப் பேச்சுக்களைத் தவிர்த்து, சத்காலக்ஷேபம் செய்து மகிழ ஆரம்பித்தார்கள்.

பிறகு, இரவில் ஏழு மணி முதல் ஒன்பது மணி வரை, பகலில் வேலைக்குச் சென்றிருந்த ஸ்திரீ புருஷர்களைக் கொட்டகைகளில் கூட்டி அவர்களுக்கு உலக அறிவைப் புகட்டினார்கள். பஜனை, பாட்டு, கதை, உபன்னியாசம் முதலியவைகளை சமயோஜிதமாய் அனுஷ்டித்து, தினந் தினம் அவர்களுடைய கடமைகளையும் உரிமைகளையும் பற்றி உபதேசம் செய்தார்கள். காதல், கவருடல், கள்ளுண்டல், பொய் மொழிதல் முதலியவைகளின் தீமைகளை சாங்கோபாங்கமாக எடுத்துரைத்தார்கள். செய்வன திருந்தச்செய், மெய் வருத்தங் கூலிதரும், முயற்சி திருவினையாக்கும் போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து, ஆலயந் தொழுவது சாலவு நன்று, ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும், மனைவிகளை அடிமையென மதியாதிருத்தல், சிக்கன வாழ்வு, சுகாதார வாழ்வு முதலிய விஷயங்களையும் கொஞ்சம் கொஞ்சமாக, பசு மரத்தில் ஆணியைப் பதிப்பதுபோல, போதித்து வந்தார்கள். பணக்காரர்களும் நாட்டாமைக்காரர்களும் இரவில் கூடி புது விஷயங்களையறிந்து, வேலையாட்களுக்கு ஊக்கமூட்டி, சங்கரரும் அவரது தோழர்களும் அனுஷ்டித்து வரும் புதியமுறைக்கு ஆதரவு அளித்தார்கள்.

இப்படியாக ஐந்துவருஷங்களில் வேங்காடன்பட்டியில் புத்துயிர் கிளம்பிற்று; புதியசகாப்தம் ஏற்பட்டது. ஆண், பெண், முதியோர், இளைஞர், எல்லாருக்கும் படிக்கத் தெரிந்துவிட்டது; சண்டை சச்சரவுகள் குறைந்தன; கிராமச்சுகம், குடும்பச்சுகம், தன்சுகம் பெருகின; எஜமான விசுவாசமும் வேலைத்திறனும் மனச்சாந்தியும் பொங்கின; சிக்கனவாழ்வு ஓங்கி, பணமுடைகுறைந்து, கிராமவாழ்வு பொலிவு உற்றது. சிறுகுழந்தைகள் தவிர மற்ற எல்லாருக்கும் படிக்கத் தெரிந்துவிட்டதனால், அவர்கள் பலபத்திரிகைகளையும் படித்து உலக அறிவைப் பெருக்கி ஆனந்தமடைந்தார்கள். சிக்கனவாழ்வினால் சேமித்தபொருளைக் காப்பாற்றி சரியான வழிகளில் உபயோகிப்பதற்காகத் தகுதியான பண்டகசாலையையும் பாங்கியும் நிருபித்து நடத்திவந்தார்கள். சண்டை சச்சரவுகள் ஏற்படுவதில்லை; ஏற்பட்டாலும், சாக்ஷிக்காரன் காலில் விழுவதைக் காட்டிலும் சண்டைக்காரன்காலில் விழுவதே மேலானது என்று தங்களுக்குள்ளேயே சண்டைகளைத்தீர்த்துக்கொண்டார்கள். அங்கங்கு தேவையான கிணறுகள் வெட்டப்பட்டன. சங்கரர் இடைவிடாது கிராமத்தின் அபிவிருத்தியைக் கருதிக்கருதி, பற்பல புது விஷயங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் போதியப் பொது ஆதரவைப்பெற்று தனது கனவு நினைவாக மாறிவருவதைக்கண்டு மகிழ்ச்சியடைந்தார். காலக்கிரமத்தில் அவரும் அவருடைய தோழர்களும் படித்த பெண்களை மணந்து, அவர்களையும் கிராமத்தொண்டில் ஈடுபடும்படி செய்தார்கள்.

அக்கிராமத்துக்குரிய கைத்தொழிலையும் அவர்கள் மறக்கவில்லை. அக்கிராமத்தில் பருத்தி விளைவு மிகுதி. அப்பருத்தியை அங்கேயே சுத்தம்செய்து, நூற்று நெய்வதற்குவேண்டிய சௌகரியங்கள் எல்லாம் செய்துகொடுக்கப்பட்டன. அக்கிராமத்தைச் சுற்றிலும் அனேகமாகப் புஞ்சை நிலந்தான். சோளமும் கம்பும் கேழ்வரகும் நன்றாய் விளைந்தன.

அக்கிராமத்தில் வாரம் இருமுறை கூடும் சந்தையில் பண்டமாற்றுகள் பலமாய் நடந்தன. சர்க்கார் இலாகா முக்கியமாய் விவசாயம், தொழில், கூட்டுறவு முதலிய இலாகா-உத்யோகஸ்தர்கள் சீர்தூக்கி ஆராய்ந்து வெளியிடும் துண்டுப் பத்திரிகைகளை அவர்கள் படித்து உபயோகித்துப் பலபல அபிவிருத்திகளைச் செய்தார்கள்.

வருஷங்கள் பத்து, பதினைந்து ஆய்விட்டன. வேங்காடன் பட்டிப் படிப்புமுறை சுற்றுப் புறங்களிலுள்ள மற்ற கிராமங்களுக்குப் பரவியது. சர்க்கார் இன்ஸ்பெக்டர்கள் வந்து அம்முறைகளைப் பார்வையிட்டுச் சோதித்து ஆதரித்தார்கள். சங்கரர் முறை சர்க்கார் பண உதவியை நாடவில்லை; "தன் கையே தனக்குத் துணை" என்ற விதியை அவர் எல்லாருக்கும் உபதேசம்செய்து, அப்படியே நடத்துவதில் கஷ்டம் ஒன்றுமில்லை யென்றும் நிரூபித்துக் காட்டினர். சர்க்காருடைய



மல், தக்க தணிக்கைகளுடன் கணக்குப் புள்ளி விவரங்கள் நேர்மையாக வைக்கப்பட்டிருந்தன.

காலையில் சிறுவர் சிறுமிகளுக்கும், மாலையில் ஸ்திரீகளுக்கும், முன்னிரவில் வேலையாட்களுக்கும் சரியான கல்வி போதிக்கப்பட்டது. எல்லாரும் படித்தவர்களானார்கள். ஜனங்கள் புது விஷயங்களைத் தாமே படித்து, அர்த்தம்செய்து, அனுஷ்டிக்க முயன்றார்கள். மேல் படிப்பை விரும்பியவர்கள் இருபது மைலுக்கப்பாலுள்ள பெரிய பள்ளிக்கூடங்களுக்குப் போனார்கள். தமிழில் வேண்டிய பத்திரிகைகள் எல்லா விஷயங்களையும் எழுதி வெளியிட்டபடியால், இங்கிலீஷ், ஹிந்தி முதலிய பாஷைகள் கிராமத்து பெருவாரியான ஜனங்களுக்கு அவசியமில்லை என்று உணர்ந்தார்கள். ஒரு நாள் காங்கிரஸ் மந்திரி ஒருவர் வேங்காடன் பட்டிக்கு விஜயஞ் செய்தார். அங்கு உள்ள சுபிக்ஷத்தைக் கண்குளிரப் பார்த்தார். அக்கிராமத்தில் லைபிரேரி மூவ்மெண்ட் இருக்கிறதா என்று கேட்டார். "புத்தகாலய இயக்கந்தானே; இருக்கிறது; நன்றாய் இயங்குகிறது; அதுவே முதியோர் படிப்பை நீடிக்கச் செய்து வருகிறது; பட்டணத்துப் புத்தகாலய இயக்கத்தார் செய்து வரும் உதவி மெச்சத்தக்கது," என்று சங்கரர் பதிலுரைத்தார். மந்திரி, "புத்தகாலய இயக்கம்" என்ற மொழித்தொடர் நன்றாய் இல்லையே" என்றார். அதற்குச் சங்கரர் "நீங்கள் ஆங்கிலப் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் விருந்தாக உண்டு, தமிழ்ப் புத்தகங்களை மருந்துபோல் படிப்பதால் வருங்கோளாறு. இது கிராமத்தார்கள் காதுகளுக்கு அதுவே சத்தமாகத் தோன்றுகிறது "என்று பதிலுரைத்தார். சங்கரரின் மொழிப் பற்றையும் கிராமப் பற்றையும் மெச்சி, அவர் முறையைப் பிற ஜில்லாக்களுக்கும் துண்டு பத்திரிகைகளில் விளக்கி கல்வி இலாகா மூலமாகப் பிரசாரஞ் செய்வதாக உறுதி கூறிச் சென்றனர். வேங்காடன் பட்டி படிப்பு முறை நீடூழி வாழ்க!

[குறிப்பு:—வேங்காடன் பட்டியைப் பார்வையிட விரும்புகிறவர்கள் தங்கள் ஞானரதத்தை உபயோகிக்க வேண்டும்.]

**WANTED**

**Teachers**—One Secondary Grade and One Higher Grade (Trained).

*Apply:* S. c/o Editor, "BALAR KALVI."

# ஆரம்பக் கல்வி முறையும் காலப்போக்கும்

ஜி. ஸ்ரீனிவாசா சாரியர், மயிலாப்பூர்.

நம் நாட்டுக் கல்வி முறையைப்பற்றி குறை கூறாதவர்களே இல்லை. தோட்டி முதல் தொண்டமான் வரையில் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒன்று சொல்லுகிறார்கள். சில காலத்திற்கு முந்தியவரையில் கல்வி இலாக்கா அதிகாரிகள் கல்விமுறையையும் அம் முறையைப் பின்பற்றும் உபாத்தியாயர்களையும் சிறிதளவு ஆதரித்து வந்திருக்கிறார்கள். உபாத்தியாயர்களின் போதாக்காலமோ என்னவோ, இப்போது அவர்கள் கூட இம் முறையை வளர்ப்பது மோசம்; பொருள் செலவிடுவது நஷ்டம்; உபாத்தியாயர்களின் உழைப்புப் போதாது; படிப்புக்கு ஏற்ற சிறுவர்கள் சிலரே; மேல்படிப்புக்கு மாணவர்களை வடிக்கட்டிப் பொறுக்கவேண்டும்; இல்லையேல் கோடிக்கணக்கான நஷ்டம் ஏற்படும் என்று பொருள் தரும்படி அதிகார முறையிற் பேசுவதன்றி எழுதியும் வருகிறார்கள். இதன் உண்மையை இங்கு ஆராய்வது பயனற்றது.

கல்வி முறையில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்பதில் அபிப்பிராயபேதம் இருப்பதாகத் தெரியவில்லை. பயன்தரத்தக்க சீர்திருத்தம் செய்யவேண்டுமென்பது எல்லோருக்கும் ஒப்ப முடிந்ததே. எந்த வகையில் சீர்திருத்தம் செய்யலாம் என்பதில் அபிப்பிராய பேதங்கள் உண்டு. இதைப்பற்றிச் சிலமாதங்களாகப் பல இடங்களில் பலர் பல வகையாகப் பேசி வருகின்றனர். தினசரிகளிலும், மாதாந்தர, வாரப் பதிப்புப் பத்திரிகைகளிலும் இதைப்பற்றி கருத்துக்கள் வெளிவந்துள்ளன. அவற்றின் சாரத்தைப் படிப்பாளிகள் அறிவார்கள். இக் கட்டுரையில் சிறப்பாக ஆரம்பப்பள்ளிக்கூடங்கள் சமூக வாழ்க்கைக்கு எத்துணை நன்மை புரியலாம் என்பது ஆராயப்படும்.

ஒவ்வொரு நாட்டுக் கல்விமுறையிலும் குறைகள் இருக்கின்றன. ‘இது குறையில்லாத முறை’ என்று அறிவாளிகள் துணிந்து கூறும் முறை ஒருநாட்டிலும் இல்லை. ஆகவே நம் நாட்டு முறையில் குறைகள் காணப்படுவதைப்பற்றி நாம் அதிகம் வருந்தவேண்டியதில்லை; என்றாலும், போதகாசிரியர்கள் தம் பயிற்சியாலும், நுண்ணறிவாலும், அநுபவத்தாலும், காலத்திற்கு ஏற்ற புதியமுறைகளைக் கையாளுவதுபற்றிக் குறை கூறுவோர் பெரும்பாலும் அவற்றின் உண்மையை உணர்ந்தவர்களல்லர். உதாரணமாக, தாலுகா போர்ட் பிரசிடெண்டு ஒருவர், ஒரு பள்ளிக்கூடத்தை மேற்பார்வையிடச் சென்றார். அவர் படிக்குங் காலத்தில் கையாண்ட முறைகளுக்கு வேறு பாடாக அப்பொழுது இருந்ததைக் கண்டு மனச்சலிப்புற்று “என்ன ஐயா! இந்தகாலத்துப் படிப்பு!



‘ஸ்டாண்ட்’ என்கிறார்கள், ‘ஸிட்’ என்கிறார்கள்.—(அவர் கூறியது எழுதத் தகுந்ததன்று)—‘ரைட், லெப்ட், என்கிறார்கள். பிள்ளைகளைச் சில மணி நேரம் உட்காரவைத்துப் பிறகு ‘போ’ என்கிறார்கள். இது என்ன படிப்பையா!” என்றாராம். தாம் சிரமப்பட்டு வழங்கும் போதனாமுறையைக் கண்டு களித்துப் புகழ்வாரென எதிர்பார்த்த உபாத்தியாயர்களுக்கு அவர் சொல்லிய சொல் புண்ணில் வேலிட்டாற்போல் இருந்தது. ‘பள்ளிக்கணக்குப் புள்ளிக்குதவாது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா?’ என இக்காலக் கல்விமுறையைப் பழிப்போரும் அத்தகையோரே.

இனி, கல்வி இலாக்கா அதிகாரிகள் கூறும் சீர்திருத்தத்தை ஆழ்ந்து யோசித்தாலோ கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோல் இருக்கிறது. ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதற்கும், அவற்றிற்குப் பொருள் உதவி செய்வதற்கும் கல்வி இலாக்காவில் புதிய நிபந்தனைகளும் விதிகளும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவ் விதிகளை உற்று நோக்கினால், அவை தற்காலம் உள்ள பள்ளிக்கூடங்களை மூடிவிடுவதற்குப் பெரும்பாலும் கருவிகளெனத் தோன்றும்; பள்ளிக்கூடங்கள் பெருகவும் அறிவை வளர்க்கும் கல்விமுறை விருத்தி யடையவும் அவை துணையாகுமோ என்பது சந்தேகம்.

தற்காலம் ஆரம்பக் கல்வி முறையில் உள்ள குறைகளுள் மிக முக்கியமானது குறிக்கோள் ஒன்றிலாமை. பொது ஜன அபிப்பிராயத்தை அடிப்படையாகக்கொண்டு நடைபெறும் அரசாங்கங்களெல்லாம் வாக்காளிகள் (Voters) தங்கள் பொறுப்பை சரியா யேற்றுக்கொள்ளும்படி செய்வதற்கு ஆரம்பக்கல்வியையே தலைசிறந்த கருவியாகக் கொண்டுள்ளன. எனவே நம் நாட்டுப் பழக்க வழக்கங்களிலுள்ள நலன்களுக்கு ஏற்றவாறு நூலறிவும், உலகியலறிவும் அரசியலறிவும் பொதுமக்கள் பெறும்படிச் செய்வதையே ஆரம்பக் கல்விமுறை முக்கிய நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

மங்க் (Monk) துரையவர்கள் ஆங்கில துரைத்தனத்தாரின் இந்தியக் கல்வி நோக்கத்தைப்பற்றி ஒரு புத்தகம் *எழுதியுள்ளார். இராஜாங்கத்தை நடத்துவதற்கேற்ற அறிவும் வன்மையும் மாணவர்களுக்கு உண்டாகும்படி உயர்தர கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும் கல்விமுறை ஏற்படுத்தப்படாம லிருந்ததலே இதுகாறும் இந்தியர்கள் ஸ்வராஜ்யம் வகிக்க முடியாதிருந்ததற்கு முக்கிய காரணம் என்று அப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்து எல்லோரும் ஒப்புக்கொள்ளத் தகுந்ததே. ஆனால், ‘உயர்தர கலாசாலைகளில் பாடதிட்டங்களை ஏற்றபடி அமைத்தால் ஆரம்பக் கல்விமுறை நாளடைவில் தானாகவே திருந்தும்’ என்று அதில் கண்டுள்ள கருத்து இக்கட்டுரையாளருக்கு ஏற்றதென்றெண தோன்றவில்லை; வருந்தி முயன்றால்தான் ஆரம்பக் கல்வியும் திருந்தும்.

---

* Educational Policy in India.

5

கேவலம் எழுதப்படிக்கத் தெரிவதும், புள்ளிக்கணக்குப் போடுவதும் மாத்திரம் ஆரம்பக் கல்வியாகாது. காலமாறுபாட்டால் வாழ்க்கை வேறுபடுவதை கருத்திற்கொண்டு, வாக்குரிமையால் ஏற்படும் பொறுப்பைச் சரிவர உணர்ந்து நீதிமுறையில் பொதுஜனங்கள் ஒழுகும்படிச் செய்வதே ஆரம்பக் கல்வியின் சிறந்த நோக்கமாக இருக்கவேண்டும். இந்த நோக்கத்தை நிறைவேற்றாத ஆரம்பக் கல்விக்குச் செலவிடும் பணம் சாம்பலிற் செய்யும் ஹோமமேயாகும்.

காங்கிரஸ் துரைத்தனத்தார், பெரும்பாலும் அவர்களுக்குமுன் அரசாங்கத்தை நடத்தியவர்கள் கல்வி முறையைப்பற்றி வெளியிட்ட கருத்தையே வேதமெனக் கருதிவருகிறார்களோ என நமக்குச் சந்தேகம் தோன்றுகிறது. அவ்வெளியீட்டிலுள்ள குறைகளைப் பலதடவை உபாத்தியாயர் சங்கங்களும், தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் வெளிவரும் பத்திரிகைகளும், பிறவும் கூறியிருத்தல் புதிய அரசாங்கத்தார் உள்ளத்தில் ஏறா மடமொழி போலும்.

நம்நாட்டுச் சிறுவருக்கு ஆரம்பக் கல்வியைத் தருதல் அரசாங்கத்தின் பொறுப்பு அன்றா? ஆம் எனின், எந்த அளவுக்கு? இவ்வினாக்களுக்கு விடையை அரசாங்கத்தார் பொதுஜனங்களுக்குச் சீக்கிரத்தில் தந்தருள்வார்கள் எனக் கருதுகின்றோம்.

முதல் நான்கு ஆண்டுகளில் எழுதப்படிக்கக் கற்றுக்கொடுத்தபின், சிறுவர்களுக்கு பாடப்பகுதிகளுடன் பரம்பரைத் தொழிலிற் பயிற்சியும் தரப்படும் என ஸ்ரீமான் வர்க்கியவர்கள் கூறி வருவதை வாசகர்கள் கவனித்திருக்கலாம். சிறுவர் ஏதோ ஒருதொழில் செய்து ஜீவனோபாயம் பெறும்படி செய்வது நன்றேயாகும். ஆனால் அதில் ஒரு சந்தேகம் தோன்ற இடமுண்டு; என்ன? குயவன் மகன் குயவனாகவும், தட்டான் மகன் தட்டானாகவும், கருமான் மகன் கருமானாகவும் இருக்கும்படி பயிற்சி தருவது சீர்திருத்தம் பெறும் ஆரம்பக் கல்வியின் நோக்கங்களுள் ஒன்றா? சிறுவர்களின் அறிவு வளர்ச்சியின் வேகத்திற்கும், அவரவர் தம் தம் பயிற்சியாலும் நுண்ணறிவாலும் நாட்டிலுள்ள பல தொழில்களுள் எந்தெந்தத் தொழிலுக்கு ஏற்றவர்களோ அந்தந்தத் தொழிலில் திறன் பெறும்படி செய்வதன்றோ கல்விமுறையின் நோக்கமாதல் வேண்டும்?

அஃது எவ்வாறாயினும், மாவில்லாமல் பணியாரமாகாது. பொருளில்லாமல் கல்வியறிவு விருத்தியடையாது. பொருளோ அரசாங்கத்தார் தந்தே வரவேண்டும்; அரசாங்கத்திற்குப் பொருள் ஜனங்கள் கொடுக்கும் தீர்வை மூலமாகவே வரவேண்டும். ஆரம்பக் கல்வி அபிவிருத்தியடைய அரசாங்கத்தார் சிக்கனமின்றிப் பொருளைச் செலவிடவேண்டும். அப்படி செலவிடும்படி வற்புறுத்தக் கூடியது பொதுஜன அபிப்பிராயமே. பொதுஜன அபிப்பிராயம் அரசாங்கத்தாரின் காதைத் துளைத்தால் நடவாததொன்றில்லை. கல்வியைப்பற்றிச் சரியான பொதுஜன அபிப்பிராயம் தோன்றுவதற்கே போதகாசிரியசங்கங்கள் உழைத்து வருகின்றன.



நிற்க, "பொதுஜனங்களுக்கு ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் அவசியத்தையும் அவற்றின் வளர்ச்சிக்குப் பொருள் செலவிடுதல் வீணன்று, சேமநிதி போல்வதாகும் என்பதையும் எங்ஙனம் உணர்த்தலாம்? பள்ளிக்கூடங்கள் என்றால் சிறுவர்கள் ஏதோ ஒருவகையில் எழுதப்படிக்கத் தெரிந்துக்கொள்ளும் இடங்கள் என்பதோடு நில்லாமல், 'அவை சமூக வாழ்க்கைக்கு ஆதாரமானவை; கிராம வாழ்க்கைக்கு உயிர் நிலை; வாலிபர்க்கும், முதியோர்க்கும் அறிவுடன் வாழ்க்கை நலனை ஊட்டும் கருவிகள்.' என்பதை எவ்வாறு மெய்ப்பிக்கலாம்? எந்த அளவுக்கு இதை நாம் மெய்ப்பிக்கின்றோமோ அந்த அளவிற்கு, 'இத்தகைய பள்ளிக்கூடங்கள் இருத்தல் அவசியம்: அவற்றால் எல்லோரும் பயன் பெறலாம்?" என்ற எண்ணத்தை பொதுஜனங்கள் மனதில் எழுப்பலாம்.

'இப்படிக் கிராமப் பள்ளிக்கூடம் அந்தக் கிராமத்தில் உள்ள எல்லோருக்கும் அறிவுவளர்க்கும் இடமாக இருக்கக் கூடுமா? எங்காகிலும் அப்படி இருக்கிறதா? பள்ளிக்கூடம் சிறுவர்களுக்காக ஏற்பட்டவை; வயதானவர்களுக்கு எப்படி அது பயன்படக் கூடும்?' என்பனபோன்ற வினாக்கள் வாசகர்களுக்குத் தோற்றலாம். சுமார் இருபது ஆண்டுகளுக்குமுன் வரையில் சமூக வாழ்க்கை நிலைக்கு அடிப்படையாக இருக்கும் பள்ளிக்கூடங்கள் நமது இந்தியாவிலேயே அருதியில் அருதியாக இருந்தது. ஆனால் மேல்நாட்டிலோ கிராமப் பள்ளிக்கூடங்கள் கிராம வாழ்க்கைக்கு உயிர்த்துணையாகப் பல ஆண்டுகளாக இருந்து வருகின்றன. அவற்றைப்போல் பஞ்சாப் மாகாணத்தில் கிராமப் பள்ளிக்கூடங்கள் சில ஆண்டுகளாக ஏற்பட்டு வருகின்றன.

மேல் நாட்டில் ஒரு பள்ளிக்கூடம் அடிக்கடி கிராமவாசிகள் கூடிப் பேசும் இடமாகின்றது பள்ளிக்கூடத்தின் ஒருபுறத்தில் அதற்கென ஒரு கூடமுண்டு. வகுப்புக்களில் நடக்கும் பாடங்களுக்கு இடையூறின்றி, கிராமவாசிகள் அக்கூடத்தினுள் நுழைந்து வெளிவரத் தனி வாசல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. மற்றொரு புறத்தில் கிராமவாசிகளின் அறிவை வளர்ப்பதற்கு ஏற்ற பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வைக்கப்பட்டிருக்கும்; இவையன்றிப் புத்தகசாலை ஒன்று இருக்கும். படிக்கவருவோர் பள்ளிக்கூடத்தில் நடக்கும் வேலைகளுக்குத் தடையின்றி வரப்போக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சுகாதாரம், கூட்டுறவு, தொழில், வியாபாரம், ஆடுமாடுகளை வளர்த்தல் முதலிய விஷயங்களைப்பற்றி, நூலறிவும், உலகியலறிவும் உள்ள பெரியார் பலர் கிராமவாசிகளைக் கூட்டமாகக் கூட்டிப் பேசுவார்கள். கிராமவாசிகளும் தங்களுக்குள்ள குறைகளை எடுத்துரைத்து அவற்றைக் குறைப்பதற்கோ, களைவதற்கோ வேண்டும் உபாயங்களை அப்பெரியாரிடம் கேட்டு அறிவார்கள். போதகாசிரியர்களும் இத்தகைய ஏற்பாடுகளை மேம்பார்வையிட்டு, கிராமவாசிகளுக்குத் தேவையான உதவியை ஓய்வு நேரங்களிற் செய்வார்கள். இவ்வாறு போதகாசிரியர்கள் சிறியோருக்குப் பாடம் கற்பிக்கின்றதோடு நில்லாமல் பொது

ஜன வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குப் பெருந் துணையாவார்கள். கிராமவாசிகளும் அவர்களிடம் அன்பும் மரியாதையும் கொண்டவர்களாய், ''நமக்குத் தோன்றும் சந்தேகங்களை உபாத்தியாயர்களிடம் கூறலாம்; அவர்கள் அவற்றைத் தீர்க்கும் வன்மை பொருந்தியவர்கள்.' என்ற நம்பிக்கையுடன் இருப்பார்கள். இந்நாட்டிலோ, உபாத்தியாயரை ''ட ஆன'' என்று இகழ்வதோடு நிற்பவரே பெரும்பாலோர்.

மேல் நாட்டிலுள்ள கிராமப் பள்ளிக்கூடங்கள் எத்தன்மையவெனின், அதிகப் பொருள் செலவில்லாமல் அழகு தோன்றும்படி கட்டப்பட்டவை. ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் புறத்திலும் அழகிய தோட்டமொன்றுண்டு. அதிலுள்ள பூஞ்செடிகளும் கொடிகளும் பார்ப்பவர் கண்ணையும் மனத்தையும் கவரத்தக்கவை: உபாத்தியாயர் வீடோ, அவர் கௌரவத்திற்கு ஏற்றபடி சிக்கனமாகச் செலவிட்டுக் கட்டிய அழகிய சிறிய கட்டடம்; உபாத்தியாயர் வீட்டைப்போன்ற வீடொன்றையும் பள்ளிக்கூடத்துத் தோட்டத்தைப் போன்ற தோட்டமொன்றையும் ஏற்படுத்திக்கொள்ள விரும்புவது அங்குக் கிராமவாசிகளின் இயல்பாக விருக்கிறது. பள்ளிக்கூடங்கள் மனத்திற்கு இனிமையாயும், கண்ணிற்கு அழகாயும் அறிவு வளர்க்கும் இடங்களாயும் இருத்தலால் அவை கிராமவாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு ஆதாரங்களென கூறப்பட்டு வருகின்றன.

நம் நாட்டிலுள்ள கிராமப் பள்ளிக்கூடங்கள் எவ்வாறுள்ளனவென்பதையும், வீடு வசதிக்கு உபாத்தியாயர் பஞ்சபடும் பாடு படுவதையும் வாசகர்கள் சொல்லாமலே அறியலாம். மேற் கூறியபடி நம் நாட்டிலும் கிராமப் பள்ளிக்கூடங்கள் அமைக்கப் பட்டாலன்றோ அவை சமுதாய வாழ்க்கைக்குத் துணைக்கருவிகளாகும்.

''என்ன ஐயா, சிறுவர்களை ஒருமுறை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினால் குறைந்தது 4 வருஷங்கள் தவறாமல் அனுப்பவேண்டுமாம். இல்லாவிட்டால் பெற்றோர் தண்டனைக்குள்ளாவார்களாம்; பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கே அனுப்பாதவர்களைப் பற்றிக் கவலையொன்றுமில்லையாம்; பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினால் சிறுவர்கள் சாமானிய வேலைகளுக்குப் பயன் படுத்திக்கொள்ள முடியாமலிருக்குமோ, ஒருமுறை அனுப்பி நிறுத்தினால் அபராதம் வருமோ' என்று பயந்து சிறுவரை பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதே கஷ்டமாக இருக்கிறது; அப்படி இருக்க 'முதலுக்கு மோசம் வட்டிக்கு வாய்தா' என்பது போல, 'பள்ளிக்கூடம் அழகிய கட்டடமாயிருக்கவேண்டும். புத்தகசாலை வேண்டும்; அது வேண்டும்; இது வேண்டும்' என்று ஒருவர் ஆசைப்படுவது வீண்; இதெல்லாம் ஆகும் காரியமன்று'' என்று சிலர் பரிகசிக்கலாம். ஆனால் பள்ளிக்கூடங்கள் விருத்தியடைந்து கிராமவாசிகள் விரும்பிப் போற்றுவதற்கு ஏற்ற இடங்களாக மாறவேண்டுமானால் அப்படி எல்லாம் இருக்கத்தான் வேண்டும்.

வாய்மொழியாகப் பிறரிடம் கேட்டு அறிவு வளர்த்துக்கொள்வது நம் நாட்டில் தொன்றுதொட்டு வந்த வழக்கம். கிராமவாசிகள் தங்களுக்



குள்ள ஓய்வு நேரங்களில் 'பள்ளிக்கூடத்தில் போய் உட்காரலாம்; அங்குள்ள உபாத்தியாயரிடம் பேசலாம்; உலக விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம்; அறிவை வளர்க்கப் பொழுது போக்கலாம்?' என்ற எண்ணங்களை இயல்பாகக் கொள்ளும்படி பள்ளிக்கூடத்தில் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

எந்த நாட்டு முறையும் எழுத்தெழுதுவதையும் கூட்டிப் படிப்பதையும் நோக்கமாகக் கொண்டதன்று. எழுதுதலும் படித்தலும் அறிவை வளர்க்கும் கருவிகள். கருவிகள் மாத்திரம் பெற்றால் போதியதன்று' அவற்றை உபயோகித்துப் பயன் பெற வசதிகள்வேண்டும். இல்லையேல் நாளடைவில் கருவிகளும் மழுங்கி துருப்பிடித்து பயனற்றவையாகும்.

படிக்கத் தெரிந்தவர்கள் சிலராயிருந்தாலும், உபாத்தியாயர் முயற்சி எடுத்துக்கொண்டால், ஓய்வு நேரங்களில் அவர்களிடையே கல்வியை அபிவிருத்தி செய்யலாம். படிக்கத் தெரியாதவர்களும் விஷயங்களைச் சுவைத்து உணருமாறு ஏற்பாடு செய்யவேண்டும். அரசாங்கத்தார் இதில் ஊக்கங் கொண்டால்தான் கிராமவாசிகள் முன்னேற்றமடையக் கூடும். பல இலாக்காக்கள் ஒன்று சேர்ந்து கிராம வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குப் பாடுபடப் பள்ளிக்கூடங்களையும் உபாத்தியாயர்களையும் உபயோகித்துக்கொள்ளவேண்டும்.

உதாரணமாக: வியவசாய இலாக்கா குடியானவர்களுக்கு பயிர்த் தொழில் விருத்தியைப் பற்றியும், ஆடுமாடு வளர்த்தலில் புதியமுறைகளைப் பற்றியும் அவ்வப்பொழுது தெரிவிப்பதற்கு வேண்டும் ஏற்பாடுகளைச் செய்யலாம். சுகாதார இலாக்கா தெருக்களையும் வீடுகளையும் சுத்தமாக வைத்தல், நோய்கள் வரவொட்டாமல் தடுத்தல் முதலிய விஷயங்களில் கிராம வாசிகள் சிரத்தையுடனிருக்க வேண்டும் அறிவை வளர்க்க ஏற்பாடுகள் செய்யலாம். ஒவ்வொரு இலாக்காவின் சிறப்புத் தொழில் வேறுபினும், கிராம வாழ்க்கையைப் பகுத்துப் பார்க்க முடியாது. அதன் முன்னேற்றம் எல்லா இலாக்காக்களுக்கும் பொதுவான நோக்கமாக வேண்டும்', என்ற எண்ணத்துடன் ஒத்துழைத்தால் நன்மையுண்டாகும் என்பதில் சந்தேகமில்லை. காங்கிரஸ் அரசாங்கம் இத்துறையில் ஈடுபட்டு வருதல் அறிவாளிகள் பாராட்டத்தக்கது.

கிராம வாழ்க்கையின் சீர்திருத்தத்திற்கு போதாசிரியர்களின் உதவி இன்றியமையாதது. போதகாசிரியர்களும், தங்கள் தொழில் முறைக்குப் பழுதன்றிப் பொதுஜன நன்மைக்குப் பாடு பட்டால் பெயரும் புகழும் அடையலாம்.

இதைப்படிக்கும் ஆரம்ப ஆசிரியர்கள் மனத்தில், ''இப்படிக் கூறுவதெல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. எங்கள் உழைப்பின் கூலி, வயிறுடன் வாழ்தலுக்கே போதியதன்று; எங்களுக்குள்ள இடர்களோ பல; அவற்றை நினைத்து மனம் உடையாமல் இந்த அளவாகிலும் வேலை செய்

கின்றோமே அது போதாதா? கல்வி இலாக்கா மேலதிகாரிகள் எங்களைப் பற்றிக் கூறிய நிந்தனைகளை மறக்க முயன்றாலும் முடியவில்லையே; தரித்திர தேவதை ஒரு புறம் பிடித்தாட்டக் கண்டோர் மனம் போனவாறு பேச எங்கள் மனம் புண்பட்டிருக்கிறது; இப்படி சோர்ந்துள்ள எங்களைப் பார்த்து 'இது செய்யலாம்', அது செய்யலாம்' என்று ஆர்வத்துடன் பேசவும் எழுதவும் பலர்முன் வருகிறார்கள். என்ன செய்வோம்.'' என்பன போன்ற எண்ணங்கள் தோன்றுவது இயல்பே. உண்ண உணவும், பருகத் தண்ணீரும், உடுக்க உடையும், இருக்க வீட்டு வசதியும் எவ்வளவு ஏழையாயினும் பெற்றிருக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் உழைத்து வரும் காங்கிரஸ் மந்திரி வர்க்கத்தினர் ஆரம்ப ஆசிரியர்களைக் கைவிட மாட்டார்கள் என்பது திண்ணம். ஆனால் வறுமையிற் செம்மையைக் குறிக்கோளாகக் கொண்ட நாடு நம்நாடு என்பதை நாமும் மறத்தலாகாது.

எனினும் மந்திரிமார்கள் ஆங்காங்கு வெளியிடும் சிலகருத்துக்கள் உண்மையில் நமக்குக் கலக்கத்தை தருகின்றன. எல்லோரும் ஆடம்பரமின்றி வாழவேண்டுமென அவர்கள் விரும்புவது நன்றே. பொருள் நெருக்கடியாலோ வேறு எந்தக் காரணத்தாலோ "பள்ளிக்கூடத்திற்குக் கட்டடங்கள் கட்டுவதை நிறுத்துங்கள்; அரசாங்கத்தார் இப்பொழுது பொருள் உதவ முடியாது; பெரிய கட்டடங்கள் ஏன்? நிழல் தரும் மரங்களின் அடியில் படிக்கலாகாதா? நமது முன்னோர் அப்படி செய்யவில்லையா?" என்று காங்கிரஸ் மந்திரிகள் பேசுகிறார்கள். சாகிதங்களும் அச்சியந்திரங்களும் உள்ள இந்நாளில் ஓலையும் எழுத்தாணியும் போதாவா எனக் கூறுவார் உளரோ? இல்லையன்றோ? அதுபோல் மரத்தின் நிழலோ, வசதிகள் குறைந்த கட்டடங்களோ தற்கால பாட திட்டங்களைத் திறமையுடன் நடத்தப்போதா. அதிகப் பொருள் செலவிட்டுப் பெரிய பெரிய கட்டடங்கள் ஆரம்பக்கல்விக்குக் கட்டவேண்டுமெனக் கூறவரவில்லை. சிக்கனமாகச் செலவிட்டுக் கட்டிய அழகிய சிறு கட்டடங்கள் மிக அவசியம் என்று வற்புறுத்திக் கூறவேண்டும். கூரைக் கட்டடமாயினும் சரியே. அழகு பொலியும்படி கட்டவேண்டும்.

"காங்கிரஸ், அதிகாரம் ஏற்றுக்கொண்டதால் ஆரம்ப ஆசிரியர்களுக்கும், அவர்கள் வழங்கும் கல்விக்கும் நல்லகாலம் பிறக்கும் என்று எண்ணி வருகிறோம் நல்லகாலம் பிறக்குமா குடுகுடுப்பாண்டி சொல்வது போன்ற நல்ல காலந்தான் பிறக்குமா? என்ன ஐயா" என்று மனங் கலங்கிச் சிலர் சந்தேகித்துக் கேட்க நேரிடலாம். "கல்வி நிர்வாக மந்திரிமார்களெல்லாம் மஹாத்மா காந்தியவர்களுடன் சில நாட்களுக்குப் பிறகு கலந்துபேசப் போவதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. ஏதேனும் நல்லவழி யொன்று தோன்றாமல் போகாது. பொறுத்துப் பாருங்கள்" என்ற விடை யொன்றே இப்பொழுது தரமுடியும்.

# பெற்றோர்களுக்கு வேண்டுகோள்

தென்னிந்திய ஏழாவது வருடக் கல்வி வாரக்கொண்டாட்ட சமயத்தில், அதன் மூல கமிட்டி இம்மாகாணத்திலுள்ள எல்லாப் பெற்றோர்களுக்கும் நன்மை உண்டாகுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறது. கல்வி வார சம்பந்தமான நடவடிக்கைகளில் சேர்ந்து அதைச் சிறப்பாய் நடத்திவைக்குமாறு பெற்றோர்களை வேண்டிக்கொள்ளுகிறது. விசேஷமாக, ஒவ்வொரு ஊரிலும் பெற்றோர்கள் பள்ளிக்கூடங்களைப் பார்வையிட்டு உபாத்தியாயர்களும், பிள்ளைகளும் அங்கு என்ன செய்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வார்களென்று கமிட்டி நம்புகிறது.

'கல்விப் புனருத்தாரணம்,' சின்னாட்களாக நம் கவனத்தைக் கவர்ந்துவருவது எல்லோருக்கும் தெரிந்ததே. இவ்விஷயத்தில் பெற்றோர்கள், சீர்திருத்த முறைகளைக் கொணர்ந்தவர்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடும். பொது ஜனங்களும் பள்ளிக்கூட அதிகாரிகளும் உபாத்தியாயர்களும் ஒத்துழைப்பதால் ஏற்படக் கூடும் நன்மைகளில் சிலவற்றை ஈண்டு குறிப்பிடக் கமிட்டி விரும்புகிறது.

## பாடத் திட்டம்.

பாட திட்டம், பள்ளிக்கூடத்தின் திறமையை உணர்த்தவல்லது. அத்திட்டம் பிள்ளைகளின் அவசியத்திற்குத் தகுந்தாற்போலவும், காலப் போக்கிற்கு ஏற்றவாறும் மாற்றப்படவேண்டும். பொது மக்களும், உபாத்தியாயர்களும் சந்தித்து சமூக முன்னேற்றத்திற்கும், தேச முன்னேற்றத்திற்கும் ஏற்றவாறு எத்தகைய பாடப் பகுதிகளை ஏற்படுத்தலாம் என்று தீர்மானித்தால் தான் நன்மை பயக்க வல்ல பாடங்கள் பள்ளிக்கூடங்களில் போதிக்க ஏதுவாகும். முன்பு, இவ்வாறு நடைபெறாததால் நம் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படும் பாடங்கள் சமூக வளர்ச்சிக்கும், தற்காலத் தேவைக்கும் ஏற்றதாய் அமையவில்லை. எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் அனேகமாய் ஒரே மாதிரியான முறை இருந்து வருகிறது.

## பள்ளிக்கூடங்களும் சமூகத்தொண்டும்

பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டுவது மாத்திரம் தற்காலப் பள்ளிக்கூடத்தின் நோக்கமன்று. ஊரிலுள்ளோரிடையே கல்வியறிவையும், உலகியலறிவையும் புகட்டி அவர்களை நல்ல தேச மக்களாகச் செய்வதும் அதன் கடமையாகும். ஆகவே மேனாடுகளில் அத்தகைய பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. வெகு சிலரே எழுதப்படிக்கத் தெரிந்த நம் நாட்டில் இம்மாதிரி பள்ளிக்கூடங்கள் மிகமிக அவசியம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும்.

இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள், கல்விமன்றமாக மட்டுமன்றி சமூகத் தொண்டு புரியும் இடங்களாகவும் இருக்கவேண்டும். 1922 ஆம் ஆண்டில் இந்தியாவில் அத்தகைய பள்ளிக்கூடங்களை காணப்படவில்லை என்று Missionary Commiision of Enquiry கூறுகிறது. இப்போதும் மாகாணத்தில் அப்படிப்பட்ட பள்ளிக்கூடம் ஒன்று கூட இல்லை என்று துணிந்து கூறலாம்.

போதிய பணம் கிடைத்தால், ஒவ்வொரு கிராமப் பள்ளிக்கூடத்திலும், ஊரார் கூடுவதற்கெனத் தனிக் கூடம் ஒன்று ஏற்படுத்தலாம். அக்கூடத்திற்குப் போகவரத் தனி வாசற்படி இருக்கவேண்டும். அங்குப்பொது மக்கள் கூடிக் கூட்டுறவு, விவசாயம், சுகாதாரம், ஆடு மாடுகள் வளர்த்தல், குடிசைத் தொழில்கள் ஆகிய பல உபயோகமான விஷயங்களை விவாதிக்கலாம். கற்றலிற் கேட்டல் நன்றன்றோ? பள்ளிக்கூடத் தோட்டம் நன்கு அமைக்கப்படவேண்டும். தோட்ட வேலைக்கென பாடக் குறிப்பில் தனிக் காலம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். பள்ளிக்கூடத் தோட்டத்தைப் போன்ற தோட்டத்தையும், உபாத்தியாயர் வீட்டைப்போல் வீட்டையும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கிராமவாசிகள் ஒவ்வொருவரும் விரும்பும்படி அவ்வளவு அழகாய்ப் பள்ளித் தோட்டமும், உபாத்தியாயர் வீடும் இருக்கவேண்டும். இன்னும், அத்தகைய பள்ளிக்கூடங்களால் கிராம வாசிகளுக்கு ஏற்படக் கூடும் நன்மைகள் கணக்கிலடங்கா. இவற்றிற்கெல்லாம் பிரதானம் பணம். அரசாங்கத்தார் தாராளமாகப் பணவுதவி செய்ய முன்வரவேண்டும்.

இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் தற்சமயம் நம் மாகாணத்தில் இல்லை என்பது உண்மையே. ஆனாலும் ஏற்கனவே உள்ள பள்ளிகூடங்கள் சமூக முன்னேற்றத்திற்கு ஒன்றுமே செய்ய முடியாதா? 'மனமுண்டானால் வழியுண்டு! முடியாதது என்பதே இல்லை. உதாரணமாக, கோடைவிடு முறையின்போது ஒவ்வொரு கலாசாலை மாணவனும் தத்தம் கிராமத்திற்குப் போய் கிராம வாசிகளின் அஞ்ஞானத்தைப் போக்க முயற்சிக்கலாம். இதற்குக் கிராம வாசிகளின் ஒத்துழைப்பு அவசியம்.

## வீட்டுப் பாடம்

பிள்ளைகளுக்கு வீட்டுப் பாடம் கொடுப்பதைப்பற்றி அபிப்பிராய பேதம் இருந்து வருகிறது. இங்கிலாந்தில் இது விஷயமாய் ஆராய்ச்சி நடந்தது. ஆராய்ச்சி செய்தவர்கள் 12 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமிகளுக்கு வீட்டுப் பாடமே கொடுக்கக் கூடாதென்றும் 12 வயதிற்கு மேல் 16 வயது வரையிலுள்ளவர்களுக்கு நாளொன்றுக்கு 1½ மணிக்கு மேற்படாமல் வீட்டுப் பாடம் கொடுக்கலாமென்றும் கூறினார்கள். அவ்வபிப்பிராயத்திற்குக் காரணம் யாதெனில், வீட்டுப் பாடம் அதிகம் கொடுத்தால், பிள்ளைகள் நாள் முழுதும் பள்ளிக்கூடத்திலிருந்து விட்டு சாயந்திரத்திலும் பள்ளிக்கூட வேலையைச் செய்வார்கள். அதனால் விளை



யாடவோ, அண்டை அயலாருடன் பழகி உலகானுபவம் பெறவோ சந்தர்ப்பம் கிடையாதுபோகும் என்ற பயமேயாகும். இந்த அபிப்பிராயம் சரியா என்று சொல்லக் கூடியவர்கள் பெற்றோர்களே.

இதைத் தவிர, இன்னும் சில முக்கிய விஷயங்களைக் கவனிக்கவும் பெற்றோர்களின் ஒத்துழைப்பு அவசியம். ஹிந்தியைக் கட்டாயபாடமாக வைப்பதைப்பற்றி எங்கும் விவாதம் நடந்துவருகிறது. அதைப்பற்றிப் பெற்றோர்கள் தங்கள் அபிப்பிராயத்தைக் கூறவேண்டும். பள்ளிக்கூடம் நடைபெறும் காலத்தில் மாறுதல் வேண்டுமென்று கூறப்படுகிறது. அதிலேயும் பெற்றோர்களின் ஒத்துழைப்பு அவசியம். கடைசியாகக் கல்விச் செலவைப் பற்றி ஆராய்வதில் அவர்கள் அபிப்பிராயம் மிகவும் இன்றியமையாதது.

## கல்வி.

எவ்வளவுக்கெவ்வளவு பணவுதவி இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு கல்வி முறை மேம்பாடடையும். இராணுவ தேசமான ஜப்பானே கல்விக்காக, இராணுவத்திற்குச் செலவிடும் அளவு பொருளைச் செலவழிக்கிறது. ஆனால் நம் மாகாணத்திலோ கல்வியைப் புறக்கணித்திருக்கிறார்கள் என்றே கூறலாம். இவ்வருஷ வரவுசெலவு திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட பணம் ரூ........................ மொத்த செலவு ரூ........................ வருங்காலத்திலும் கல்விக்காக அதிகப் பணம் செலவிடுவார்கள் என்று எண்ண இடமில்லை. 10 வருஷத்தில் எல்லோரையும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக்க வேண்டுமானால் சில கோடி ரூபாய்கள் செலவிட வேண்டிவரும். அதற்குத் தேவையான பணத்தைச் சர்க்கார் பெற அதிக வரி போட்டால் தான் முடியும்; பொது மக்கள் முகமலர்ச்சியுடன் அதிகவரி கொடுக்க முன் வரவேண்டும்.

ஒவ்வொரு ஊரிலும், ஊர்க்குடிகளும், பள்ளிக்கூட உபாத்தியாயர்களும், யஜமானர்களும் கூடிப் பள்ளிக்கூட வரவு செலவை ஆராயவேண்டும். எவ்வகையில் கிராமத்திலிருந்து பள்ளிக்கூடத்திற்குத் தேவையான பணத்தை அடையலாமென்று பார்க்கவேண்டும். உதாரணமாகப் பிள்ளைகள் கைத்தொழிலாலுண்டான சாமான்களை விற்றுப் பள்ளிக்கூடச் செலவை சமாளிக்கலாம்.

## உபாத்தியாயருக்கும், பெற்றோர்களுக்கும் உள்ள சம்பந்தம்

மேலே குறிக்கப்பட்ட விஷயங்களைக் கவனிக்க ஒவ்வொரு ஊரிலும் ஒரு பெற்றோர் சங்கம் இருக்கவேண்டும். அது பள்ளிக்கூடத்தைச் சார்ந்திருக்கவேண்டும். அடிக்கடி அச்சங்கம் உபாத்தியாயர் சங்கத்தைச் சந்தித்து வரவேண்டும். தவிர, ஒவ்வொரு பெற்றோரும் அடிக்கடி தத்தம் பிள்ளையின் உபாத்தியாயர்களைக் கண்டு அவர்களுக்கு பிள்ளையின் வீட்டு நடவடிக்கையைப்பற்றிக் கூறவேண்டும். உபாத்தியாயரும் பெற்றோ

ருக்குப்-பிள்ளை பள்ளிக்கூடத்தில் நடந்துகொள்ளும் விஷயத்தைப்பற்றித் தெரிவிப்பார். இதனால் விளையும் நன்மைகள் பல.

### நீங்கள் என்ன செய்யலாம்?

இவ்வாரத்தில் நடைபெறும் முக்கிய விவாதம் "கல்வியும், மாறும் இந்தியாவும்". மாறும் இந்தியா என்ற வார்த்தையும் அதனுள் அடங்கி இருக்கும் அர்த்தமும் உங்கள் மனத்தைவிட்டு அகலாமல் இவ்வாரம் முழுதும் இருக்கட்டும். இப்போதைய மாகாண அரசாங்கம் நம்முடையது—நம்மால் தேர்ந்தனுப்பப்பட்ட கக்ஷியார் அதிகாரம் வகிப்பது. அவர்கள் நம் குறைகளை நீக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, நல்ல பள்ளிக்கூடங்கள் வேண்டுமென்று கேளுங்கள். அமெரிக்கா ஐச்வரிய நிலையை அடைந்ததற்குக் காரணம், அங்குக் கல்வி அபிவிருத்தி ஆனதே. நாமும் அவ்வாறே மேன்மையடைய, நம்பள்ளிக்கூடங்கள் விருத்தியாகவேண்டும். நாம் நம்பிள்ளைகளுடனும், பிள்ளைகளுக்காகவும் உய்வோமாக?

### பள்ளிக்கூடங்களின் தேவைகள்

1. தலைமை வகிக்கப் போதனை முறையில் பயின்றவர்களும் நல்ல சம்பளம் பெறும் உபாத்தியாயர்களும்.
2. தற்கால நிலைமைக்கும், அவசியத்திற்கும் ஏற்ற பாடத் திட்டம்.
3. ஒவ்வொரு பிள்ளைக்கும், சுகாதாரம், கல்வி, வைத்தியம்.
4. சுத்தமானதும், பத்திரமானதும், வசதியுடையதுமான பள்ளிக்கூடக் கட்டடங்கள்.
5. அழகிய பள்ளிக்கூடத் தோட்டங்களும் விளையாட்டிடங்களும்.
6. நல்ல புத்தக சாலைகளும், ரசாயன சாலைகளும்.
7. மாணாக்கர்களுக்குக் கல்வி புகட்ட வேண்டும் பணத்திற்கு வரி விதித்தல்.

## குழந்தைகளின் கைவேலை

### பனை விசிறி




சாதாரணமாக நமது வீடுகளில் உபயோகித்து வரும் பனை விசிறியை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஒரு குருத்து பனை மட்டையைப் படிய வைத்து அதன் ஓரங்களை அதே ஈர்க்கினால் கட்டி விசிறிசெய்வது வழக்கம். பனை ஓலையைத் துண்டு துண்டாகக் கிழித்தும் ஒரு விசிறி செய்யலாம்.

நமது சட்டைப் பையிலேயே எடுத்துச் செல்லக் கூடிய ஒரு விசிறி செய்யக் கற்றுக்கொள்ள ஒரு குருத்து பனைமட்டையை எடுத்துக் கொள்வோம். அது அப்பொழுதுதான் மட்டைபோல் விரிந்துவரும் சமயத்தில் இருக்கவேண்டும். அது கைக்கு மிருதுவாயும் ஒரு இலேசான மஞ்சள் நிறமாயு மிருக்கும்.

அந்த மட்டையிலிருந்து 7 அங்குலம் நீளம், 1 அங்குலம் உள்ள ஓலைகள் கிழி. நன்றாய் வளர்ந்த மரத்து இளம் பட்டையிலிருந்து அகலமான ஓலைகள் கிழிக்க முடியும். அம்மாதிரி கிழிக்கப்பட்ட ஓலைகள் படம் 1 அல்லது 2 மாதிரியும் இருக்கலாம்.

பிறகு இம்மாதிரி 50, 60 துண்டுகளைச் சேர்த்து ஒரு கட்டாகவை. படம் 3 ல் காட்டியபடி அழகாக அவைகளை வெட்டிக் கொள்ளவேண்டும். ஒரு கத்தரிக்கோலாலேயே 3, 4 ஐச் சேர்த்து அழகான உருவாகக்கத்தரித்துக்கொள், அல்லது ஒரு பேனாக்கத்தியால் கூட இம்மாதிரி கிழித்துக் கொள்ளலாம். ஓலைகள் எல்லாவற்றையும் வளைவாக இருக்கும்படியும் கத்தரித்துக் கொள். (படம் 3 பார்க்கவும்). இம்மாதிரி 50, 60 யும் வெட்டிக்கொள். பிறகு எல்லாவற்றையும் சேர்த்து அடுக்கிக்கொள். படம் 3 ல் a ல் காட்டிய இடத்தில் ஒரு துளை செய்திருக்கிறதுபோல் எல்லா ஓலைகளிலும் ஓட்டை விழும்படி செய்துகொள். இது கொஞ்சம் கடின காரியமே. பழுக்கக் காய்ச்சின ஒரு கம்பியைக் கொண்டு இம்மாதிரி துவாரம் செய்து கொள்ளலாம். பஞ்ச் பிளையர் என்ற ஓட்டை செய்யும் கருவி இருந்தால் விசேஷமானது. எல்லா ஓலைகளையும் அடுக்கி வைத்துக்கொண்டு இப்பொழுது செய்யப்பட்ட ஓட்டை வழியாய் ஒரு கெட்டி நூல் சேரக் கோத்து தளதள என்று இருக்கும்படி முடிச்சு போடு.

முதலில் மேலேயுள்ள ஒரு ஓலையில் h, j யில் காட்டியபடி ஒரு தையல் போட்டுக்கொள். இந்த இடம் மேலேயிருந்து 2 அங்குலம் தூரம் இருக்கலாம். அடுத்த ஓலையில் அதே நூலால் (l) என்ற இடத்தில் சேர்த்துக்கொள். மறுபடி k வழியால் நூலைச்செலுத்தி இரண்டு ஓலைகளையும் நெருக்கமாகச் சேர். ஒன்றோடு ஒன்று அதிக நெருக்கமாக இருக்கவேண்டுவதில்லை. கொஞ்சம் இடைவெளியாயிருக்கும்படி நூலை சற்றே தளர்த்திக் கொள். இதேமாதிரி கோத்து படம் 5-ல் காட்டியபடி வட்டமாக வரும்படி செய்துகொள்.

பிறகு ஓலையின் நீளத்திற்கு 2 மடங்கு நீளமுள்ள இரண்டு மூங்கில் சிம்புகள் எடுத்துக்கொள். ஒரு சிம்பை ஓலை கட்டின் மேல் ஓலையுடனும் மற்றொன்றை அடி ஓலையுடன் சேர்த்து தைத்துக்கொள். படம் 5ல் காட்டியதுபோல் நீ செய்த விசிறி தோன்றும். இந்த விசிறியை நீ பையில் எடுத்துச் செல்லலாம். வேர்க்கும்பொழுது விசிறிக்கொள்ளலாம்.

*All rights reserved*

K. சுவர்ணவல்லி

# பத்திராதிபர் குறிப்பு

இவ்வருஷக் கல்வி வாரக்கொண்டாட்டம் அக்டோபர்மீ 25உ முதல் 31உ வரை நடைபெறும். மத்ய கல்வி வாரக் கமிட்டியார் 'கல்வியும் மாறுதலடையும் இந்தியாவும்' என்னும் விஷயத்தை முக்கியமாக ஆலோசிப்பது கல்வி வாரத்தின் நோக்கமென்று அறிவித்துள்ளார். நாடெங்கும் மாகாண சுவதந்திரம் அடைந்ததின் பொருட்டும் பொது ஜனங்களின் பிரதிநிதிகள் ராஜாங்கப் பொறுப்பை வகித்து, நமது மாகாண நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதின் பொருட்டும், பொது ஜனங்கள் ஒரு உற்சாகம் காட்டுவதுமல்லாமல் பல முன்னேற்றங்களையும் பல சௌகர்யங்களையும் எதிர்பார்க்கிறார்கள். ஒரு நாடு முன்னேற்றமடைய அந்நாட்டு மக்கள் கல்வி அறிவுள்ளவர்களாக இருக்கவேண்டும். நம் மாகாணத்திலோ கல்வியறிவில்லாதாரின் கணக்கு 100-க்கு 90 ஆகும். கல்வியறியாமை ஒழிந்த பின்னரே, நாடு முன்னேற்றமடைய முடியும். மது விலக்கு, தீண்டாமை ஒழிப்பது, ஜாதி சச்சரவுகளை அறவே ஒழிப்பது இன்னும் பல சமூக விர்த்திக்கு ஏற்றதான சீர்திருத்தங்கள் செவ்வனே நடைபெறவேண்டுமானால், நாட்டிலுள்ளோர் அனைவருக்கும் கல்விச் சுவை உண்டுபண்ணி, அறிவை விர்த்தி செய்வது அவசியம். இதைச் செய்வோரே சிறந்த தேச சேவை செய்வோராவர். கல்விச் சாலைகளே பெரும்பாலும் இத் தொண்டு செய்யமுடியும். நமது பள்ளிக்கூடங்களுக்கு வரும் பாலர்கள் சந்தோஷத்துடன் கல்வி கற்கும்படி செய்வது ஆசிரியர்கள் பொறுப்பே. தவிர, ஆசிரியர்கள் தங்கள் வேலை, பள்ளிக்கு வரும் மாணவர்களுக்கு போதிப்பதே என்று கருதுவது, இப்பொழுது நம் நாடு இருக்கும் ஸ்திதியில் தவறு என்றே சொல்ல வேண்டும். பெற்றோர்களைப் பள்ளிக்கு வரவழைத்து, நாம் அவர்கள் பாலர்களுக்கு என்ன செய்கிறோம் என்பதைக் காண்பித்து, பாலர்கள் பள்ளியில் ஐந்தாவது வகுப்பு வரையில் இருக்கவேண்டு மவசியத்தை எடுத்துக் காட்டினால், இப்பொழுது வேஸ்டேஜ் அல்லது வீண் செலவு, வீண் முயற்சி என்று சொல்லும் குறை ஒருவாறு நீங்கும். தவிர பெற்றோர்கள் சங்கம் ஒன்று ஸ்தாபித்து கிராமத்திலுள்ள தனவந்தர்களின் பேருதவியை நாடி, நமக்கு வேண்டிய சாதனங்களை செய்துக்கொள்ள முயலவேண்டும். தவிர கிராமங்களில் ஒரு நூல் நிலயம் ஸ்தாபனம் செய்து அக்கிராமத்திலுள்ள எழுதப் படிக்

கத் தெரியாத வயது முதிர்ந்தவர்களுக்கு எழுதவும், படிக்கவும் தேர்ச்சி பெற உதவவேண்டும். இப்படிச் செய்தால்தான் இப்பொழுது நமக்கு கிடைத்த ஸ்வதந்திரத்தை நாம் செவ்வனே அனுபவித்து, நாட்டின் அபிவிர்த்திக்குக் காரணமாவோம்.

கல்வி வாரத்தின் ஒரு முக்கிய நோக்கம் கல்வியின் மேன்மையையும் அவசியத்தையும் ஜனங்களுக்கு எடுத்துக்காட்டுவதே. ஆகவே, ஆரம்ப பள்ளிக்கூடங்கள் ஒவ்வொன்றும் இக்கல்வி வாரத்தை சிறப்புடன் கொண்டாடும் எனக் கருதுகிறோம். மத்ய கல்வி வாரக் கமிட்டியாரால் 'கல்வி வாரம் கொண்டாடுவதெப்படி' 'பெற்றோர்களுக்கு வேண்டுகோள் கல்வி வார வால் போஸ்டர்கள்' தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் ஒரு செட் Rs. 3—0—0 அனுப்பினால், உங்களுக்கு அனுப்பப்படும். உடனே மற்ற விவரங்களுக்குக் கல்வி வார கமிட்டி காரி[illegible] 41, [illegible]ங்காராசாரித்தெரு, திருவல்லிக்கேணிக்கு எழுதவும்.

[illegible] நூலகம் சென்னை-600 008
147645

---

## கல்வி வாரம்

| | | |
|---|---|---|
| திங்கள் | 25-10-37 | கல்வியும் மாறுதலடையும் இந்தியாவும் |
| செவ்வாய் | 26-10-37 | சுகவாழ்க்கையும் மாறுதலடையும் இந்தியாவும் |
| புதன் | 27-10-37 | உலகச் சிநேகிதம் |
| வியாழன் | 28-10-37 | வீடு, கல்விச்சாலை |
| வெள்ளி | 29-10-37 | சமூகம், சமூகக்கல்வி |
| சனி | 30-10-37 | புதுமுறைக் கல்வி |
| ஞாயிறு | 31-10-37 | ஆசிரியரும், மாறுதலடையும் இந்தியாவும். |

JL
T15 M21, N36
N37.2.6-8

*Wanted publishers to purchase the following manuscripts written by C. S. Ramaswamy Iyer, Retired Teacher and author of Child's History of India, Heroines of Ind, etc.*

| | | |
|---|---|---|
| English Conversation Book I | | for Class IV |
| do. do. Book II | | do. V |
| Arithmetic for Beginners | ... ... | in Tamil |
| Domestic Hygiene | ... ... | in Tamil |
| Stories from Indian History | ... ... | for Class V |
| Tamil Primer for Beginners | ... ... | ... |

For terms, please write for outright purchase of the Copyright of the above

to The Editor of this Magazine or to:

C. S. RAMASWAMY IYER (Retired Teacher)

**2/12-A, Alangatha Pillai Street : : Triplicane, Madras.**

A NEW SERIES OF ENGLISH READERS FOR SCHOOLS IN INDIA

**The Coronation English Readers**

**Edited by Prof. J. C. ROLLO, M.A.**

*Principal, Maharaja's College, Mysore*

| | | |
|---|---|---|
| Primer, Part I | (3rd Class) | Annas 3 |
| Primer, Part II | (4th Class) | Annas 3 |
| Primer, Parts I & II | | Annas 6 |
| Book I | (5th Class) | Annas 6 |
| Book II | (1st Form) | Annas 8 |

Books III & IV will be ready shortly.

The above series of English Readers are the result of thorough study of the present day needs of pupils learning English at the early stages. The books are well got up with many illustrations. A perusal of the books will convince any teacher of their special merits.

Applications for specimens from teachers will be attended to immediately.

**B. G. PAUL & Co., Educational Publishers**

13, Francis Joseph Street, G.T., MADRAS.

Regd. No. M. 3473


நீங்கள் செலுத்துவது

## மாதம் ஒரு ரூபாய்

உங்கள்

வார்சுகளுக்குக் கிடைப்பது

**ரூ. 250-லிருந்து ரூ. 375-வரையில்**

## தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதியில்

உடனே சேருங்கள்

41, சிங்காராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதருவ்ஸ். கௌரவ காரியதரிசி.



Printed by K. Sadagopachariar at the Liberty Press, 7, Sunkurama Chetty St., G.T., & Published by Mr. M. S. Sabhesan, M.A. For The South India Teachers' Union, 41, Singarachari St., Triplicane, Madras.


23 //23

தொகுதி 2] [பகுதி 7

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)


ஈஸ்வர ஞு ஐப்பசி மீ
- NOVEMBER 1937 -


138


பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

41, சிங்காராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதருஸ்.

வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதியின் விலை 0—4—0

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கிராமப் பாடசாலைகளில் பிற்காலப் பிரஜைகளைப் பயிற்றுவித்தல் .... .... —Rev. L. L. Lorbeer துரை | 181 |
| 2. | மாறுதல் அடையும் இந்தியாவின் கல்விப் பயிற்சி .... —H. A. பாப்லி | 193 |
| 3. | தென்னிந்திய கல்வி வாரக் கொண்டாட்டம் .... | 196 |
| 4. | 5-வது ஆசிரிய மானேஜர்கள் மகாநாடு .... | 198 |
| 5. | பத்திராதிபர் குறிப்பு .... .... .... | 202 |



## கௌரவப் பத்திராதிபர்கள்

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. ஷால்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்

—நிர்வாகப் பத்திரிகாசிரியர்

# பாலர் கல்வி

| தொகுதி 2 | 1937 ௵ நவம்பர் ௴<br>ஈஸ்வர ௵ ஐப்பசி ௴ | பகுதி 7 |
|---|---|---|

8-DEC 1937
MADRAS
சென்னை-600 008.

## கிராமப் பாடசாலைகளில் பிற்காலப் பிரஜைகளைப் பயிற்றுவித்தல்.

Rev. L. L. Lorbeer. துரை அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள கட்டுரையின் மொழி பெயர்ப்பு.

தமது சமூக, தேசீய க்ஷேமங்களை முதன்மையானதாகக் கருதக் கூடிய உத்தம பிரஜைகள் வேண்டுமென்று மற்றைத் தேசங்கள் ஆசைப் படுவது போலவே இந்தியா தேசமும் ஆசைப் படுகின்றது. வீட்டிலும், பாடசாலையிலும், ஆலயத்திலும் அளிக்கப்படுகிற பயிற்சியினால்தான் உத்தமப் பிரஜைகளை உண்டு பண்ணக்கூடும். ஆனால், பாவம்! கிராமப் பெற்றோரில் மிகச்சிலரே தமது பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட நற்பயிற்சியைக் கொடுக்கக் கூடிய சாதகமுள்ளவர்கள். ஜனத்தொகையில் நூற்றுக்கு மூன்று பேரே ஆலயத்தில் அளிக்கப்படும் பயிற்சியைப் பெறத்தக்கவர்களா யிருக்கின்றார்கள். ஆகவே பாடசாலைகள்தான் இந்தியாவில் இந்தப் பயிற்சியைச் செய்யவேண்டிய பொறுப்புடையவைகளா யிருக்கின்றன. சென்ற ஆண்டில் இந்தியாவிலே பள்ளிக்கூடத்துக்குப்போகும் ஆறு முதல் பதினொரு வயதுடைய பிள்ளைகளில் ஆண்கள் ஐம்பது சதவீதமும் பெண்கள் பதினொரு சதவீதமும் பாடசாலைக்குச் சென்று படித்தார்கள். இவ்வாறு பிள்ளைகளில் மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்குப்பேரே பள்ளிக்கூடத்திற்குப் போகின்றார்கள். இந்த மூன்றிலொரு பங்குப் பேருங்கூட எவ்வளவு காலம் அங்கிருந்து படிக்கிறார்கள்? 1935ம் வருஷத்திய மதுரை ஜில்லா அறிக்கையில் எலிமெண்டரிப்பாடசாலைப் பிள்ளைகளில் நூற்றுக்கு ஐம்பது பேர் முதல் வகுப்பில்தானிருக்கிறார்களென்றும், மீதியில்|பாதிப்பேர் இரண்டாம் வகுப்பில்இருக்கிறார்களென்றும் கண்டிருக்கிறது. பொதுவாகப் பெண்கள் பையன்களைக் காட்டிலும் மிகச் சீக்கிரமாய்ப் பாடசாலையை விட்டுநீங்கி விடுகிறார்கள். ஒரு வேளை தற்காலம் இப்படி இடையில் பாடசாலையை விட்டுவிடும் குறை மதுரையிலும் மற்றும் ஜில்லாக்களிலும் ஏகதேசம் சுமாராக

147445



இருக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் வாஸ்தவம். என்னவென்றால் கேவலம் எலிமெண்டரிப் பாடசாலைப் பிள்ளைகளுங்கூட மிகச் சில வருஷங்களில் பள்ளிக்கூடத்திற்குப் போவதை விட்டு விடுகிறார்கள். இந்தப் பிரச்சனை அதி சீக்கிரத்தில் ஆலோசித்து முடிவு செய்யப் படவேண்டும். முதலிலே பிள்ளைகளுக்கு வாசகம், எழுத்து, கணக்கு ஆகிய மூன்றையும் கற்பிப்போம்; பின்பு அவர்களை நல்ல பிரஜைகளாகும்படி பயிற்றுவிப்போம் என்போமானால், அந்தோ! நமது பிள்ளைகள்—ஆண்களும் பெண்களும்—நமது கைகளை விட்டுக் கடந்து போய் விடுவார்கள். ஆகலால் இப்பொழுதே அவர்கள் முதல் வகுப்பில் சேர்ந்தவுடனேயே, அவர்கள் தேசத்திற் சிறந்த ஊழியர்களாகும்படி பயிற்றுவிக்கத் தவறக்கூடாது.

## எவ்வாறு அவ்வளவு இளமையிலேயே அவர்களைப் பயிற்றுவிக்கலாம்?

1. ஒரு நல்ல பிரஜை எவ்விஷயத்தையும் சுயமாகவிருந்து நன்கு ஆலோசித்து ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டும். எல்லாச் சமூகங்களிலும் சுய நிர்ணயமின்றி மற்றவர்களைக் குருட்டுத்தனமாய்ப் பின் பற்றுவோர் மிகப் பலர் உளர். நமது கிராம வாசிகளில் எத்தனைபேர் சுய நிர்ணயம் செய்யும் சக்தியுடையவர்கள்? அவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பெண்களும் நூற்றுக்குப்பத்து ஆண்களுமாவது யாராவது மற்றவர்கள் தங்களுக்கு வழி காட்டினால் கண்ணைமூடிக்கொண்டு அவர்கள் பின்னாலே செல்லக்கூடிய சுபவாமுடையவர்களல்லவா? நிற்க, எடுத்த எண்ணாயிரத்திற்கும் மற்றவர்களைச் சார்ந்தே ஒழுகும் இந்தத் தீய ஒழுக்கத்தை எப்படிக் கட்டோடே ஒழிப்பது! இளமையிலேயே பிள்ளைகள் யோசித்து நிர்ணயிக்கும்படி அவர்களைப் பழக்க வேண்டுவது அவசியம்.

சாதாரணமாக, முதல் வகுப்புப் பிள்ளைகளுக்கு இரண்டு படங்களைக் காட்டி 'ஏதாவது ஒரு படத்தை உங்கள் வகுப்பறையில் தொங்க வைக்கலாம். உங்களுக்கு எந்தப் படம் வேண்டும்' என்று கேட்டால் பிள்ளைகள் வெறிக்க வெறிக்கப் பார்த்து விட்டு, தங்கள் ஆசிரியரே தீர்மானித்துச் சொல்லட்டுமே என்று சும்மா இருப்பார்கள் ஆனால் ஆசிரியராகிய நாம் அதைச் சொல்லிவிடாமல் பிள்ளைகளே அதை யோசித்துச் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்தி ஆலோசிப்பதற்குச் சிறிது நேரமுங் கொடுத்து, ஒவ்வொரு படத்தின் சார்பாகவும் வோட்டு எடுக்க வேண்டும். வாயினினால் வோட்டுக் கொடுப்பதைவிட எழுத்து மூலமாய்க் கொடுக்கும்படி சொன்னால் ஒருவன் எழுதுவது மற்றவனுக்குத் தெரியாதல்லவா? இப்படி ஒரு தடவை செய்தபின் மற்றொரு தடவை வேறு இரு பொருள்களைக் காட்டித் தீர்மானஞ் செய்யச் சொன்னால் அவர்கள் நமது தீர்மானத்தைச் சொல்வதற்கு முன்னைவிட இப்பொழுது அதிகமாகத் தயாராயிருப்பார்களல்லவா? மற்றொரு சமயம் ஆசிரியர் பிள்ளைகளிடம் 'அடுத்த சனிக்கிழமை மலை, நதி, பஞ்சாபீஸ் இவற்றில் எதைப் பார்க்கப் போகலாம்' என்று கேட்டால் ஒவ்வொரு



சிறுவனும் ஒவ்வொன்றையும் பற்றி வெவ்வேறு தீர்மானம் சொல்வானல்லவா. இப்படியே பின்னும் ஆசிரியர் பிள்ளைகளிடம் 'நான் ஒரு பென்சில் கண்டெடுத்தேன். அதை நானே வைத்துக் கொள்வது சரியா பென்சில் இல்லாத ஒரு சினேகிதனுக்குக் கொடுக்கிறது சரியா அல்லது எல்லாப் பிள்ளைகள் மத்தியிலும் அதைக் கொண்டுவந்து உண்மையாகவே பென்சிலைத் தொலைத்து விட்டவனிடம் அதைச் சேர்ப்பது சரியா? என்று கேட்டால் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தனித் தனியாக யோசித்து வெவ்வேறு தீர்மானத்துக்கு வருவார்களல்லவா?

பத்து வருஷங்களுக்குமுன் ஒரு ஹைஸ்கூலில் ஒரு புட்பால் காப்டனைத் தெரிந் தெடுக்கும்படி மாணவர்களுக்குச் சொல்லப்பட்டது. அந்தப் பதவிக்கு மூன்று மாணவருடைய பெயர் பிரேரேபிக்கப் பட்டது. கிட்டத் தட்ட எல்லா மாணவர்களும் சற்றும் யோசனை யின்றி முதலில் பிரேரேபிக்கப் பட்ட பேருக்கு வோட்டு செய்தார்கள். குருட்டு வோட்டர்கள் இவர்களே. பிற்காலத்தில் படுமோசமான பிரஜைகளும் இவர்களே! இதைக் கண்டு அப்பாடசாலைப் பிரின்ஸ்பால் மற்றொரு முறை இப்படி அவர்களுக்குள் தேர்தல் வந்தபோது நல்ல பயிற்சி கொடுத்தார். எப்படியென்றால் பிரேரேபிக்கப்பட்ட நாலு பேர்களையும் கரும் பலகையில் எழுதிய பின் யோசித்துத் தீர்மானிக்கும்படி மாணவர்களுக்கு அவசாகங் கொடுத்தார். சில மாணவர்கள் அங்கு மிங்கும் திரும்பிப் பார்த்து யாராவது தாங்கள் தீர்மானித்த பெயரைத் தங்களுக்குச் சொல்ல மாட்டார்களா என்று எதிர் பார்த்தார்கள். பிரின்ஸ்பல் அவர்களைக் கண்டித்துச் சுய நிர்ணயம் செய்யும்படி ஏவினார். அப்புறம் மாணவர்கள் கிரமமாக யோசித்துப் பிறரைச் சாராமலே தங்கள் தீர்மானத்தின்படி வோட் செய்தார்கள். இவ்வாறே ஹைஸ்கூல்களில் மட்டுமல்ல, ஆரம்பப் பாடசாலைகளிலும் இப்படிப்பட்ட பயிற்சியைக் கொடுத்து அவர்கள் தமது பிற்கால வாழ்க்கையில், விஷயங்களை யோசித்துச் சுயமாகவே தீர்மானஞ் செய்யும்படி பழக்கப் படுத்தி விடலாம்.

உதாரணமாக நான் ஆரம்பப் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த ஒரு சிறுவனை அறிவேன். அச்சிறுவன் இப்பொழுது Secondary Grade படித்த ஒரு உபாத்தியாயாயிருக்கிறார். அவர் சமீபத்தில் "நான் ஒரு இளம் விதவையை மணம் செய்ய உத்தேசிக்கிறேன். இங்கே இருப்பவர்கள் என் உத்தேசத்திற்குச் சாதமாகவும் பாதகமாகவும் வெவ்வேறு அபிப்பிராயங்கள் சொல்லுகிறார்கள். உங்கள் அபிப்பிராயம் என்ன" என்று எழுதிக் கேட்டிருந்தார். நான் தற்செயலாக அதற்குச் சில நாட்களுக்குப் பின் அந்த இளம் விதவையைப் பார்க்க நேரிட்டபோது ஷெ உபாத்தியாயர் கொண்டுள்ள உத்தேசம் மிகவும் நியாயமானதுதான் என்று அபிப்பிராயப்பட்டு ஆனந்த மடைந்தேன். இவ்வாறு நமது நாட்டிலுள்ள எல்லா இளைஞர்களும் பிறரால் எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் சுயநலங் கருதாமல் பொதுஜன நலத்தையே கருதித் தீர்மானத்து

டன் வாழ்க்கை செய்யத் துணிந்து விட்டால் நமது நாடு உத்தமமான பிரஜைகள் நிரம்பிப் புனித மடைந்து விடுமன்றோ!

2. நல்ல பிரஜை தன் சமூகத்தின் சுகாதாரத்தைப் பேணிக் கொள்ள வேண்டும். பாடசாலைப் பையன்கள் தமது அயலகத்தருடைய சுகத்தைக் காப்பதற்கு ஏதுவாக அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டியது அவசியம். கிராமப் பெற்றோர் சுத்தம், சுகம் இவற்றைப் பற்றி அக்கறை உடையவர்கள் அல்ல. அவர்கள் தமது பிள்ளைகளுக்கு இவ்விஷயத்தில் முன் மாதிரியாயிருப்பார்கள் என்று எதிர் பார்க்க முடியாது. ஒரு பாடசாலைக் கக்கூசில் இங்கே எவ்வாறு சுத்தமாக இருக்க வேண்டுமென்று நீ விரும்புவாயோ அவ்வாறே மற்றவர்களுக்கும் இருக்கும்படி சுத்தமாக வைத்துவிட்டுச் செல்க' என்று வரையப் பட்டிருந்தது. ஒரு உபாத்தியாயர் தாம் உமிழும் இடத்தை மண்ணால் மூடி வைத்துவிட்டுச் செல்வது வழக்கம். இதைப் பார்த்த அவருடைய பிள்ளைகளும் அந்த நல்ல வழக்கத்தைப் பின்பற்றினார்கள். ஒரு கிராமத்தில் சுற்றுச் சுவர் கட்டப்படாத கிணறு ஒன்று இருந்தது. வெளியிலுள்ள அசுத்த ஜலமெல்லாம் அதற்குள் பாய்ந்தது. என்றாலும் கிராம வாசிகளுக்கு, கிணற்றைச் சுத்தமாய் வைத்துக்கொள்ள ஆத்திரமில்லை. ஆனால் படித்த வாலிபர்களின் சங்க மொன்று அக்கிராமத்தில் இருந்தது. அந்தச் சங்கத்தார் அசுத்த ஜல பானத்தின் தீமைகளை எற்கனவே பள்ளிக்கூடத்தில் படித்தறிந்தவர்களாதலின் கிராமத்தாரைத் தூண்டிக் கிணற்றைச் சீர்ப்படுத்தினார்கள். கிராம ஆசிரியர்கள் சாதுரியமுடையவர்களேயானால் தமது பிள்ளைகள் மூலம் கிராமப் பெற்றோர்க்குள் சமூக ஒற்றுமையை உண்டுபண்ணிக் கிராமத்தின் க்ஷேமத்தை வளர்ப்பிக்கலாம்.

விஷ வியாதிகள் ஆரம்பிக்கிற காலங்களில் 'சிறிது முன் ஜாக்கிரதையாக இருந்திருந்தால் இப்படி அபாயம் வந்திராதே' என்று எண்ணி வருந்துகின்றோம். இங்ஙனம் முன் ஜாக்கிரதையாக இருப்பதால் தான் பெரும்பாலும் போர்டிங் பாடசாலைகளில் விஷவியாதிகள் தலை காட்டுவதில்லை என்னலாம். பல வருஷங்களுக்கு முன் பசுமலையைச் சுற்றியிருக்கும் கிராமங்களில் பிளேக் நோய் பரவினது. ஒரு எலிவால் கொண்டு வருகிறவனுக்கு ஒரு அணா என்று திட்டம்செய்ததின்பேரில் சிறியோரும் பெரியோருமான மாணவர்கள் எல்லா எலிகளையும் துவம்சம் செய்தும், தங்கள் காம்பவுண்டைச் சுத்தமாகக் காத்தும் பிளேக் வரவொட்டாமல் தடுத்துவிட்டார்கள். அன்றியும் எல்லாரும் தைரியமாக ஊசியும் போட்டுக் கொண்டார்கள். இவ்வாறு பிள்ளைகளுக்கும் பயிற்சி கொடுத்தால் வரக் கூடிய அநேக விஷ வியாதிகளைத் தடுத்துவிடலா மன்றோ?

பல வருஷங்களுக்குமுன் மதுரை ஜில்லா ஆசிரியர்களிற் பலர் குஷ்டரோகிகளாய் இருந்தார்கள். அவர்கள் ரோகம் மற்றவர்களையும் பிடித்து



வருத்தியது. ஒரு உபாத்தியாயரைக் குஷ்டரோக ஆஸ்பத்திரிக்குப் போகும்படி ஆலோசனை கூறியபோது, 'அக்காலம் குஷ்டரோகிகளைக் குணமாக்கின கிறிஸ்துவுக்குச் சித்தமானால் இப்போது என்னையும் சுகமாக்குவார். நீங்கள் ஏன் என் விசுவாசத்தைக் கெடுக்கப்பார்க்கிறீர்கள்' என்று சொல்லி மறுத்துவிட்டார். திண்டுக்கல் எலிமென்டரிப் பாடசாலையில் தேவசிகாமணி என்றொரு சிறுவன் இருந்தான். அங்கு ஒருநாள் குஷ்டரோகத்தைப்பற்றிச் சொல்லப்பட்டது. உடனே வைத்தியரிடம் சென்று தன் காலிலிருந்து வெள்ளைப் பொட்டு ஒன்றைக் காட்டி, 'ஐயா இதுவும் குஷ்டந்தானா?' என்று கேட்டான். வைத்தியர் 'ஆம்' என்றார். அநாதைப் பையன் தேவசிகாமணி 70 மைலுக்கு அப்பாலிருந்த ஆஸ்பத்திரிக்குத் தனிமையாய்ச் சென்று, சுகமடைந்து 6 மாதங்களுக்குப் பின் அகம் குழைய முகத்தில் புன்னகை தவழத் திரும்பிவந்தான். சமீபத்தில் அவனைப் பார்த்தபோதும் அவன் பூரண சுகத்துடனே தான் இருக்கின்றான். இந்தத் தேவசிகாமணியுடன் அந்தப் பெரிய ஆசிரியரை ஒப்பிட்டுப் பாருங்கள்! சாந்தமாகப் பயிற்றுவித்தால் ஒரு சிறுபிள்ளையும் பெரியவர்களை வழி நடத்தும்.

ஈரோடு மாடல் ஸ்கூலில் 4 ம் வகுப்புப் பிள்ளைகள் தான் மருந்துச் சாமான்களுக்கு உக்கிராணக்காரராய் இருக்கிறார்கள். அவர்களே காயங்களைக் கட்டி, முதல் உதவிசெய்யப் பழக்கப்படுகிறார்கள். பிள்ளைகள் உத்தமப் பிரஜைகளாக வளர்வதற்கு இது எவ்வளவு முதல்தரமான

பயிற்சி!

3. நல்ல பிரஜை சண்டை சச்சரவுகளைச் சமாதானம் செய்கிறவனாய் இருக்கவேண்டும். தென்னிந்தியக் கிராமங்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து கிராமங்கள் கட்சிகள் விரோதங்கள் சண்டைகளால் சீர்குலைந்து கிடக்கின்றன. இவைகளால் கொலைகளும், பணச்செலவும் உண்டாவது சகஜமாய் இருக்கிறது. இரண்டு பெண்பிள்ளைகள் ஒருவரை யொருவர் ஏசிவிட்டார்கள் அல்லது இருபையன்கள் தமக்குள் அடிபிடி சண்டை செய்து கொண்டார்கள் என்றால், அவர்கள் வகுப்பிலிருந்தே பக்ஷபாதமில்லாத சிலரைப் பஞ்சாயத்தாராக நியமித்து அவர்களே குற்றவாளிக்குத் தண்டனையைத் தீர்மானிக்க ஏற்பாடு செய்யலாம். அவசியமென்று கண்டால் உபாத்தியாயர் சமயோசிதமாக அவர்களுக்கு உதவியும் செய்ய லாம். இவ்வாறு தான் சமாதானம் செய்யும் சத் புருஷர்களை உற்பத்தி செய்யலாம். ஈரோடு மாடல் ஸ்கூலில் உள்ள ஒவ்வொரு வகுப்புப்பிள்ளைகளும் தங்களில் ஒருவனைப் பிரமுகனாக நியமித்துக்கொண்டு தங்கள் வழக்குகளை எல்லாம் அவனிடம் கொண்டுபோய் அவன் தீர்மானிக்கிறபடியே கட்டுப்பட்டு நடப்பார்கள். மதுரை ஜில்லாவில் கோபி நாய்க்கன் பட்டியில் முதல் தரமான எலிமென்டரிப் பாடசாலை இருக்கின்றது. அந்தப் பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயர் தமது பையன்கள் தங்கள்

சண்டை சச்சரவுகளைத் தாங்களே சமாதானமாக முடித்துக்கொள்ளும்படி பழக்குகிறார். இதே முறையைக் கிராமத்திலுள்ள பெரிய பிள்ளைகளிடத்திலும் கையாளுகிறார். இதனால் கடந்த மூன்று வருஷங்களாக அந்தக் கிராமத்தில் சமாதானம் நிலவி வருகிறதென்று செய்தி கிடைத்திருக்கிறது. இவ்வாறு ஒரு கிராமப் பாடசாலை அந்தக் கிராமத்தை வழி நடத்துகிறது. சமாதானம் பண்ணுகிறவர்கள் சிறியோராயினும் பெரியோராயினும் அவர்கள் பாக்கியவான்களே.

4. **நல்ல பிரஜை தனது கிராமத்தின் வாழ்க்கை, சுமுகமாக நடைபெறும் வுத்திரவாதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.** ரஸ்தாக்கள், சாக்கடைகள், தபால் சேவகன், அம்மை குத்துகிறவன், கிராமமுனிசீப், கர்ணம் இவைகளெல்லாம் சீராக வேலை செய்கின்றனவாவென்று கவனிக்க வேண்டும். ஒருநாள் காலை 8-மணிக்கு பள்ளிக்கூடத்திற்குச் சென்று கொண்டிருந்த ஒரு சிறுமியைச் சந்தித்தேன். உங்களுக்கு வகுப்பு எத்தனை மணிக்கு ஆரம்பிக்குமென்று கேட்டேன். 9-மணிக்கு என்றாள். ஏன் இவ்வளவு முன்னமே போகிறாய் என்றேன். எங்கள் வகுப்பில் எனக்குக் கரும்பலகை உத்தியோகமென்றாள். அது என்ன உத்தியோகம் எனக்கு விளங்கவில்லையே என்றேன். நான் ஏற்கனவே போய்க் கரும்பலகையைத் துடைத்துச் சாக்பீஸ், டஸ்டர் இவைகளெல்லாவற்றையும் ஆயத்தமாய் வைத்திருக்க வேண்டுமென்றாள். மேலும் நான் அவளிடம் விசாரித்துக் கொண்டே போனபோது 25-பிள்ளைகளையுடைய முதல் வகுப்பில் சுமார் ஒரு டஜன் உத்தியோகஸ்தர்களிருந்தார்கள். ஒரு பிள்ளைக்கு முயல்களைக் கண்காணிக்கும் உத்தியோகம். ஒரு பிள்ளைக்கு வாசகசாலையைக் கவனிக்கும் உத்தியோகம். இப்படியே மற்ற பிள்ளைகளுக்கும் வெவ்வேறு உத்தியோகம். இப்படி உத்தியோகங்களைக் கொடுப்பதினால் பிள்ளைகள் இளமையிலேயே உத்திரவாதத்தை உணரும் பயிற்சி அடைகிறார்கள். மேற்சொன்னவாறு சிறுமிகளைப் பயிற்றுவித்த உபாத்தினி அப்பாடசாலைக்குத் தலைவி ஆனபின்பும் முதல் வகுப்புக்குப் படித்துக் கொடுப்பதை விடவில்லை. ஆரம்பம் சரியாயிருந்தால் எல்லாம் சரியாய்ப் போய்க்கொண்டிருக்குமென்பது அவளுடைய கொள்கை.

ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் வகுப்புக்கு வரப் பிந்தி விட்டாலும் பிள்ளைகளே பாடத்தை ஆரம்பித்து விடுவார்கள். கிரமமாகப் படித்துக் கொண்டிருப்பார்கள்.

மற்றொரு பள்ளிக்கூடத்தில் பெரிய பெண்கள் சிறிய பெண்களை அழைத்துக் கொண்டுவரும் பொறுப்பை நிர்வகித்து வருகிறார்கள். பாடசாலைத் தோட்டம், மியூசியம், ஒழுக்கம், சுத்தம் இவற்றைச் சரியாக வைத்துக்கொள்ளும் பொறுப்பில் தங்களுக்கும் ஒரு பங்கு இருப்பதை உணரும்போது சிறுவர் சிறுமிகள் அடையும் ஆனந்தத்திற்கு அளவில்லை. இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் இருக்கும் கிராமங்களின் வாழ்க்கை பிற்



காலத்தில் சுமுகமாய் நடக்கும் என்பதற்கு ஆட்சேபணை இல்லை. கிறிஸ்து, ககாவா, லிங்கன் முதலிய சிரேஷ்டமான புருஷோத்தமர்களெல்லாம் இளம் பருவத்திலேயே தங்கள் குடும்ப வாழ்க்கையின் உத்தரவாதத்தை ஏற்றுக்கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்பட்டபடியினால் தான் அவர்கள் இன்று வான ஜோதிகளைப்போல லோகமண்டலத்தில் விளங்கிப் பிரகாசிக்கிறார்கள்.

5. **நல்ல பிரஜை தன் கிராமத்தில் நாகரிகத்தில் பிற்போக்கானவர்களையும் பயிற்றுவிக்கப் பிரயாசைப்படவேண்டும்.** அதாவது கால் நடைகளை விருத்திசெய்வது, நல்ல விதைகள், உரங்கள் வாங்குதல், கால தேச வர்த்தமானங்களை அறிதல் ஆகிய இவற்றில் தனக்கிருக்கும் அறிவை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும். பள்ளிக்கூடத்தில் பாடம் தெரிந்த பிள்ளைகள் தெரியாத பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்கும்படி தூண்டலாம். ஒரு மனக்கணக்கைச் சரியாய்ச் செய்துவிட்ட பையனைக் கொண்டு செய்யாத மற்றப்பையன்களுக்கு விளக்கிக்காட்டச் சொல்லலாம். பிள்ளைகள் ஒருவருக்கொருவர் உதவிசெய்வதும் ஒருவருக்கொருவர் கற்பிப்பதும் அவர்களுக்கு மிகப்பிரியம்.

ஆனால் கர்னாடகமான சில பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் முதுகுக்கு முதுகு திரும்பி நின்று அப்பியாசஞ் செய்வார்கள். ஒருவன் மற்றவனைப் பார்த்து எழுதாமல் தடுக்கவும், சிலர் உபாத்தியாயரை ஏமாற்றி விடாமலும் இருக்க இம்முறை கையாளப்படுகிறது. ஆனால் இத்துர்ப் பழக்கத்தினால் ஏதோ அரைகுறைச் சந்தர்ப்பங்கள் கிடைத்துவிட்டாலும் அப்போது மற்றவனை ஏமாற்றும் கெட்ட பழக்கம் உண்டாகவே ஏதுவாகிறது.

ஒரு உபாத்தியாயர் 4-ம் வகுப்பிற்குப் பாடம் நடத்தினார்.

"மாணிக்கம் புத்தகத்திலிருந்து 10 வார்த்தைகள் வாசிப்பான், நீங்கள் அவைகளை எழுதுங்கள். பின்பு அவன் அந்த வார்த்தைகளுக்கு எழுத்துக்கூட்டிச் சொல்லுவான். நீங்கள் உங்கள் விடைகளை உங்கள் இஷ்டப்படி நீங்களே திருத்தலாம். அல்லது அடுத்தவனிடம் கொடுத்துத் திருத்தலாம் கடைசியில் நீங்களே எந்தெந்த வார்த்தைகளை யெல்லாம் தப்பிதமாக எழுதினீர்களென்பதை அறிந்து சரியாக எழுதப்படித்துக் கொள்ள வேண்டும்" என்று சொன்னார். இதனால் பிள்ளைகளுக்கு ஏமாற்றும் சுபாவம் உண்டாகாமல் தங்கள் பிழைகளைத் தாங்களே கண்டு திருத்திக் கொள்ளக்கூடிய குணம் உண்டாகக்கூடும், அதே பள்ளிக்கூடத்தில் 5-ம் வகுப்புப் பிள்ளைகள் மூன்று மூன்று பேராய்ச் சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவிசெய்து ஒரு கணக்கைப்போட்டுக் கொண்டிருந்தார்கள். 6-ம் வகுப்புப் பிள்ளைகள் யாவரும் சேர்ந்து இந்தியாவின் ஆகாய மார்க்கங்களைக் காண்பிக்கக்கூடிய பெரிய படம் ஒன்றைத் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். இங்ஙனம் மாணவர்கள் தங்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் உதவிசெய்யும் உபாத்தியாயர்களாக இருக்கும் பாடசாலை மிகவும்

அதிர்ஷ்டம் உடையதென்றே கூறல் வேண்டும். மேற்கூறிய முறைகளைக் கையாண்டு நமது கிராமப் பாடசாலைப் பிள்ளைகள் பிற்போக்கடைந்தவர்களுக்கு உதவிசெய்யும் சேவகர்களாயும் கதியற்வர்களுக்குக் கற்பிக்கும் நல்லாசிரியர்களாகவும் விளங்கும்படி அவர்களைப்பயிற்றுவிக்க வேண்டும்.

6. நல்ல பிரஜை மெஜாரிட்டிக் கட்சியார் தீர்மானித்தபடி இணங்கி நடக்கவேண்டும். அநேக தேசங்களில் ஜன நாயகத்துவம் நசுக்கப்படுவதைக் காண்கிறோம். ஆனால் இந்தியா ஜன நாயகத்துவத்திற்கு ஏதுவாக வளர்ந்து வருகிறது. இனி வருங்காலத்தில் இந்தியாவில் ஜன நாயகத்துவம் தழைக்கவேண்டுமென்றால் பாடசாலைகளில் அதற்குரிய பயிற்சிகளைக் கொடுக்கவேண்டும். 8, 10, 12-வயதுடைய சிறுவர் சிறுமிகள் ஒரு காரியத்தைத் திட்டமாய் ஆலோசித்து அதற்குச் சாதகமாகவும் பாதகமாகவும் வோட் எடுத்து மெஜாரிட்டித் தீர்மானத்தின்படி இணங்கி நடக்க அவர்களைப் பயிற்றுவிக்கலாமா? ஆம், பயிற்றுவிக்கலாம். ஆனால் ஆரம்பத்திலேயே இத்தகைய பயிற்சி வெற்றிகரமாகக் கைவரும் என்று சொல்லமுடியாது. ஆனால் நாளடைவில் சீராகப் பயிற்றுவித்துவிடலாம். ஒரு பாடசாலையில் ஒரு வகுப்பை ஒரு முனிசிபல் கவுன்சில் என்று வைத்துக்கொண்டு, பிள்ளைகள் தங்களை முனிசிபல் கவுன்சிலாகவே எண்ணிக்கொண்டு கூடிவந்து ரோடு போடுதல், கிணறு வெட்டுதல், ஆண்பிள்ளைகளுக்கெல்லாம் ஆரம்பப் படிப்பைக் கட்டாயப்படுத்துதல் இவைகளைப் பற்றி வாதம் எதிர்விவாதங்கள்நிகழ்த்தி வோட்செய்யும்படி கற்பிக்கலாம். பிள்ளைகள் கவுன்சிலர்களாக அமர்ந்து ஆலோசனைக்கெடுத்துக்கொள்ளும் விஷயங்கள் உண்மையானவைகளாக விருந்தால் தர்க்கமும், வோட்எடுத்தலும் சூடாகவும், ரசமாகவுமிருக்கும். நான் 12 வயதுள்ள பையனாக இருந்தபொழுது என் நண்பர்கள் சிலருடன் சேர்ந்து கிராமப் பஞ்சாயத்துப் போலக் கூடி மதுக்கடைகளை அடைத்துவிடுவதா? ஆதரிப்பதா? என்று விவாதம் செய்தோம். நான் 'மனிதன் எவனும் புசிக்கவும், குடிக்கவும் பூரண சுயாதீனம் இருக்கவேண்டு' வென்று விவாதித்தேன். ஆனால் மற்றொரு பஞ்சாயத்துச் சிறுவர், 'ஒருவனுடைய சுயாதீனம் மற்றவர்களுடைய க்ஷேமத்திற்குப் பங்கம் விளைவிக்கக்கூடாது' என்று எடுத்துக் காட்டினார். நான் அதை ஒப்புக்கொண்டு மதுக்கடைகளை அடைப்பதற்குச் சாதகமாக வோட் கொடுத்தேன். அவ்வாறே இந்தியா தேசமும் தனது பள்ளிக்கூடங்களின் மூலமாய் விஷயங்களை ஆலோசித்து முடிவு செய்யவும் மெஜாரிட்டி முடிவுப்படி கட்டுப்பட்டு நடக்கவும் கற்றுக்கொண்டால் மாத்திரம் இந்தியா சுயாதீனமுடைய தேசமாகத் திகழக் கூடும். மற்றப்படி இந்தியாவில் ஜாதி ஆளுகை அல்லது பணத்தின் ஆளுகை அல்லது ஆயுதங்களின் ஆளுகைதான் இருக்க முடியும்.

நல்ல பிரஜை தான் வாழும் இவ்வுலகத்தை மேலும் மேலும் அழகாக இருக்கச் செய்வதில் மகிழ்ச்சியோடு உழைக்கவேண்டும். ஜப்பான் தேசத்தில் ஒவ்வொரு சிறு குடிசையிலுங்கூட அழகுக் கலையின் ஓர் அம்



சம் விளங்கக் காணலாம். பாடசாலைகளின் மூலமாய் ஒரு நல்ல ஆரம்பத்தைச் செய்துவிட்டால் இந்தியாவின் வீடுகளும் இயற்கை வனப்பை அறிந்து அனுபவிக்கக் கூடிய புண்ணிய ஸ்தலங்களாக விளங்கும்.

ஒரு தலைமை ஆசிரியர் தமது பள்ளிக்கூடத்தின் ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு படங்கொடுத்து, பிள்ளைகளே அதைத் தங்கள் இஷ்டம் போலச் சட்டம் கட்டி வகுப்பு அறையில் தொங்கவிட்டுக் கொள்ளும்படி சொன்னார். இப்பொழுது அப்பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு வகுப்பு அறையிலும் பிள்ளைகள் தாமே பல அழகிய படங்களைச் சேகரித்துத் தொங்க வைத்திருப்பதைக் காணலாம். பிள்ளைகள் வகுப்பு வகுப்பாக அழகான தோட்டங்கள் போடுதல், சித்திரங்கள் வரைதல், படங்கள் புஷ்பங்கள் சேகரித்தல் இவைகளில் போட்டி போட்டுச் செய்யும்படி தூண்டலாம்; அப்போட்டியினால் பகைகள், சண்டைகள் உண்டாகாமல் நன்மையே உண்டாகும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். ஆபெர்லின் என்ற பிரஞ்சுப் பாதிரியார் தம்முடைய தேசம் பஞ்சத்தாலும், புரட்சியாலும் பாழடைந்துபோனதைக்கண்டு, தம்மிடம் திடப்படுத்தல் பெற வருகிற ஒவ்வொரு பிள்ளையும் தன் பெயரால் இரண்டிரண்டு மரங்கள் வைத்து வளர்ப்பதாகப் பெற்றோர்களிடமிருந்து சர்டிபிக்கேட்டுக் கொண்டு வந்தால் தான் அவர்களைத் திடப்படுத்தலுக்கு ஒப்புக்கொள்வார். அமெரிக்க குடியரசுத்தலைவர் ஆபிரகாம் லிங்கன் தமது ஜீவியத்தில் ஒரே ஒரு வருஷந்தான் பள்ளிக்கூடத்தில் படித்தவர். அவர் "நான் ஜீவித்துப் போன பிறகு என்னைப்பற்றி, 'அவன் முள் செடிகளைப் பிடுங்கிவிட்டு அவ்விடத்தில் ரோஜாப் புஷ்பங்களை வைத்து வளர்த்தவன்' என்று சொல்லப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்" என்று சொல்லியிருக்கிறார்.

நல்ல பிரஜை உபயோகமான பொருட்களை உற்பத்தி செய்கிறவனாக இருக்க வேண்டும். உலகத்திலே பல மனுஷர் பிறருடைய பிரயாசத்தின் பலனைக் கவர்ந்து புசித்துத் திருப்தி யடைகிறார்கள். தாமே பொருட்களை உற்பத்தி செய்வதினால் உண்டாகும் மகிழ்ச்சியின் அனுபவம் அவர்களுக்குக் கிடையாது. இந்த அனுபவம் சிறுவயதிலேயே உண்டாகும்படி பாடசாலையில் இந்த ஆரம்பத்தைச் செய்யவேண்டும். தொடக்கத்தில் களிமண் சாமான்கள் செய்து, அவற்றைக் கலர்பூசி அழகு படுத்தக் கற்பிக்கலாம். புஸ்தகம் வைக்கும் பைகள், பென்சில்கள் வைத்துக் கொள்ள தான் பைகள், சிறிய காய்கறி, புஷ்பக் கூடைகள், துணிப்பந்து முதலிய உபயோகமான சிறிய சாமான்கள் செய்யப் பயிற்று விக்கலாம். செய்கிற சாமான்களெல்லாம் சரியாய்ச் செய்யப்படும்படியே கவனிக்க வேண்டும்; அவர்களால் செய்யக் கூடாத வேலையைச் செய்யும்படி முயன்று தடுமாற்றம் அடையாதபடியும் பார்க்கவேண்டும். எடுத்த வேலையைச் செய்து முடிப்பதால் உண்டாகும் மனத்திருப்தி சிறுவர்களுக்கு உண்டாவதுடன், பள்ளிக்கூடத்தில் விசேஷ பிரீதியும், தொழில் செய்கிற ஜன சமூகத்தின்

அபிமானமும் உண்டாகும். அன்றியும் ,அவர்கள் தாம் பெரியவர்களாகும் பொழுது இன்னும் பெரிய சாமான்களைச் செய்யக்கூடிய ஆசையுள்ள உயர்ந்த மனோபாவம் அவர்களுக்கு உண்டாகும்.

ரஷ்யாவிலுள்ள ஒரு கிராமப்பாடசாலைச் சுவரில் பின்வருவாறு எழுதப்பட்டிருக்கிறது " விவசாயம் செய்கிறவர்களுக்குப் பிரதி யுபகாரம் செய்யாமல் நாங்கள் அவர்களுடைய கோதுமையைப் புசிக்கிறதல்லை, அவர்களுடைய பசுவின் பாலைக் குடிக்கிறதுமில்லை. விவசாயிகளுக்கு நாங்கள் மேசோடு பின்னிக் கொடுக்கிறோம், அவர்களுடைய குழந்தைகளுக்கு நாங்களே உடுப்புக்கள் தைத்துக் கொடுக்கிறோம்." இதன் கருத்து என்ன வென்றால், படிப்பாளிகளும், உத்தியோகஸ்தரும் தொழிலாளிகளும் யாவரும் ஏதாவது உபயோகமான பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்பதே.

பசுமலை ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயர் ஒரு திட்டம் வைத்திருக்கிறார். பாடசாலைப் பிள்ளைகள் யாவரும் வாரத்தில் மூன்று நாள் மாலை விளையாடலாம், மற்ற மூன்று நாள் மாலைகளில் புத்தகம் கட்டுதல், மரவேலை, கோழி வளர்த்தல், ஆடுமாடுகளைப் போஷித்தல், போட்டோ பிடித்தல் முதலிய ஏதாவது ஒருவேலை செய்யப் படிக்க வேண்டும். முதலில் இந்தத் திட்டத்தை விரும்பாமலிருந்தவர்கள் மிகச்சிலர் ; விருப்புடன் ஏற்றுக் கொண்டவர் பலர். இப்பொழுது பசுமலைப் பள்ளிக்கூடத்தில் படித்து வெளியேறும் ஒவ்வொரு பையனும், மற்றவர்களுடைய உழைப்பின் பயனை அனுபவிக்கிற சோம்பேறியாக வெளி யேறாமல், தானும் சில பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய திறமையுடையவனாகப் போகிறான். பாடசாலையில் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் செலவுக்கு அதிகமான வருமானத்தைக் கொடுப்பதால், இந்தத் திட்டத்தால் பொருளாதாரம் சிதைந்துவிட மாட்டாது அல்லவா?

மத்திய மகாணத்தில் பாடசாலைப் பிரின்சிபல் போர்டிங்கில் படிக்கிற பிள்ளைகள் யாவரும் தமது துணிகளைத் தாமே தோய்த்துக் கொள்ளவேண்டும், தைத்துக் கொள்ளவேண்டும் என்று சட்டம் பிறப்பித்தார். பிள்ளைகளின் பெற்றோர் ஆரம்பத்தில் இதை ஆக்ஷேபித்தார்கள். ஆனாலும் பிரின்சிபல் அத்துடன் நின்றுவிடவில்லை. பிள்ளைகள் தமது வஸ்திரங்களைத்தாமே நெய்து கொள்ளவும், மேசை நாற்காலிகளைச் செய்து கொள்ளவும் வேண்டுமென்று கட்டளை யிட்டார். தொடக்கத்தில் பிள்ளைகளுக்கு இவ்வேலைகளைச் செய்து காண்பிக்கும்படியான ஏற்பாடுகளையுஞ் செய்தார். அநேகர் இந்தத் திட்டத்தை எதிர்த்தார்கள். அப் பாடசாலை உபாத்திமார்களும்கூட முழுமனதுடன் இதை ஆதரிக்கவில்லை. ஆனால் பிரின்சபல் கட்டாய முறையைக் கையாண்டு பிள்ளைகள் இவ்வேலைகளைச் செய்தே தீரவேண்டும் என்று சாதித்து விட்டார். படிப்படியாகப் பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உற்சாகமும் உணர்ச்சியும் பிறந்தது. யாவரும் பூரணமாக ஒத்துழைத்து வேலைசெய்ய



முன் வந்தார்கள். மிஷன்காரர் வருஷம் ரூ. 1000 அந்த வகைக்கென்று கிராண்டு கொடுக்கிறார்கள். சர்க்கார் அதிகாரிகளும் பூரண ஆதரவு அளித்து உற்சாகப் படுத்துகிறார்கள். சுயநலம், சுயசுகம் இவற்றை விரும்பிச் சோம்பேறிகளாக மாறி விடாமல், தாங்களே உழைக்கிறவர்களாகப் பயிற்றுவிக்கப்படுகிறதைக் கண்டு பிள்ளைகள் சந்தோஷப்படுகிறார்கள். வேலை செய்வது மனிதனக்குக் கிடைத்த பாக்கிய முள்ள சந்தர்ப்பம் என்று நமது பிள்ளைகள் உணர வேண்டும்.

**9. நல்ல பிரஜை வேலை யொழிந்திருக்கும் வேளைகளை மனோல்லாசமாகக் கழிக்கவேண்டும்.** சாதாரணமாகக் கிராமவாசிகள் சோம்பற் கதைகள் பேசியும், சீட்டு சூதுகள் ஆடியும், குடித்து வெறித்தும், சண்டை சச்சரவுகள் விவகாரத்தும், பகலுறக்கம் தூங்கியும் பொழுது போக்குவதால், அவர்கள் பிள்ளைகளும் தாம் பெரியவராகும்போது அதே துர்ப்பழக்கங்களில் பழகிவிடுகின்றார்கள்.

ஒரு நல்ல கிராமப் பாடசாலையில் பிள்ளைகள் கண்ணாமூச்சி விளையாடவும், நொண்டியடிக்கவும், கிளித்தட்டுப் போடவும், கால்பந்து கைப்பந்து அடிக்கவும் இடம்செய்யவேண்டும். மதுரைப் புறத்தில் ஒரு கிராமத்தில் மாலை 5 மணிக்குச் சுமார் 25 வாலிபர்கள், பகல் முழுவதும் உழைத்து விட்டு வீட்டுக்குத் திரும்பி வருகிறார்கள். அவர்களிற் சிலர் இரவு முன்னேரத்தில் கிறிஸ்தவ வாலிப சங்கத்தின் ஆதரவில் இருக்கும் இராப்பாடசாலைக்குப் போய்ப் படிக்கிறார்கள். சிலர் அந்நேரத்தைக் கள்ளுக்கடையில் பின்னிடுகிறார்கள் ! இதைக்கண்ட சில பொதுஜன ஊழியர்கள் இங்கு ஒரு கைப்பந்து விளையாட்டு ஸ்தலத்தைத் திறந்தார்கள். இப்பொழுது கள்ளுக் கடைக்குப் போகிறவர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது. கடைசி மட்டும் விளையாட்டு ஸ்தலத்துக்கு மேல்கையும் கள்கடைக்குத் தோல்வியும் உண்டாகுமா என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் கிராமத்தின் சிறுவருக்கு ஆரம்பமுதலே இப்படிப்பட்ட விளையாட்டு வசதிகள் செய்யப்பட்டால் அவர்கள் பெரியவர்களாகும் போது கள்கடை, சூதுக்கடைகளை நோக்காமல் நல்ல விஷயங்களில் மட்டும் ஈடுபட்டு இருப்பார்கள் அல்லவா?

கிராமப் பாடசாலையில் அழகான சிறுகதைப் புஸ்தகங்களும், வீரர்கள் தியாகிகளுடைய சரித்திர நூல்களும் விவசாயம், சுகாதாரம் இவற்றைப் பற்றிய புத்தகங்களும் அமைந்த ஒரு வாசக நிலயம் இருந்தால் பிள்ளைகள் வாசித்துப் பயனடைவார்கள். பள்ளிக்கூடத்தில் காலதேச வர்த்தமானங்களைப் பேசித் தர்க்கிக்கும் முறை ஏற்படுத்தப்பட வேண்டும். இதனால் பத்திரிகைகளைப் படித்துச் செய்தி அறியும் ஆசை அவர்களுக்கு உண்டாகும். சரசமான விலையுள்ள பத்திரிகைகளை வாங்கித் தாமும் வாசித்துத் தமது அண்டை அயலகத்தார்க்கும் வாசித்துக் காட்டுவார்கள். நல்ல நாடகங்கள், பஜனைகள், யாத்திரைகள், சாரணீயம், முதலிய ஏதுக்களால் பிள்ளைகளில் அமர்ந்துகிடக்கும் உயர்ந்த உணர்ச்சிகளைத் தூண்டுதல் வேண்டும்.

JL
T15m21, N36PR

மலையை யடுத்திருக்கும் ஒரு கிராமத்திலிருந்து 12 முதல் 25 வயதுடைய இருபது, முப்பது பெண்கள் அம்மலைக்குச் சென்று விறகு முறித்துக் கட்டிச் சுமந்து கொண்டு வந்து பக்கத்திலிருக்கும் பட்டணத் தெருக்களிற் சென்று விற்கிறார்கள். பின் அந்தப் பணத்தைக்கொண்டு அரிசி காய்கறி வாங்கிக் கொண்டு வந்து சமைத்துச் சாப்பிட்டுவிட்டு, மிகவும் அலுத்துப் போய் இருந்தாலும் அப்படியே படுத்துக் கொள்ளாமல் அவ்வூரிலிருக்கும் இரவுப் பாடசாலைக்குச் சென்று எழுத வாசிக்கக் கற்று வருகின்றார்கள். அத்தோடு, ஜெபிக்கவும், பாட்டுப்பாடவும் கற்றுக் கொள்கிறார்கள். சில வாரங்களுக்கு முன்பு அவர்கள் தங்கள் கிராமத்துக்குப் பத்துமைல்களுக்கு அப்பாலிருக்கும் பாஸ்ட்கேற் கஸ்பா அறுப்பின் பண்டிகைக்குப் போய்த் தங்கள் காணிக்கைகளைப் படைத்ததுடன், நூற்றுக் கணக்கான ஜனங்கள் மத்தியில் பாட்டுப் பாடிக் காட்டினார்கள். அவர்கள் பாடும் குரலில், தலையை அழுத்தும் விறகுச் சுமையையும் மனத்திலே பொங்கும் மகிழ்ச்சியையும் கண்டோம். ஆம், கஷ்டப்பட்டு வேலை செய்து ஆகாரத்தைக் கண்ட அவர்கள் பாடி மகிழும் பாக்கியத்தையும் இழந்துவிட்டதில்லை. வருந்தி உழைப்பதும், உழைப்பு ஒழிந்த வேளைகளில் உல்லாசமாக நேரம் போக்குவதும்தான் வாழ்க்கை முறை என்பதைப் பிள்ளைகள் அறிந்து கொள்ளும்படி போதிக்கவேண்டும்.

10. **நல்ல பிரஜை கண்ட சகோதரனிடத்திலும் காணாத தேவனிடத்திலும் அன்பாய் இருக்கவேண்டும்.** அன்பு இல்லாத எல்லா முயற்சிகளும், ஆற்றல்களும் சத்தமிடுகிற வெண்கலத்துக்கும், ஓசையிடுகிறகைத் தாளத்துக்கும் சமமாகும். அன்பை ஆதாரமாக உடையவனுடைய ஊழியங்கள் யாவும் பலன் அளித்தே தீரும். கிராமப் பாடசாலையில் இருக்கும் பிற்காலப் பிரஜைகளாகிய சிறுவர் சிறுமிகள் யாவரும் தேவனையும் அவருடைய திவ்விய அன்பையும் பற்றி அறிகின்ற அறிவை அடையும்படி போதிக்கப்படவேண்டும். பிள்ளைகள் தமது தாய் தந்தை, ஆசிரியர், சிநேகிதர் இவர்களிடத்தில் அன்புகூர்வதிலிருந்து தேவனிடத்தில் அன்புகூரவும் ஏதுவுண்டாகின்றது. ஓர் உத்தமமான ஆசிரியர் தமது பிள்ளைகள் மனத்தில் தேவனைப்பற்றிய அன்பை வளர்த்து வந்தால் அவ்வன்பு நாளடைவில் வளர்ந்து பெருகி அவர்கள் பிற்காலத்தில் தமது கிராமத்துக்கும், தேசத்துக்கும், சமூகத்துக்கும், உலகம் முழுவதற்குமே பிரயோஜனமாக வாழத்தக்க உன்னத நிலைக்கு அவர்களைக்கொண்டு சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. இந்தியர் அனைவரும் தமது நாட்டின் நல்ல பிரஜைகளாகவும், பரலோக ராஜ்யத்துக்கும் பாத்திரமான பிரஜைகளாகவும் மறுரூபமடையத் தக்கவாறு அவர்களை வழி நடத்திச் செல்லக்கூடிய சக்தியும் தத்துவமும் நமது சிறுவர்க்கு உண்டாகுமாறு அவர்களைப் பக்குவப்படுத்தும் பரம ஔஷதம் அன்புதான்; அன்பேதான் அன்றோ!

# மாறுதல் அடையும் இந்தியாவின் கல்விப் பயிற்சி

H. A. பாப்லி

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்று பவணந்தி ஆசிரியர் எழுநூறு வருடங்கட்கு முன்னே உரைத்த குறிப்பு இந்தியாவின் கல்விவரலாற்றில் எக்காலத்தும் விளங்கின உண்மை. இந்தியாவின் கல்வி நிலைமை அனேக நூற்றாண்டுகளாக ஒரு வகையாக மாறாமல் நிலைநின்றதென்றே மேனாட்டு வித்துவான்கள் கொண்ட கூற்று தவறென அனேக அத்தாட்சிகளால் விளக்கிக் காட்ட முடியும். அனேக ஜனாசாரங்களும் தொண்டுதொட்டு மாறாமல் வழங்கிவந்தால் இந்தியாவின் உள்ளான நிலைமை ஒரேவிதமாக நின்றுகொண்டிருந்ததென்றும் எண்ணிக் கொண்டார்கள். அவ்வாறல்லாமல் வருஷாவருஷமாக இந்திய ஜகத்தின் நிலை அனேக விஷயங்களில் மாறுதல் பெற்றுக்கொண்டு வந்ததென்று சரித்திர ஆராய்ச்சியாளர் அறிவார். இவ்வாறாயிருப்பினும் தற்போதுள்ள மாறுதல்கள் எல்லா காரியங்களிலும் மிக்கனவாம் என்று ஐயமறத் துணிவோம். கல்விப் பயிற்சியின் முறைகளிலும் இம் மாறுதலைக் காணலாம்.

தற்போது 15 வது தேசத்தின் கல்விப்பயிற்சி யொழுங்குகளைப் பற்றி யாவரும் குற்றங்குறைகளைக் கண்டுணர்ந்துவந்த நாம் பலபத்திரிகைகளிலும் காண்கிறோம், பல பெயர்களிடத்திலும் கேட்கிறோம். தற்போது இந்தியா ஏகாதிபத்திய அரசின் நிலையைவிட்டுப் பிரஜாபத்திய அரசுபெற்றுக்கொண்டுவருவது கல்விப் பயிற்சியின் விஷயத்தில் அனேக மாறுதல்களுக்குக் காரணமென்று யாவரும் அறிவார். முற்காலத்தில் வகுப்புகளுக்கேற்றவாறு ஜனங்களுடைய கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இக்காலத்திலே தீண்டாத ஜாதியான் ஒருவன் முதல் மந்திரி ஆகலாம் என்பது தெளிவு. இன்னும் எல்லாக் கிராமங்களிலும் சுகாதாரத்திலும், பொருளாதாரத்திலும், பொது நாகரிகத்திலும் பற்பல இயக்கங்கள் இயங்கி வருகின்றன என்று நாம் கண்டறிந்து அவைகளில் வாலிபரும் பிறரும் சரியான பங்கு பெறக்கூடியவர்களாகத் தக்க நவீன பயிற்சியடையவேண்டும் என்பது திண்ணம். ஆதலின் தற்போதுள்ள கல்விப் பயிற்சி தற்போதுள்ள உயிர் வாழ்க்கையின் குறிப்புகளுடன் சம்பந்தமுள்ளதாகக்கொண்டு முன்னாளில் பரம்பரையாய் வந்த முறைகளை அனுசரித்து பாடசாலைகளை நடத்துதல் உத்தமமன்று. "பருவத்தே பயிர்

செய்" என்ற உண்மை இக் கல்விப்பயிற்சி விஷயத்திலும் காணப்படத் தக்கது. பின்வரும் விஷயங்களில் இம்மாறுதலை அனேகமாய்க் காணலாம்.

1. பாடசாலையின் ஜீவியம் சுற்றுப்புறமான ஜீவியத்துடன் சம்பந்து முள்ளதாதல் வேண்டும். சிறுவர் பள்ளியில் கற்றுக்கொள்வது ஒன்று வீட்டிலும் காட்டிலும் வீதியிலும் கற்றுக்கொள்வது வேறு என்ற தப்பான அபிப்பிராயத்திற் கற்கப் பாடசாலைகளை நடத்துவது தவறு. சிறுவர்களின் உயிர்வாழ்க்கை ஒன்றென்றும் பாடசாலையில் ஜீவிப்பது அதில் ஓர் பாகம் மாத்திரம் என்றும் அறிந்து இரண்டிற்கும் நெருங்கிய தொடர்புள்ளதாகும்படி கல்விப் பயிற்சியின் அம்சங்களை நடத்தி வருதல் அவசியம்.

2. சிறுவர்களின் மனப்பான்மை வளர்ச்சியும் தேகவளர்ச்சியும் ஒன்றோடொன்று தொடர்புள்ளன வென்பது மனோதத்துவ வித்துவான்கள் அனேக அத்தாட்சிகளால் இக்காலத்தில் விளக்கிக் காண்பித்தலால் இவ்விரண்டு பயிற்சிகளை வேறுபடுத்தி நடத்துதல் தவறு என்றறிந்து நவீன பாடசாலைகளில் சிறுவர் மனத்திற்கும் குணத்தற்குமுரிய விஷயங்களைத் தேக முயற்சிகளின் உதவியால் கற்றுக்கொண்டு வருகின்றனர் என்று அறிவோம்.

3. சிறுவர்களுக்குரிய சமூக வாழ்க்கையொன்றுண்டு என்றும் அவர்களை பெரியோரின் சமூக வாழ்க்கையின் திறத்தில் அமைத்து நடத்தக் கூடாது என்றும் சிறுவர்க்கும் வரையறுக்கப்பட்ட சுயாதீன ஆட்சிக்கு இடங்கொடுக்க வேண்டும் என்றும் கல்விப்பயிற்சியின் ஆராய்ச்சியாளர் வற்புறுத்தி யுரைத்ததற்கு இணங்கப் பாடசாலையின் வழிவகைகளை மாற்றி நடத்தவேண்டும் என்பது அனேகருடைய கோட்பாடு.

தற்போதுள்ள இந்தியாவின் பாடசாலைகளில் இக்குறிப்புகளுக்கேற்ற பல மாறுதல்கள் உண்டாகி வளருகின்றன. சுயநோக்க முயற்சி முறை அனேக பாடசாலைகளில் வழங்கிவருவதுண்டு. பிரதம பாடசாலைகளிலெல்லாம் அனுசரிக்கப்படுவது உத்தமம் என்று கல்வியிலாகாத் தலைவர் சில நாளைக்கு முன்னர் வற்புறுத்திப் பேசினர். இம்முறையின்படி மனப்பான்மை விளங்கியும் தேகவளர்ச்சியும் ஒன்றுபட்டுண்டாகுதலும் சிறுவரின் சுய ஆட்சியும் ஆசிரியரின் ஆதிக்கமும் ஒற்றுமை யுள்ளதாதலும் சிறுவர் கற்றுக்கொள்ளும் காரியமெல்லாம் செய்கையில் வெளிப்படுத்தலும் காணப்படுகின்றன.

சிறுவர் சரிவரக் கற்றுக்கொள்வாராயின் பாடசாலையின் முறைகளெல்லாம் சிறுவர்களின் இயற்கைகளுக்குரியதாகவும் சிறுவர் மனப்பான்மை வளரும் பிரமாணங்களுக்குரியதுமாக நடத்தப்பட வேண்டியதென்று ஐந்திரிபற ஒப்புக்கொள்ளக் கூடியது. குழந்தைகள் விஷயத்தில் விளையாட்டுகள் சிறுசிறு செய்கைகள் முதலியவைகளாலும் மற்று சிறுவர்கள் விஷயத்தில் சுயநோக்கங்கொண்ட பல நன்முயற்சிகளாலும் நாடோடிய ஜீவியத்திற் கடுத்த கல்வியையும் அதற்கேற்ற குணங்களையும் கற்றுக் கொள்ளலாம்.



கல்விப் பயிற்சியின் வித்துவான் ஒருவர் பின்வருமாறு கல்விப் பயிற்சியின் தன்மை விவரித்துரைத்தது இதற்குத் தகுதியுளது.

"ஒருவனுக்குச் சுற்றுப்புறமானவைகளில் அச்சுற்றுப்புறங்களின் செல்வாக்கினால் நடக்கும் நடபடிகள் மூலமாய் உயிர்வாழ்க்கையின் அனுபவத்திற்குப் புதிய அர்த்தம் கொடுத்துப் பின்வரும் அனுபவத்தை மாற்றக்கூடிய சக்தியைப் பெறத்தக்கதாக ஒருவனுடைய ஆத்ம சரீரங்களின் வளர்ச்சியே கல்விப் பயிற்சி என்பதாம்."

இதுவே சுய ஆட்சியும் சுய முயற்சியுமுள்ள கல்விப் பயிற்சி. தற்காலத்திய இந்தியாவின் நிலைமையில் மனதிட்டமும் தன்னம்பிக்கையுள்ள மனப்பானமை உண்டாக்கத்தக்க கல்விப் பயிற்சி என்றே ஒப்புக்கொள்ளக் கூடியது.

ஆசிரியர் எவரும் இந்நோக்கங்களைக்கொண்டு தங்கள் பாடசாலையின் காரியங்களை நடத்துவாராயின் அப்பாடசாலைகளைப்பற்றி அனேக குற்றங்குறைகள் சொல்லப்படாமல் அவைகளின் உத்தம கருத்துக்கள் நிறைவேறுதலடையும் என்பதற்கு ஐயமின்றே.

# தென்னிந்திய கல்விவாரக் கொண்டாட்டம்.

---

## கோடிமுடி ஸ்ரீ சீதா லெக்ஷ்மி பாலிகா பாடசாலை

மாலை $4\frac{1}{2}$ மணிக்கு கல்வியின் அவசியத்தைப் போதிக்கும் அட்டைகளைத் தாங்கிக் கொண்டும், பாடிக் கொண்டும் மாணவர்களும் ஆசிரியர்களும் ஊர்வலமாய் கிராமத்தின் தென்பாகத்திற்குச் சென்றனர்—அங்கு நான்குமுக்கிய இடங்களில் பொதுக் கூட்டம் கூட்டி, கல்வியின் அவசியம், பெற்றோர்களின் கடமை பள்ளிக்கூடத்தின் தேவை முதலிய விஷயங்களைப் பிரசங்கம்மூலமாய்ச் சொல்லி, சிறுவர் சிறுமிகளால் சம்பாஷணை, அபிநயப் பாடல்கள், கும்மி கோலாட்டங்கள் முதலிய நடித்துக் காண்பிக்கப்பட்டன.

---

## தாரமங்கலம்

7-வது வருட கல்விவாரக் கொண்டாட்டம் நாளது அக்டோபர் மாதம் 27—10—37 புதன், 31—10—37 ஞாயிறு இவ்விரண்டு தினங்களில் நடைபெற்றது. 27—10—37 புதன்கிழமை மாலை 3—30 மணிக்கு தாரமங்கலம் போர்டு உயர்தர எலிமெண்டெரி பாடசாலையில் ஐக்கிய நாணய சங்கத்தின் தணிக்கையாளரும் பிரபல தமிழபிமானியுமான உயர் திருவாளர் K. S. சுப்பிரமணிய அய்யரவர்களின் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் ஷை பாடசாலையின் உதவி ஆசிரியர் உயர் திருவாளர் A. கிருஷ்ணய்யரவர்களால் "கல்வியும் மாறும் இந்தியாவும்" என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழி வாற்றினர். அதன் பின்னர் ஷை பாடசாலையின் தலைமையாசிரியர் உயர் திருவாளர் T. R. சுப்பிரமணிய அய்யரவர்கள், உதவி யாசிரியர்கள் உயர் திரு. T. L. வெங்கட்ட சுப்பிரமணிய அய்யரவர்கள், T. P. நடராஜம் பிள்ளையவர்கள், இவ்வூர் எய்டெட் பாடசாலையின் தலைமையாசிரியர் உயர் திரு. T. A. இலக்ஷ்மி நாராயண சாஸ்திரியாரவர்கள் முதலாயினோர்கள் இவ்விஷயத்தைக் குறித்துப் பேசினார்கள். பின்னர் தலைவரவர்கள் பின்னுரை பேசி முடிந்ததும் தேசிய கீதம் பாடப் பெற்று அன்று விழா சிறப்புடன் நடந்தேறியது. 31-10-37 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு தாரமங்கலம் தெண்டிகேஸ்வரம் பாளையம் காவடியில் இவ்வூர் போர்டு பஞ்சாயத்து போர்டு ஸ்பெஷல் ஆபீசர் நடராஜன் B. A. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுகாலை உயர் திருவாளர் T. A. இலக்ஷ்மி நாராயண சாஸ்திரி அவர்களாலும், ஓமலூர் நடுத்தரப் பள்ளி தமிழாசிரியர் S. N. இராமசாமி அவர்களாலும், T. P. நடராஜம்பிள்ளையவர்களாலும், போர்டு பாடசாலை தலைமையாசிரியர் உயர் திரு. T. R. சுப்பிரமணிய அய்யரவர்களாலும் கல்விவாரக் கொண்டாட்



டத்தில் ஆசிரியர்கள் பெற்றோர்களுடன் கலந்து செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றியும் பெற்றோர்கள் செய்யவேண்டிய கடமையைப் பற்றியும் மிக விரிவாகவும் அழகாகவும் சொற்பொழி வாற்றினார்கள். பின்னர் தலைவரவர்கள் முடிவுரைப் பிரசங்கம் முடிந்த பின்னர் தேசியகீதம் பாடப்பெற்று சபை இனிது முடிந்தது.

---

## சென்னை

கல்வி வாரக்கொண்டாட்டம் பல பாடசாலைகளில் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் கார்ப்பொரேஷன் பெண் பாடசாலைகள் பல பொருட் காக்ஷிகள் தயாரித்துள்ளவர்கள் கோமளேஸ்வரன் பேட்டையில் ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல், பொருட் காக்ஷியைத் திறந்துவைத்தார். ஸ்ரீமான் T. S. நடராஜப் பிள்ளை பள்ளிக்கூடங்களில் Medical Inspection னின் அவசியத்தைப்பற்றிப் பேசினார். ஸ்ரீமதி லக்ஷிமிபதி பொருட் காக்ஷியின் உபயோகங்களைப்பற்றி எடுத்துரைத்தார்.

தெற்கு ரேஞ்சு கார்ப்பொரேஷன் முகம்மதிய பெண் பாடசாலைகள் தயாரித்த கல்விப் பொருட் காக்ஷியை திவான்பகதூர் R. சுப்பையா நாயுடு அவர்கள் திறந்து வைத்தார். ஸ்ரீமதி அம்மு சுவாமிநாதன் அக்கிராசனம் வஹித்தார். காப்டன் அப்துல் ஹமீட் "முஸ்லிம் பெண்களுக்குக் கட்டாயக் கல்வியின் அவசியம்" என்பதை எடுத்துரைத்தார். ஸ்ரீமதி முத்துலஷ்மி ரெட்டியும், ஸ்ரீமதி யாகுப் ஹாஸனும், பொருட்காக்ஷி தயாரித்த முஸ்லிம் பெண்கள் திறமைவாய்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்றும், கார்பொரேஷனில் முஸ்லிம் பெண்களின் படிப்புக்கு அதிக வசதிகள் ஏற்படுத்தவேண்டுமென்றும் உரைத்தார்கள்.

கல்விவாரக் காலத்தில் 'பெற்றோர் தினம்' பல பாடசாலைகளில் கொண்டாடப்பட்டது.

---

## நத்தம்-மதுரை

நத்தம் போர்டு ஆண் பாடசாலையில் 6—11—37 சனிக்கிழமை தேசியக் கொடியேற்றுவிழா மிகச் சிறப்பாக நடந்தது. மதுரை ஜில்லா போர்டு உபதலைவர் எஸ். ஏ. ரெங்கசாமி செட்டியார் பாடசாலையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்கள். மதுரை அட்வகேட் எல். கிருஷ்ணசாமி பாரதி எம். எல். ஏ. பள்ளிக்கூட ஹாலில் மகாத்மா காந்தி திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து அழகாக காந்திஜீயின் போதனைகளைப் பற்றிப் பேசினார்கள். பெண்பாடசாலை சிறுமிகள் நாட்டுக் கும்மி, விடுதலை கும்மி பாடினார்கள். மங்களமாக விழா முடிந்தது.

---

# 5-வது ஆசிரிய மானேஜர்கள் மகாநாடு

ஸ்ரீமான் வார்க்கி அவர்களின் பிரசங்கம்.

சென்னையில் கூடிய ஐந்தாவது ஆசிரியர் மானேஜர்களின் மகாநாட்டைத் திறந்துவைக்கையில், கல்வி இலாகா மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசி ஸ்ரீமான் C. J. வார்க்கி அவர்கள் பேசியதாவது:—

இப்பொழுது நம் மாகாணத்தில் கல்வி முறையைச் சீர்திருத்துவதைப்பற்றித் துரைத்தனத்தார் ஆலோசித்து வருகிறார்கள். இந்த விஷயத்தில் துரைத்தனத்தாருக்குச் சில திட்டமான அபிப்பிராயங்கள் இருந்துவருகின்றன. ஆனால் இப்பொழுது துரைத்தனம் பொது ஜனக் கக்ஷியாரால் நடத்தப்பட்டுவருவதால் கல்வித் துறையில் ஈடுபட்டிருக்கும் தனிப்பட்ட நபர்களையும், சங்கங்களையும் அவரவர்களுடைய அபிப்பிராயங்களையும் அறிந்துகொள்வது துரைத்தனத்தாரின் நோக்கம்.

26–6–37-ந் தேதியன்று (இடைக்கால) மந்திரி சபைக் காலத்தில் வெளியிடப்பட்ட அறிக்கை ஆசிரிய மானேஜர்கள் உள்ளத்தில் பெரிய குழப்பத்தையும், பீதியையும் உண்டுபண்ணியிருப்பதாகத் தெரிகிறது. இதை நீங்கள் ஆபத்தின் அறிகுறியாக எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். இக் காரணத்தை உத்தேசித்தே நீங்கள் மாகாணத்தின் பல பாகங்களிலிருந்து உங்களுடைய குறைகளையும் எண்ணங்களையும் தெரிவிப்பதற்குக் கூடியிருக்கிறீர்கள். இந்த உத்தரவை ஆழமாகப் புதைத்துவிட வேண்டுமென்று இம் மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவர் கூறியிருக்கிறார். இது முடியாத காரியம். ஆனால் காங்கிரஸ் மந்திரி சபை உங்களுடைய குறைகளையும் அபிப்பிராயங்களையும் நன்கு கவனிக்கும்.

நம் மாகாணத்தில் கல்வி அபிவிருத்திக்காகத் துரைத்தன பாடசாலைகள், ஸ்தல ஸ்தாபனத்தால் நிர்வகிக்கப்பட்டுவரும் பாடசாலைகள், 'எயிடெட்' பாடசாலைகள் ஆக மூன்று வகைப்பட்ட பாடசாலைகள் இருந்துவருவது எங்களுக்குத் தெரிந்த விஷயமே.

ஆசிரிய மானேஜர்கள் கடைசியில் சொல்லப்பட்ட வகையைச் சேர்ந்தவர்கள். நீங்கள் ஒரு நூதன வகுப்பைச் சேர்ந்தவர்கள். கல்வியுலகில் ஆசிரியர், மானேஜர் என இரண்டு பிரிவுகள் உள. முதலாளிகள், தொழிலாளிகள் என்று இருப்பதுபோல் அல்லாமல் உங்களுக்குள்ளேயே ஆசிரியர், மானேஜர் என இரண்டும் ஐக்கியப்பட்டிருக்கிறது. ஆதலால் ஆசிரியர் மானேஜர் இவ்விருசாராருடைய குணங்களையும் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். எந்த நல்ல துரைத்தனமும் முதலாளிகளைக் கெடுக்காது. தொழிலாளியை ஏமாற்றி முதலாளிகளுக்கு லாபத்தைக் கொடுக்காது. இருவகுப்பினரும் தேச நன்மைக்குப் பாடுபட்டுவருவதாலும், எல்லோரும் சகோதரர்கள் ஆனதாலும், இவ்விரு வகுப்பினரையும் துரைத்தனம்



திருப்தி செய்யவேண்டும். இம்மாதிரியே கல்வித் துறையிலும் ஆசிரியர், மானேஜர் என இருவகுப்பினரையும் பாதுகாக்கவேண்டும். இங்குக்கூடி இருக்கும் நீங்கள் ஆசிரிய மானேஜர்கள் என்று சொல்லிக்கொண்டபோதிலும் உங்களில் அநேகர் மானேஜர்களே ஆவீர்கள். நீங்கள் ஆசிரியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கக வரவில்லை. இந்த கவர்ன்மெண்டு உத்தரவு மானேஜர்களுக்குப் பயத்தை விளைவித்ததே ஒழிய உபாத்தியாயர்களுக்குப் பயத்தை உண்டாக்கவில்லை. அக்காரணத்தால் அவ்வுத்தரவை நீங்கள் கண்டிப்பது நியாயமல்ல. உத்தரவில் கண்ட சில அம்சங்கள் உங்களுக்கு அதிருப்தி அளிக்கக்கூடியதாக இருக்கும். பொதுப் பண விரயத்துக்கும், கல்வி பரப்பில் விருத்திக் குறைவுக்கும், பூர்த்திபெறாதனவும் திறமையற்ற பாடசாலைகளும் தான் முக்கிய காரணமாயிருப்பதைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். கல்வி அபிவிருத்தியானது பிள்ளைகள் ஒரு வகுப்பிலிருந்து மேல்வகுப்புக்குப் போக இருந்துவரும் அனுகூலங்களைப் பொருத்தது என நீங்கள் தடையில்லாமல் கூறுவீர்கள். பிள்ளைகள் முதல் வகுப்பிலிருந்து 5–வது வகுப்புக்குப் போகாமலிருப்பதற்குப் பெற்றோர்களின் ஏழ்மையும், அசிரத்தையும் தான் காரணங்கள் என்று நீங்கள் நினைப்பதிலும் கொஞ்சம் உண்மையிருப்பதாகவே நான் கருதுகிறேன்.

கல்வியானது முன்னேற்றமடையாதிருப்பதற்கு திறமையில்லாத, பூர்த்திபெறாத பாடசாலை அநேகம் இருந்துவருவதுதான் காரணம் என்று நான் தீர்க்காலோசனையின் பயனாக நினைக்க வேண்டியிருக்கிறது. எல்லா பாடசாலைகளும் கல்வி அபிவிருத்திக்கு ஏற்றது என்பதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்.

ஆகையால் பூர்த்திபெற்ற, பூர்த்திபெறாத பள்ளிக்கூடங்களைக் காப்பாற்றுவதற்குத் தகுந்தபடி, பள்ளிக்கூடங்களை அமைக்கவேண்டும். ஒரு பூர்த்திபெற்ற பள்ளிக்கூடத்தைச் சுற்றி அநேக பூர்த்திபெறாத கிளைப் பாடசாலைகளை ஏற்படுத்துவதுதான் சாம்பியன் திட்டத்தின் முக்கிய நோக்கம்.

திறமையற்ற பாடசாலைகள் தேவையில்லை என்பதை நீங்கள் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும். திறமையற்ற பாடசாலைகள் என்றால் பூர்த்திப்பெறாத பாடசாலைகள் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. ஒரு பாடசாலை பூர்த்தி பெறாமலிருக்கலாம். ஆனால் திறமையில்லாத பாடசாலையாக யிருக்க வேண்டியதில்லை.

திறமையற்ற பாடசாலைகளுக்கும் பூர்த்திபெறாத பாடசாலைகளுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவர்ன்மெண்டு அறிக்கை தெளிவாகத் தெரிவிக்காமலிருந்தாலும் பூர்த்தி பெறாத பாடசாலைகள் ஆனால் திறமையுள்ளவைகளாக அவசியம் இருக்கத்தான் வேண்டும். திறமையற்ற பாடசாலை பூர்த்தி பெற்றிருந்தாலும் பூர்த்தி பெறாமலிருந்தாமலிருந்தாலும் ஒழிய

வேண்டியதே. உங்களில் யாராவது திறமையில்லாத பாடசாலைகளை நிருவாகம் செய்துவந்தால் நீங்களும் அவைகளுடன் போகவேண்டும். ஆனால் நீங்கள் மூன்று வகுப்புகள் அடங்கிய பாடசாலைகளைத் தனியாகவோ, அல்லது இரண்டு, மூன்று உபாத்தியாயர்களைக் கொண்டோ திறமையாக நடத்தி வருவதுடன் 5-வகுப்பு வரையில் பூர்த்திபெற்ற பாடசாலைகளுக்கு உங்கள் பிள்ளைகளைத் தவறாமல் அனுப்பியும், கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படும் ஆபீஸர்களின் மேற்பார்வைக்கு உட்பட்டிருக்க நீங்கள் சம்மதித்தால் ஆரம்பக் கல்வித் திட்டத்தில் உங்கள் பாடசாலைகளுக்கு இடமுண்டு. பிரஸ்தாபிக்கப்படும் கவர்ன்மெண்டு அறிக்கையோ அல்லது வேறு திட்டமாவது அமுலுக்கு வருவதற்குள் உங்களுடைய பாடசாலைகளை நன்கு அமைத்துக் கொள்ளுங்கள். கல்வியை இலவசமாகவும் கட்டாயமாகவும் பரப்புவதற்குக் கவர்மெண்டுக்குத் திறமையுள்ள பாடசாலைகள் சிறியதாயிருந்தாலும், பெரியதாயிருந்தாலும் வேண்டியிருக்கும். ஆனால் திறமையில்லாத பாடசாலைகளின் நிர்வாகத்தைத் தனிப்பட்டவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்படும்.

கவர்ன்மெண்டார் சற்று ஏறக்குறைய ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்து போர்டுகள், முனிஸிபாலிடிகள், இவைகளால் நிர்வாகம் செய்யப்படும் பாடசாலைகளைத் தாமே எடுத்துக் கொள்ளக்கூடும், தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் 'எயிடெட்' பாடசாலைகளைக் கவர்ன்மெண்டார் இப்பொழுது எடுத்துக் கொள்ளச் சாத்தியமில்லை. ஆகையால் இம்மாகாணத்திலுள்ள நூற்றுக்கு ஐம்பது பாடசாலைகளை கவர்ன்மெண்டே நிர்வகிக்கும். மானேஜர்களின் ஒத்துழைப்புத் தேவையில்லை என்று (கவர்ன்மெண்டுக்கு)த் தோன்றினால் அவர்களால் நடத்தப்படும் பாடசாலைகளையும் எடுத்துக் கொள்ளக் கூடும். ஆனால் அம்மாதிரியான முடிவிற்கு கவர்ன்மெண்டு வரும் என்று என்றால் நம்ப முடியவில்லை. எல்லாப் பாடசாலைகளின் நிர்வாகத்துக்கும் பணம் கிடைப்பது கஷ்டமாயிருக்கும். ஆகையால் சிக்கன முறையை அநுசரித்தும் அனுபவத்தை ஒட்டியும் நன்றாகத் திறமையுடன் நடத்தப்படும் எயிடெட் பாடசாலைக்கு இம்மாகாண கல்வி அபிவிருத்தியில் திட்டமாகவும் நிரந்தரமுமானதான இடமுண்டு.

கல்வி உலகில் ஊழல் இருப்பதற்கு காரணம் கிராண்டு தான். இன்னும் சிறிதுகாலத்திற்குக் காங்கிரஸ் கவர்ன்மெண்டு அதிகாரத்திலிருக்குமானால் இந்த ஊழல் அகற்றப்படும். சந்துஷ்டி நிறைந்த கல்வி திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்பதே எங்கள் நோக்கம்.

## நிறைவேறிய தீர்மானங்கள்

சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்களின் 5-வது மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் பின்வருவன.

கிராண்டு சம்பந்தமாக 1937 ௵ ஜனவரி மாதத்திலிருந்து அமுலுக்கு வந்துள்ள பல விதிகள் பூர்த்தியாகாத திறமையாயுள்ள பாட



சாலைகளையும், ஒரு உபாத்தியாயரால் நடத்தப்படும் திறமையுள்ள பாடசாலைகளையும் பாதிப்பதாலும், கல்வி அபிவிருத்தியைத் தடை செய்வனவாகவிருப்பதாலும் ஆரம்பக் கல்விச் சட்டத்தை மறுபடியும் திருத்தி அமைக்கும் வரையில் கிராண்டை நிர்ணயிக்கப் பழைய விதிகளையே அனுசரிக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்ளுகிறது.

பள்ளிக்கூடங்களில் வாடகைக்காகச் செலவிடப்படும் தொகையில் 50% ம், உபகரண சாமான்கள் முதலியவைகளுக்குச் செலவழிக்கப்படும் தொகையில் 75% கவர்ன்மெண்டார் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறது.

(2) இப்பொதுள்ள உயர்தர ஆரம்பக் கல்வி பரிக்ஷை முறையை மாற்றக்கூடாதென்றும், அவ்வாறு மாற்றுவதற்கு அவசியமேற்பட்டால் சம்பந்தப்பட்ட பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் கொடுக்கும் சர்டிபிகேட்டை ஏற்றுக்கொண்டு திறமையும், புத்திசாலித்தனமும் வாய்ந்த மாணவர்களை, செகண்டரி பள்ளிக்கூடங்களில் 4-வது பாரங்களில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற விதியுடன் மாற்ற அபிப்பிராயப்படுகிறது.

(3) பூர்த்தி பெறாத பாடசாலைகளை 5-வது வகுப்பு வரையில் கூடிய சீக்கிரத்தில் உயர்த்த வேண்டுமாறு ஷை பாடசாலை ஆசிரிய மானேஜர்களைக் கேட்டுக் கொள்கிறது.

(4) புதிய கல்வித் திட்டத்தை அமுலுக்கு கொண்டு வருவதற்கு முன்பு கல்வி விற்பன்னர்கள் ஸ்தல ஸ்தாபனப் பிரதிநிதிகள் இதர கல்வி ஏஜன்ஸிக்களின் பிரதிநிதிகள் இவர்களடங்கிய கமிட்டி ஒன்றை நியமித்து விசாரணையை நடத்த வேண்டுமென மகாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(5) பள்ளிக்கூடத்திற்குச் செல்லத் தக்க வயதான எல்லாக் குழந்தைகளையும் அருகிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பும்படி இடைவிடாமல் பிரசாரம் செய்வதில் ஆசிரிய மானேஜர்கள் சங்கங்கள் முனைந்து வேலை செய்யும்படி நாடுகிறது.

(6) ஆரம்பக் கல்விச் சட்டத்தைத் தக்க திருத்தல், ஜில்லா கல்விச் சபைகளைத் திருத்தி அமைத்தல், இவ்விஷயங்களில் சர்க்காருக்கு யோசனைகள் கூறுவதற்காக 16 அங்கத்தினர்களடங்கிய பிரத்யேகக் கமிட்டி ஒன்றை நியமித்து. இத்துடன் ஒவ்வொரு ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் சங்கங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 2 பிரதிநிதிகளும் ஒத்துழைப்பார்கள்.

# பத்திராதிபர் குறிப்பு

## வர்தாக் கல்வி மகாநாடு

சில நாட்களுக்கு முன்பு வர்தாவில், மகாத்மா காந்தி அவர்களின் ஆதரவில் ஒரு கல்வி மகாநாடு கூடியது. தேசியக் கட்சியினைச் சேர்ந்த பெரியோர்களும் மகாணக் கல்வி மந்திரிகளும் கல்விமுறை அநுபவ முள்ளவர்களும் கல்விச் சீர்திருத்தத்தைப் பற்றி ஆலோசனை செய்தார்கள். கல்விச் சீர்திருத்தத்தின் அவசியத்தை மாகாணக் கல்வி மந்திரிகள் அறியும் பொருட்டே இம்மகாநாட்டை மகாத்மா கூட்டினாரென்று கருதுவது தவறாகாது. ஆரம்பப் படிப்பாகிய முதற்படிப்பு இத்தன்மையதா யிருத்தல் வேண்டுமென்று ஜனங்களின் பிரதிநிதிகள் யோசித்துக் கூறியது மிகவும் பாராட்டத்தக்கது. இம்மகாநாட்டில் பொதுவான ஒரு தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது. இது முக்கியமாய் ஆரம்பப் படிப்பைப் பற்றியதே. பாட திட்டங்களைப்பற்றியும் ஆரம்பக் கல்வி சம்பந்தமான வேறு பல விஷயங்களைப்பற்றியும் நுட்பமாய்க் கவனித்து ஒரு ரிபோர்ட் தயார் செய்யக் கமிட்டி யொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. கமிட்டியின் ரிபோர்டு வந்த பின்னரே வர்தா திட்டத்தினைச் சரியாயறிய முடியும். பொதுஜனங்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதற்காக, தீர்மானத்தை மாத்திரம் இப்போது வெளியிட்டிருக்கிறார்கள். இத் தீர்மானத்தில் பல கொள்கைகளைக் காணலாம். அவையாவன :

(1) எல்லோருக்கும் முதற் படிப்பு ஏழாவது வயதில் தொடங்கி ஏழு வருடங்களுக்கு இலவசக் கட்டாயப் படிப்பாகத் தொடரவேண்டும்; (2) தாய்ப் பாஷையிலேயே பாடங்களைக் கற்பிக்கவேண்டும்; (3) ஏதேனும் சில சரியான கை வேலையை அனுசரித்தே எல்லாப் பாடங்களையும் கற்பித்தல் அவசியம்; (4) பள்ளிக்கூடங்கள் சுய சம்ரக்ஷணை (Self Supporting) நிலையிலிருக்க வேண்டும்; (5) சர்க்காரே பள்ளிக்கூடங்களை நடத்தவேண்டும்.

மேற்கூறிய கொள்கைகளைப் பற்றி மேடைகளில் பலர் பேசிவருகிறார்கள். பத்திரிகைகளிலும் பலர் எழுதுகிறார்கள். கமிட்டியாரின் ரிபோர்டு வருவதற்கு முன்பு திட்டத்தின் உண்மையைப் பற்றி விரிவாயெழுதுவது கடினமாகும். உயர்தரக் கல்வியைப் பற்றி யோசனை



சொல்லவில்லையே என்று சிலர் குறை கூறுகிறார்கள். இப்போதுள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் கதி யென்னவென்று சிலர் கேட்கிறார்கள். மூன்று வயது முதல் 7 வயதுட்குட்பட்ட குழந்தைகளின் படிப்புக்கு வழி யென்ன என்பார் சிலர். சீக்கிரத்தில் வெளியிடப்படும் ரிபோர்டில் எல்லாக் கேள்விகளுக்கும் தகுந்த பதில் இருக்குமென்று நம்புகிறோம்.

வர்தா மகாநாடுத் தீர்மானத்தை ஆசிரியர்கள் கவனித்தல் அவசியம். ஆரம்பப் படிப்பு இலவசக் கட்டாயப் படிப்பா யிருக்கவேண்டுமென்பதை நாம் ஒத்துக்கொள்வது சரியேயாகும். கட்டாயப் படிப்பு ஏழு வருடத்திற்குத் தொடர வேண்டுமென்ற கொள்கையையும் நாமாதரிப்பது அவசியம். மேல்நாட்டுத் தேசங்களில் குழந்தைகளை பதினைந்து வயது வரையில் படிக்கும்படி கட்டாயப் படுத்துகிறார்கள். தேசியக் கட்சியார் கட்டாயப் படிப்பு முறையில் பொறுப்பை தேச நன்மைக்காக வகிக்கத் தயாராயிருக்கிறார்கள். அவருடைய கொள்கையை ஆதரிப்பதுமன்றி நம்மாலியன்றமட்டும் உழைக்கத் தயாரா யிருப்பதைத் தெரிவிக்கவேண்டும். தாய் பாஷையிலேயே பாடங்களைக் கற்பிக்க வேண்டுமென்னும் கொள்கை நமக்குப் புதிதானதல்ல. ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலும் ஸெகண்டிரி பள்ளிக்கூடங்களில் கீழ் வகுப்புகளிலும் தாய்ப் பாஷையிலேயே பாடங்களைப் போதித்து வருகிறோம். இக்கொள்கையையும் நாம் அங்கீகரிப்பதில் யாதொரு கஷ்டமில்லை. வர்தா தீர்மானத்தில் ஒரு முக்கியமான போதனை உண்மை அடங்கியிருக்கிறது. சரியான கை வேலையை அநுசரித்தே பாடங்களை யெல்லாம் கற்பிக்க வேண்டுமென்பது போதனை சாஸ்திரக்காரர்கள் வற்புறுத்தும் உண்மை. இக்கொள்கையை நம் மாகாணத்தில் ஏட்டுச்சுரக்காயாகக் கருதி கவனியாம லிருக்கிறோம். கை வேலையை ஒரு பாடமாகக் கருதக் கூடாதென்றும் குழந்தையின் போதனைக்காக கை வேலை ஒரு பெரிய சாதனமென்றும் பெரியோர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இக்கொள்கையை ஆசிரியர் எவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்களென்றே உறுதியாய்ச் சொல்லலாம். கூடிய வரையில் இக்கொள்கையைப் பழக்கத்திற்குக் கொண்டுவரும் வழிகளைத் தேடுவது ஆசிரியர்களின் கடமை. கைவேலை குழந்தையின் படிப்பிற்கு மிகவும் சாதகமாயிருக்கும் தன்மையை ஆசிரியர்கள் முக்கியமாய் பாராட்டவேண்டும். இக்கைவேலையின் பயிற்சியால் பின்னால் பிழைப்புக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கக்கூடுமாயென்னும் தர்க்கத்தில் ஆசிரியர்கள் கலந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை. பிழைப்பதற்கும்

சாதகமாயிருப்பின் கைவேலையை ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் கவனிப்பது நலமாகும். கைவேலை மூலமாய்ப் பாடங்களைக் கற்பிப்பது சாதாரண காரியமல்ல. தகுந்த அனுபவமும், சாமர்த்தியமுமுள்ள ஆசிரியர்களே இத்தகைய பெரிய காரியத்தைச் செய்யமுடியும். மேலும், ஆசிரியர்களெல்லோரும் கைவேலையைச் சாதனமா யுபயோகிக்கக் கூடியவர்களாக இருக்கவேண்டும். ஆகவே நமது போதனா பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் புதிய வழியில் உபாத்தியாயர்களைப் பழக்குவதை மேற்கொள்ள வேண்டும். சுய சம்ரக்ஷணையைப்பற்றி அபிப்பிராய பேதமிருப்பது ஆச்சரியமல்ல. அந்த வார்த்தைகளைப்பலர் பலவிதமாய் உபயோகிக்கிறார்கள். உபாத்தியாயர்களின் சுயமரியாதையைக் கெடுக்கும் வழியை மகாத்மாவும், தலைவர்களும ஆதரிக்கமாட்டார்களென்று நாம் நம்பலாம். ஆயினும் குழப்ப மேற்பட்டிருக்கிறபடியால், ஆசிரியர்களின் எண்ணத்தைத் தெரிவிப்பது அவசியம். ஆசிரியர்கள் குழந்தைகளிடமிருந்து புத்தகங்களை விற்று லாப மடைவதாக படித்தவர்கள்கூட கூசாமல் புகார் சொல்லுகிறார்கள் குழந்தைகள்செய்த சாமான்களை விற்று அப்படி கிடைத்த தொகையினின்றும் உபாத்தியாயர் சம்பளத்தைக் கொடுப்பதாக எண்ணமிருப்பின் அது கல்வி முன்னேற்றத்திற்கே பெரிய இடையூறாகும். கிடைத்த பணத்தை புத்தகத்திற்கோ குழந்தைகளின் மத்தியான சாப்பாட்டிற்கோ உபயோகிப்பது நியாயமாகும். உபாத்தியாயரின் சம்பளம் சர்க்காரே கொடுப்பதுசரியாகும். பள்ளிக்கூடங்கள் சர்க்கார் பள்ளிக்கூடங்களாயிருக்க வேண்டுமென்பது வர்தா தீர்மானம். சர்க்காரே சம்பளத்தைக் கொடுப்பது அவசியம். எக்காரணத்தினாலாவது மானேஜர்கள் பள்ளிக்கூடங்களை நிர்வாகஞ் செய்யவேண்டியிருந்தால், உபாத்தியாரின் சம்பளத்தை சர்க்காரே கொடுப்பது அவசியமாகும். இல்லாவிடில் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலுள்ள ஊழல் நீங்காது.

147645

*Wanted publishers to purchase the following manuscripts written by C. S. Ramaswamy Iyer, Retired Teacher and author of Child's History of India, Heroines of Ind, etc.*

| | | |
|---|---|---|
| English Conversation Book I | | for Class IV |
| do. do. Book II | | do. V |
| Arithmetic for Beginners ... | ... | in Tamil |
| Domestic Hygiene ... | ... | in Tamil |
| Stories from Indian History ... | ... | for Class V |
| Tamil Primer for Beginners | ... | ... ... |

For terms, please write for outright purchase of the Copyright of the above

to The Editor of this Magazine or to:

C. S. RAMASWAMY IYER (*Retired Teacher*)

**2/12-A, Alangatha Pillai Street : : Triplicane, Madras.**

---

**A NEW SERIES OF ENGLISH READERS FOR SCHOOLS IN INDIA**

## The Coronation English Readers

**Edited by Prof. J. C. ROLLO, M.A.**

*Principal, Maharaja's College, Mysore*

| | | |
|---|---|---|
| Primer, Part I | (3rd Class) | Annas 3 |
| Primer, Part II | (4th Class) | Annas 3 |
| Primer, Parts I & II | | Annas 6 |
| Book I | (5th Class) | Annas 6 |
| Book II | (1st Form) | Annas 8 |

Books III & IV will be ready shortly.

The above series of English Readers are the result of thorough study of the present day needs of pupils learning English at the early stages. The books are well got up with many illustrations. A perusal of the books will convince any teacher of their special merits.

Applications for specimens from teachers will be attended to immediately.

**B. G. PAUL & Co., Educational Publishers**

**12, Francis Joseph Street, G.T., MADRAS**

*Regd. No. M. 3473*

நீங்கள் செலுத்துவது

# மாதம் ஒரு ரூபாய்

உங்கள்

வார்சுகளுக்குக் கிடைப்பது

## ரூ. 250-லிருந்து ரூ. 375-வரையில்

# தென் இந்திய ஆசிரியர் ஜக்கிய காப்பு நிதியில்

உடனே சேருங்கள்

41, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதருஸ்.

கௌரவ காரியதரிசி.

Printed by K. Sadagopachariar at the Liberty Press, 7,Sunkurama Chetty St., G.T., & Published by Mr. M. S. Sabhesan, M.A. For The South India Teachers' Union, 41, Singarachari St., Triplicane, Madras.

57] 8
தொகுதி 2]

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

JAN 1938

ஈஸ்வர ௵ கார்த்திகை ௴
- DECEMBER 1937 -

பிரசுர கர்த்தர்கள் :

## தென் இந்திய ஆசிரியர் சங்கம்

41, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதருஸ்.

வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதியின் விலை 0—4—

# பொருளடக்கம்


பக்கம்

1. ஆரம்பப் பள்ளிக்கூட பாஷா போதனைக் குறிப்புகள் .... ... 205
—S. ஜகந்நாதன்

2. வார்தா கல்வித் திட்டம் .... .... 219

3. தமிழ்ச் செய்யுளும் கற்பிக்கும் முறையும் .... 225
—வித்வான் சாரங்கபாணி அய்யங்கார், மைலாப்பூர்

4. குழந்தைகளின் கை வேலை .... .... 229
—கே. சுவர்ணவல்லி

5. பத்திராதிபர் குறிப்பு .... .... .... 231



## கௌரவப் பத்திராதிபர்கள்

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. ஷால்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்

—நிர்வாகப் பத்திரிகாசிரியர்

# பாலர் கல்வி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - JAN 1938
MADRAS

தொகுதி 2 | 1937 ஹு டிசம்பர் மீ
ஈஸ்வர ஹு கார்த்திகை மீ | பகுதி 8

## ஆரம்பப் பள்ளிக்கூட பாஷா போதனைக் குறிப்புகள்

### பாஷை சம்பந்தமான அப்பியாசங்கள்

சென்னை-600 008.

---

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை

பாஷா போதனை சம்பந்தப்பட்டமட்டில் நான்கு சக்திகள் வெளியாகின்றன. ஒன்று உள் கருத்தைத் தெரிவிப்பது என்பது முதன்மையானது. மற்றும் பாஷையில் தேர்ச்சி யடையும்படி செய்வது, அதை மேன்மேலும் விருத்திசெய்ய வழி தேடுவது,இருக்கிற சக்தியைக் கொண்டு மேன்மேலும் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்களைப் பற்றி, நூல்களிலிருந்து அல்லது மற்றெந்த சாதனத்தைக் கொண்டோ ஆராய்ந்து அறிவது ஆகிய பின் மூன்று சக்திகளையும் வளர்க்க பள்ளிக்கூடம் இடம் கொடுக்கவேண்டும். அதற்கேற்ற முறைகளையும் சாதனங்களையும் உபாத்தியாயர் கையாண்டும் பள்ளிக்கூடத்திலேயே அமைத்துக் காட்டுவதும் அவசியமாகும் பாஷையினால் மனோபாவம் தெரிகிறது. அதே பாஷையினால் மனோபாவம் மாறுபடும்படியும் செய்யலாகும். கீழே விழுந்தக் குழந்தையை நோக்கி மூன்றுவிதமாகச் சமாதானம் செய்யலாம்.

A. I. காயம்படவில்லை
போனால் போகிறது
நீ மெதுவாய் நடந்துவா

II. தரை பள்ளமாய்ப் போச்சு
அதை அடைத்துவிடுகிறேன்

III. ஐயோ! முகமெல்லாம் வீங்கிப்போச்சே
இரத்த வெள்ளமாய்க் கொட்டுகிறதே
ஏண்டி அம்மா! அழாதெடி
} இதேமாதிரி ஒரே இரைச்சல் அழுகை.

147645
சென்னை 600 008



மூன்றாவது முறையினால் பயம் அதிகமாகி விடுகிறது. மனோ தைரியம் குன்றிவிடுகிறது. கோழைத்தனம் ஓங்கிவிடுகிறது.

B. i. பிச்சைக்காரனுக்கு அரிசி போடு
சாதம் போடு
தம்பிடி கொடு
பிச்சைப் போடு;

ii. வாசலில் ஏறாதே
காலடி வைக்காதே
ஓடுகிறாயா உதைக்கட்டுமா !

இரண்டாவது விதம் மனதைக் கல் நெஞ்சாக்குகிறது. இம்மாதிரி மன நிலைமையும் பாஷையும் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டிருக்கிறது, குழந்தைகளிடம் இது தெளிவாக விருக்கிறது. வீடும், சுற்றுப்புறமும். சமூகமும். பாஷாபிவிருத்தியில் ஏற்படும் அப்பியாசமும் இவற்றிற்குக் காரணமாகும். நடவடிக்கைகளில் பிற் பகுதியில் சொல்லப்பட்ட மூன்று சக்திகளையே மேலோங்கசெய்யப்படுகின்றன. அம்மூன்று சக்திகளிலும் கூட இயற்கை யன்னை வேண்டிய சாதகம் செய்துவருகிறாள். மனுஷ்ய சுபாவத்திலேயே அம்மூன்று சாதனங்களையும் கையாளவேண்டிய பிரமேயங்கள் நேரிடுகின்றன; இங்கும் குழந்தையே சரியான உதாரணமாகும்.

வயது 2 +

"i. உங்காத்தில் என்ன சமையல்
மம்மு, தச்சி, ரஸம், பப்பு, கோம்பு, கக்காய்

ii. கடைக்குப் போய் என்ன வாங்கலாம்
அப்பச்சி, கக்கு, பிசுகோத்து, ஆப்பயம், தாச்சப்பயம்."

வயது 3 +

i. இந்தக் காசு செல்லுமே
காசு செல்லாதோ பார்க்கிறேன்

ii. மாமி இந்தாங்கோ குங்குமம்
நீங்க ஒரு பாட்டு பாடுங்கோ !

iii. ஒரு கையிலே கூடையை வச்சுக்கோ
அந்தக் கையாலே சொரியேன்

சந்தர்ப்பம் ஏற்பட ஏற்பட பாஷை அதிகரிக்கிறது. சுய சக்தி விருத்தியடைய ஆரம்பிக்கிறது.

ஆகவே சுய சக்தி விருத்தி யடைவதிலும், பாஷையைச் சரிவர விருத்தி செய்யப் போதுமான சந்தர்ப்பம் ஏற்படுத்துவதிலும் காலம் கழிப்பது நல்ல பயனைத் தரும். அவ்வப்பியாசங்கள் படிப்படியாக உயர்ந்து கொண்டே வரவேண்டும்.



சுய சக்தியை வளர்க்கும் அப்பியாசங்கள்

1. இங்கு இருக்கும் படங்களையும் வார்த்தைகளையும் பார். அந்தந்தப் படத்திற்கு நேர் சரியான வார்த்தையைப் பொறுக்கிவை.

2. இதோ காட்டப்பட்டுள்ள படங்களைப் பார். ஒவ்வொரு படத்திலிருந்தும் உனக்கு என்னென்ன வார்த்தைகள் ஞாபகத்திற்கு வருகின்றனவோ அவைகளை அந்தந்தப் படத்திற்கு நேரே எழுதிக்காட்டு.

3. உனக்குக் கொடுக்கப்பட்ட பெட்டியில் சில வார்த்தைகள் இருக்கின்றன. அவற்றை பெட்டியின்மீது கண்டபடி பிரித்து வைத்துக் காட்டு.

(1937 மேயீ பாலர் கல்வி கவனிக்க)

4. A இங்கு காட்டியுள்ள பாடங்களைப் படி . படத்தின் அடியில் குறிக்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் எழுது.

பாலம்:—மாமி! எங்கள் ஆத்தில் கொலு வைத்திருக்கிறது. அம்மா உங்களை மஞ்சள் குங்குமம் வாங்கிக்கொள்ள அழைத்துவரச் சொன்னாள். நீங்கள் கட்டாயமாக சாயங்காலம் வாருங்கள் அம்மாமி !

மாமி :—பாலம்! நீ மஞ்சள் குங்குமம் வாங்கிக்கொள். நான் சாயந்திரம் ஒழிந்தால் வருகிறேன். இல்லாவிட்டால் நாளைக்குக் கட்டாயம் வருகிறேன் என்று அம்மாளிடம் சொல்லு. இந்த வருஷம் அம்மா ஏதாவது புதிதாகப் பொம்மை வாங்கியிருக்கிறாளா சொல் பார்ப்போம்.

பாலம்:—குறவன், குறத்தி; மாம்பழக் கிருஷ்ணன், தவழுகிற கிருஷ்ணன்; வண்ணான் வண்ணாத்தி; மளிகைக்கடை செட்டி; மகாத்மா காந்தி; இன்னும் என்னென்னவோ வாங்கி யிருக்கிறாள். நாழியாச்சு அம்மாமி, எனக்கு இன்னமும் நாலு ஆத்திற்கு போகவேணும் போய் வருகிறேன்.

மாமி:—பாலா! ஜாக்கிரதையாய் போய்வா. இந்தா கொஞ்சம் சுண்டல் வாங்கிக்கொள்.

பாஷா அப்பியாசம்

1. உன் வீட்டுக் கொலுவில் உள்ள பொம்மைகள் சிலவற்றின் பெயரை எழுது.

| | |
|---|---|
| புதிய | பழைய |
| 2. புது பொம்மை | பழம் பொம்மை |
| புதுப் பாவாடை | பழம் பாவாடை |
| புதுத்துணி | பழந்துணி |
| புது வீடு | பழ வீடு. |

N36PA

இம்மாதிரி புதிது, பழையது என்று காட்டும்படி இன்னும் 6, 6 வார்த்தைகள் எழுது.

3. உன் வீட்டு உறவினர்கள் பெயரை எல்லாம் எழுது.

**B. பாடம் 2**

வண்ணான்:—அம்மா சலவை கொண்டுவந்திருக்கிறேன்.

அம்மா :—ராமு! வண்ணான் கணக்கைப்பார். உருப்படி எல்லாம் சரியாய் இருக்கிறதா பார்.

ராமு :—மொத்தம் பதினெட்டு, சரியாய் இருக்கிறது, அம்மா.

அம்மா :—ராமு! இன்றையதினம் அழுக்குக் கூடையில் சேர்த்து வைத்திருக்கும் அழுக்குத் துணிகளைப் போடு. தீபாவளிப் புதுசுகளைச் சரியாய் கணக்குப் பண்ணிக்கொள். கணக்கு சரியாய் எழுதிக்கொள்.

| | | | |
|---|---|---|---|
| புது வேஷ்டி | 3 | குழந்தை உள் சட்டை | 8 |
| அப்பா சட்டை | 2 | கைக்குட்டை | 4 |
| புதுக் கதர் | 2 | கதர் தொப்பி | 3 |
| கொசுவலை | 2 | புதுத்துண்டு | 4 |
| தலையணை உரை | 6 | பாவாடை | 2 |
| மெத்தை உரை | 2 | ரவிக்கை | 2 |
| குழந்தை சட்டை | 2 | | |
| குழந்தைநிஜார்(புதுசு) | 3 | மொத்தம் | 45 |

பாஷா அப்பியாசம்

1. உன் வீட்டில் எவைகளை வண்ணானுக்குப் போடுவார்களோ அவைகளை விவரமாக எழுதிக்காட்டு.
2. தீபாவளிக்கு உனக்கு என்னென்ன படாஸ் தினுசுகள் வாங்கினார்கள் என்று எழுதிக்காட்டு.
3. அன்று தினம் உனக்கு என்னென்ன பக்ஷணம், பழம் கிடைத்தனவோ அவற்றின் பெயரை எழுதிக்காட்டு.
4. உங்கள் வீட்டில் காணப்படும் சில உடுப்புகளின் பெயர்களை எழுதிக்காட்டு.

**5. A.** தினசரிப் பத்திரிகை படித்து அறிதல்.

(சுதேசமித்திரன்)

## இந்த மீன்! 100 அடி நீளம் 20 அடி அகலம்

முத்துப்பேட்டையில் கோரையாறு சமுத்திரத்தில் சேருமிடத்திலிருந்து சுமார் 6 மைல் தூரத்தில் துளசியா பட்டணத்திற் கருகில் சுமார் 100 அடி நீளம், 20 அடி அகலமுள்ள ஒரு பெரிய மீன் சமுத்திரக் கரையில் வந்து சேற்றில் ஒதுங்கியிருக்கிறது. அந்த மீனின் மார்பிலுள்ள 2 சூடுகளிலிருந்து அது சுடப்பட்டு இறந்திருக்க வேண்டுமென நினைக்கப்படுகிறது. அதைச் சிலர் கடல் பேத்தை எனவும், சுறு மீன்களில் ஒருவகை எனவும் சொல்கின்றனர். இதைப்பார்க்க அநேக இடங்களிலிருந்து ஜனங்கள் படகுகளில் வந்து போய்க்கொண்டிருக்கின்றனர். —(ந. நி)



அப்பியாசம் :—

1. ஜனங்கள் பார்த்த ஆச்சரியமான வஸ்து என்ன?
2. அந்த மீனின் நீளம் அகலம் எவ்வளவு?
3. எந்த ஊர்க்கருகில் இந்த மீன் காணப்பட்டது?
4. அது என்ன மீன் என்று ஜனங்கள் சொல்கின்றனர்?
5. அது தானாக இறந்ததா, அல்லது வேறு எப்படி இறந்தது?

---

**B** பட்டாசுக் கடையில் கோர வெடி விபத்து

### இருவர் மாண்டனர் 8 பேர்களுக்குக் காயம்

மூவரின் கவலைக்கிடமான நிலை லக்ஷ ரூபாய் நஷ்டமாம்!

[நமது நிருபர் தந்தி]

திருச்சி, அக். 19—

இன்று காலை திருச்சி பாலக்கரை, கோட்டை மார்க்கட்டருகேயுள்ள ஜனாப் சையது அகமதீன் பட்டாசுக்கடையில் பெருத்ததோர் வெடி விபத்தேற்பட்டு விட்டது. இதன் பயனாக இருவர் மாண்டனர். 8 பேர்களுக்குக் காயமேற்பட்டு விட்டது. கடையில் பட்டாசுகளை சேமித்து வைக்க சையது அகமத் லைசென்ஸ் பெற்றிருந்தார். இதேபோல் சென்ற வருஷமும் இங்கு விபத்தேற்பட்டிருக்கிறது.

இவ்விபத்தினால் மேற்படி கடையிலிருந்த வரிசையில் 5 கடைகளும், எதிர் வரிசையிலிருந்த 4 கடைகளும் தூக்கி யெறியப்பட்டன. மற்றும் பல கடைகளுக்கும் சேத மேற்பட்டது. காயம் பட்டவர்களில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக விருக்கிறது. (ந. நி)

**கேள்விகள்.**

1. எந்த ஊரில் இந்த விபத்து ஏற்பட்டது?
2. இந்த விபத்தினால் எத்தனை கடைகள் நாசமாயின?
3. எத்தனை பேர் உயிரிழந்தனர்? மற்றும் எத்தனை பேர் கவலைக்கிடமான நிலைமையில் இருக்கின்றனர்?
4. கடைக்காரரின் பெயர் என்ன?

**6.** ரயில்வே நோட்டீசு

**A.** ஜன்னல்களின் வழியாக எட்டி எடுக்கக்கூடிய சாமான்கள் திருடக்கூடியபடியால் பிரயாணிகள் தூங்குவதற்கு முன்னும், பலகார வண்டிக்குப் போவதற்கு முன்னும் அவரவர்கள் கையிலுள்ள சிறு மூட்டைகளையும், உடைகளுள்ள பெட்டிகளையும், மேஜைமேலுள்ள மற்றச்சாமான்களையும் தங்களிடங்களின் கீழாவது, சாமான்கள் வைக்கும் பலகைகளின் மீதாவது ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ள வேண்டப்படுகிறார்கள்.

கேள்விகள்.

1. ரயில் வண்டியில் நமது சாமான்களை எங்கே வைத்தால் பத்திரமா யிருக்கும்?
2. எந்தெந்த சமயங்களில் சாமான்கள் சரியாக விருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்ள வேண்டும்?
3. பிரயாணிகள் தங்களது சாமான்களை எதில் எடுத்துச்செல்லுவார்கள்?
4. இந்த வாக்கியத்தைப் பல சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

**B.** வண்டி போய்க்கொண்டிருக்கும்பொழுது பிரயாணிகள் வண்டியின் கதவைத் திறப்பதாலும் ஜன்னல்களி லிருந்து எட்டிப் பார்ப்பதாலும் அபாயம் நேரிடுவதால் பிரயாணிகள் அப்படிச் செய்யக்கூடாது. ஜன்னல்களை ஜாக்கிரதையாய் நேரே அணைத்திரா விட்டால் அவர்கள் கீழே விழக்கூடும். இவைகளைக் கவனியாது நடக்கும் பிரயாணிகளுக்கு நேரிடும் ஆபத்திற்குக் கம்பெனியார் எவ்விதத்திலும் உத்திரவாதமல்ல.

கேள்விகள்.

1. பிரயாணிகளுக்கு எந்த இரண்டுவிதமாக அபாயம் நேரிடுகிறது?

2. ஜன்னல்கள் எப்படியில்லாவிட்டால் ஜனங்கள் கீழே விழ நேரிடும்?

3. இந்த எச்சரிக்கையைக் கவனியாது அபாயம் நேரிட்டால் கம்பெனியார் ஜவாப்தாரியா?

**7.**

| A. | B. |
|---|---|
| 1. இராமர் இராவணனைக் கொன்றார் | 1. இராவணன் இரமரால் கொல்லப்பட்டான் |
| 2. இராவணன் சீதையை எடுத்துச்சென்றான். | 2. சீதை இராவணனால் எடுத்துச் செல்லப்பட்டாள். |

A மாதிரி யுள்ளதை B மாதிரியாகவும்

B மாதிரி யுள்ளதை A மாதிரியாகவும் எழுதுக.



1. கஜேந்திரனை மகா விஷ்ணு காப்பாற்றினார்.
2. கிருஷ்ணன் கம்சனைக் கொன்றான்.
3. சபரி ஸ்ரீ ராமனை உபசரித்தாள்.
4. விசுவாமித்திரர் ஸ்ரீராம லக்ஷ்மணர்களைக் காட்டிற்கு அழைத்துச் சென்றார்.
5. அரசரால் ஜனங்கள் ரக்ஷிக்கப்படுகிறார்கள்.
6. ஸ்ரீராமரால் வாலி கொல்லப்பட்டான்.
7. ஹனுமார் ஸீதையைக் கண்டு பிடித்தார்.
8. ஸுக்ரீவன் இராமரால் காப்பாற்றப்பட்டான்.

**8.** மூன்று நான்கு எழுத்துப் பதங்கள் : சில வேடிக்கைகள்.

படத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டுத் தேவையான வார்த்தையைக் கண்டுபிடி.



இடை = நடு ; கடை = கடைசி.

**1.** முதலில் ஒரு மிருகத்தின் பெயராகும், முதல் எழுத்தை நீக்கின் நடுவில் தொங்கவிட்டிருப்பதின் பெயராகும், நடு எழுத்தை நீக்கின் நாயிடும் சத்தத்தைக் குறிக்கும், கடையெழுத்தை நீக்கின் குதிப்பதாகும். அது என்ன?

2. முதலில் கடவுளைத் தரிசிக்கும் இடத்தின் பெயரும், முதல் எழுத்து பசுவைக் குறிக்கும். பாக்கி இரண்டும் அம்பு எய்வதற்கு வேண்டியதைக் குறிக்கும், இடை எழுத்தை நீக்கின் தடியைக் குறிக்கும். அது என்ன?

3. முதலில் கசந்த கறிவகை ஆகும், முதல் எழுத்தை நீக்கின் கடினமான கல் ஆகும், நடுவெழுத்தை நீக்கின் புசு சுந்திடுவது ஆகும். அது என்ன?

4. முதலில் காட்டின் பெயராகும், இரண்டாம் எழுத்தை நீக்கின் காக்கை ஆகும், மூன்றும் எழுத்தை நீக்கின் பாட்டு ஆகும். அது என்ன?

5. முதலில் தையற்காரனின் ஆயுதமாகும், கடை யிரண்டைச் சேர்க்கின் நால் வேலையைக் குறிக்கும், முதல் எழுத்தும் கடைசியும் சேரின் எரிந்துபோன மிச்சத்தைக் காட்டும், கடையை நீக்கின் "அழ" என்பதைக் காட்டும். அது என்ன?

6. முதலில் ஒரு புஷ்பத்தின் பெயராகும், முதல் எழுத்து மாத்திரம் "கொடு" என்பதைக் காட்டும், இடையெழுத்தை நீக்கின் ஊது வதைக் காட்டும். அது என்ன?

## 9. பாஷையும் கை வேலையும்



A. ஒரே ஒரு ஆறு. அந்த ஆற்றங்கரையில் 5 ஆலமரங்கள். மரங்கள் இடையே ஒரு பர்ணசாலை. ஆற்றங்கரையில் மயில்கள் ஆடும்.
(பஞ்சவடி)



B. நாட்டைச் சுற்றிலும் மலை. மலை அடிவாரத்தில் புல் நிறைந்த மைதானம். ஊருக்குள் தடாகங்கள், வயல்கள். வீடுகள் தோறும் ஆடு மாடுகள் விசேஷமாகக் காணப்படும்.
(கோகுலம்)





C. ஒரு பட்டணமாம். பட்டணத்தின் நடுவில் ஒரு ஆறும். ஒரு பக்கத்தில் இராஜா அரண்மனையாம். அக் கரையில் இடைச்சேரியாம்.
(வட மதுரையும் கோகுலமும்)

இம்மாதிரி தோற்றங்களை அட்டைகள் கொண்டு தேவையான பொம்மைகள், மரங்கள், மற்றுமுள்ள உருவங்களைச்செய்து அக்காட்சியை காண்பிக்கச் செய்தல் நல்லது. சிற்சில இடங்களில் சித்திர வேலையும் செய்து காட்சியைச் சிறப்பிக்கச் செய்யலாம்.

## 10. சுயக்கருத்துகளை வெளியிடும் பாஷை அப்பியாசங்கள்

பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட 10 விஷயங்களும் அவர்கள் அவைகளின் கீழ் எழுதிய மாதிரிகளில் ஒவ்வொன்றும் அடியில் காணப் படுகின்றன.

A. தினம் காலையில் எழுந்தது முதற்கொண்டு இரவு தூங்கும் வரையில் நீ செய்யும் காரியங்களை எழுதிக்காட்டு.

காலையில் நான் எழுந்ததும் பல்லைத் தேய்ப்பேன். பிறகு வாசலில் கோலம் போடுவேன். பிறகு காப்பி சாப்பிடுவேன். அப்புறம் 7 மணிக் குப் படிப்பேன். பிறகு பாலுவைப் பார்த்துக்கொண்டு இருப்பேன். நான் என் அம்மாவுக்கு வேண்டிய காரியங்களைச் செய்வேன். பிறகு தலை பின்னிக்கொள்வேன். பிறகு நான் குளிப்பேன். என் தம்பி பாலுவுக்கு ஸ்நானம் செய்துவைப்பேன். பிறகு அவனுக்கு வேண்டிய காரியத்தைச் செய்வேன். அப்புறம் எங்கள் அப்பா, அண்ணா, தம்பி, அக்கா இவர்கள் தட்டுகளை அலம்பி வைப்பேன். பிறகு சாப்பிடுகிற இடத்தை நான் சுத்தம் செய்வேன். அதற்குள் எல்லோரும் குளித்து விடுவார்கள். நான் அவர்க ளுடைய இலைகளைப் போடுவேன். பிறகு தண்ணீர் எடுத்துவைப்பேன். அவர்கள் சாப்பிடுவார்கள். நானும் சாப்பிடுவேன். பிறகு என் தகப்ப னுக்கு வெற்றிலைபாக்கு எடுத்துவைத்து, அப்புறம் எச்சில் இடுவேன். அதற்குப் பிறகு துடைப்பேன். மத்தியானம் ஏதாவது பொம்மை கத்த

ரித்து ஒட்டுவேன். பிறகு காப்பி சாப்பிட்டுவிட்டு ஏதாவது சாப்பிடுவேன். சில பாத்திரங்களை அலம்பிக் கவிழ்ப்பேன். பிறகு முகத்தை அலம்பி தலைவாரி நெத்தியில் குங்குமம் இட்டுக்கொண்டு பாலுவை எடுத்துக் கொண்டு போவேன். விளையாடுவேன். 5 மணிக்கு வந்து படிப்பேன் சாப்பிடுவேன். தூங்குவேன். (ஸரஸ்வதி-வயது 10)

B. நீ ஒரு பெரிய பணக்காரனாகிவிட்டால் எப்படிப் பணத்தைச் செலவழிப்பாய்?

நான் ஒரு பெரிய வீட்டில் வசிப்பேன். வீட்டின் கொல்லையில் அநேக பூச்செடிகளை வாங்கி வளர்ப்பேன். குரோடன்ஸ் செடிகளை வளர்ப்பேன். மசூதிக்கு வேண்டிய பாய்கள் வாங்கி அளிப்பேன். வீட்டில் எலெக்டிரிக் வெளிச்சம் போடுவேன். தாய் தகப்பனார்களுக்கு வேண்டிய உடைகளையும் ஆபரணங்களையும் வாங்கிக் கொடுப்பேன்.

மசூதிக்கு மாதாமாதம் வெள்ளை யடிப்பேன். மசூதியைச் சுற்றிலும் ஒரு சிங்காரத் தோட்டம் வைப்பேன். ஒரு சிறிய குளமும் வைப்பேன். ஏழைகளுக்குத் தினந்தோறும் அன்னம் அளிப்பேன்.

வீட்டிற்கு வேண்டிய செலவுக்குக் கொடுப்பேன். பண்டிகைக்கு வரும் ஏழைகளுக்கு அன்னம் அளித்து வஸ்திரம் கொடுத்து உபசரிப்பேன்: ஆனாலும் குடும்பத்தை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்வேன். மசூதியின் கட்டிடம் இடிந்துவிட்டால் அதைக் கட்டுவேன்.

எந்தப் பரம ஏழையானாலும் அவர்களுக்குச் சிறிய அறைகள் வாங்கிக் கொடுப்பேன். யார் படமா யிருந்தாலும் நன்மை, தர்மம் செய்தவர்களின் படங்களை வாங்கி வீட்டில் தொங்கவிடுவேன். குழந்தைக்கு விளையாட்டு சாமான்கள் வாங்கித் தருவேன். மோட்டார்கார், சைகில் வாங்குவேன். (A. அப்துல் ரகீம்—வயது 10)

C. நீ கண்ட கனவுகளில் ஞாபகமுள்ளதை எழுது.

நான் சமுத்திரக் கரையில் இறந்துவிட்டதாக நினைத்துக்கொண்டிருந்தேன்.

நான் லண்டனுக்கு கப்பலில் ஏறிக்கொண்டு போகிறமாதிரி கனவு கண்டேன்.

ஒரு நாள் என் தகப்பனார் பௌண்டன் பேனா வாங்கித் தருகிற மாதிரி கனவு கண்டேன்.

நான் கடவுளை பார்க்கிற மாதிரி கனவு கண்டேன்.

நான் ஏரோப்ளேனில் ஏறிக்கொண்டு போவதாகவும் அது சிறிது தூரம் போனவுடன் கீழே விழுந்துவிட்டதாகவும் கனவு கண்டேன்.

நான் சிங்கக் குட்டியை எடுக்கும்போது தாய்ச் சிங்கம் என்னை கடிக்கவந்தது. அதோடு போராடி அதைக் கொன்றுவிட்டு சிங்கக் குட்டியை எடுத்துக்கொண்டு வந்தேன். (S, ராமமூர்த்தி—வயது 9)



147645 சென்னை-600 008.

D. சர்க்கஸ், ஸினிமா, தெருக்கூத்து, டிராமா, தெருவித்தை இவைகளில் நீ பார்த்த ஆச்சரியங்களை எழுது.

1. பூகம்பம் வருகிறது
2. பாம்புத் தோலை பாம்பாக்குகிறான்.
3. ஒருவன் மேல் கத்தியால் குத்துகிறான்
4. ஒருவன் சிங்கத்தின் வாயில் கையை விட்டான்.
5. ஒரு பெண் கம்பியின்மேல் ஸ்டூலை போட்டுக் குடைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தாள்.
6. தன் வினை தன்னைச் சுடும், ஒட்டப்பம் வீட்டைச் சுடும் என்று சொல்லி அப்பத்தை வீட்டின்மேல் எறிந்தார் உடனே வீடு திகுதிகு என்று எரிந்தது.
7. பூகம்பம் வரும்பொழுது எலெக்டிரிக் விளக்கு விழுகிறது.
8. ஒருவனை ஒரு பெரிய சாக்கில் கட்டிவிட்டு அவனைப் பெட்டியில் உட்காரவைத்துப் பூட்டிவிடுகிறார்கள். உள்ளே இருந்தவன் அந்தப் பெட்டியைத் திறந்துகொண்டு சாக்கை அவிழ்த்துக்கொண்டு மணியை ஆட்டிக் கொண்டு வெளியே சுற்றினான். (ராஜாராமன், வயது 9)

E. தீபாவளி தினத்தை நீ எப்படி சந்தோஷமாகக் கழிப்பாய்.

நான் தீபாவளி தினம் விடியற்காலையில் எழுந்து எண்ணெய் தேய்த்துக் குளிப்பேன், பிறகு நல்ல பாவாடையும் நல்ல சட்டையும் ஆபரணங்களும் போட்டுக்கொள்வேன்; பிறகு தலை பின்னிக்கொள்வேன், எங்கள் அப்பா டபாஸை உதிர்த்து ஆளுக்குக் கொஞ்சம் கொடுப்பார். அதை நாங்கள் சுட்டுவிட்டு பிற்கு கம்பி மத்தாப்பு கொளுத்துவோம். பிறகு எங்கள் அப்பா ஏரோப்ளேன் வெடி, யானை வெடி முதலிய வெடிகளைச் சுடுவார். பிறகு எல்லோரும் பக்ஷணம் சாப்பிடுவோம். சாப்பிட்டுவிட்டு படபட, மத்தாப்பூ முதலியவைகள் விடுவோம். பிறகு 9 மணிக்குச் சாதம் சாப்பிட்டுவிட்டு கொஞ்ச நாழிகை விளையாடுவேன். 12மணியிலிருந்து 1 மணி வரையில் தூங்குவேன். அதன் பின் டிபன் சாப்பிடுவேன். தலை பின்னிக்கொண்டு முகம் அலம்பிக்கொள்வேன். பிறகு பாட்டு கற்றுக்கொண்டு 5 மணிக்கு விளையாட வருவேன்.

6½ மணிக்கு வீட்டிற்கு வந்து சாப்பிடுவேன், பிறகு 7 மணியிலிருந்து 8½ மணி வரையில் படிப்பேன். பிறகு தூங்குவேன்.

(செல்லம்மாள், வயது 10)

F. ஒரு கலியாண வீட்டிற்கு சென்றால் நீ என்னென்ன பார்ப்பாய்க் பேசுவாய், எப்படி வேடிக்கையாக அன்றைப் பொழுது போகுவாய்.

JL
T15M21, N36P5

நான் முதலில் நல்ல பாவாடைகள் நல்ல சட்டைகள் முதலியவை உடுத்துக்கொண்டு ஆபரணங்கள் போட்டுக்கொண்டு போவேன். அங்கே எங்கள் உறவினர்களுடன் பேசுவேன். அவர்கள் எங்களுக்குப் பலகாரங்கள் கொடுப்பார்கள். பிறகு என் சிநேகிதர்களுடன் விளையாடுவேன். பிறகு பெண்ணையும் மாப்பிள்ளையையும் மனையில் உட்காரவைத்து மேளம் வாசிக்கச் சொல்லுவார்கள். சாஸ்திரிகள் மந்திரம் சொல்லுவார்கள். சந்தனம் வெற்றிலைப் பாக்கு குங்குமம் கொடுப்பார்கள். பிறகு சாப்பிட இலை போடுவார்கள். அப்போது சாப்பிட எல்லோரும் வருவார்கள். எல்லோருக்கும் பாயஸம், அப்பளம், வடை, பக்ஷணம் போடுவார்கள், பிறகு கைகால் அலம்பிக்கொண்டு உள்ளே போய் உட்காருவார்கள். சற்று நேரமானதும் கிராம்போன் வைப்பார்கள். பின்பு காபி, டிபன் பண்ணிக் கொடுப்பார்கள். பெண்ணுக்குப் பூ வைத்துப் பின்னுவார்கள். நல்ல சேலைகள் உடுத்துவார்கள். பிறகு நலங்கிடுவதற்காக பெண்ணையும் மாப்பிள்ளையையும் உட்கார வைத்து தேங்காவைப் பந்தாகக வைத்து, விளையாடச் சொல்லுவார்கள். சந்தனம் குங்குமம் இட்டு இருவரும் நலங்கிடுவார்கள். அப்பளத்தைச் சுற்றி போட்டு நொறுக்கச் சொல்லுவார்கள். பிறகு பெண்டுகள் எல்லோரும் கும்மி அடிப்பார்கள். இராத்திரி மோட்டாரில் பெண்ணையும் மாப்பிள்ளையையும் வைத்து ஊர்கோலம் போவார்கள். பிறகு எல்லோரும் சாப்பிட்டுவிட்டுத் தூங்கிவிடுவார்கள். (லலிதா, 10.)

G. வேறு ஊருக்குப் போகிற காலத்தில் நீ அங்கு கண்டவற்றையெல்லாம் சொல்லு.

## திருப்போரூர்

அங்கு முருகர் கோயில் இருக்கிறது. அங்கு ஜனங்கள் போகிறார்கள். அங்கே பல ஜனங்கள் மொட்டை அடித்துக் கொள்ளுகிறார்கள். அங்கு மயில் பார்த்தேன். சுவாமிக்கு தேங்காய், பழங்கள், மா, நெய் படைத்து தீபாராதனை செய்கிறார்கள். கிருத்திகையன்று பல பேர் குளத்தைச் சுற்றி வெல்லம் போடுகிறார்கள். அங்கே கடைத் தெருவில் அவுல், பட்டாணி, பொரி, பனைவெட்டு முதலியவை இருக்கின்றன (M. சம்பந்தன்)

## பத்திரிகைகளிலிருந்து நீ கேள்விப்பட்ட சமாசாரங்கள் என்ன ?

H. சேலத்தில் கஞ்சா, அபின், கள்ளுக்கடை, சாராயக்கடை நின்றுவிட்டதாம். பிறகு ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் போய் இன்னும் யாராவது திருட்டுத்தனமாக வைத்திருக்கிறார்களா என்று போய்ப் பார்த்தார். அங்கே யாவரும் வைக்கவில்லையாம். இப்போது டீ அதிகமாகச் செலவாகிறது. ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் 'ஏழைகள் காசுகளெல்லாம் வீணாகப் போகின்றன அதுவுமில்லாமல் அந்தக் கள் குடித்து



விட்டு வீட்டிலிருக்கும் தன்னுடைய பெண்சாதியை உதைக்கிறானாம். ஆகவே அதை நிறுத்துங்கள் என்று சொன்னோம். (கங்காதரன், வயது 11)

## மாமாவுக்குக் கடிதம்.

கடிதத்தில் எழுத வேண்டிய சமாசாரங்களில் ஞாபகம் வைக்க வேண்டிய சில குறிப்புகள்.

வீட்டு சமாசாரம்—தீபாவளி—பள்ளிக்கூட சமாசாரம்-பொருள் காட்சி—காலைக் கூட்டம்—மாலை விளையாட்டு.

எனது அன்புள்ள மாமாவுக்கு சுப்பிரமணியன் எழுதிக் கொள்ளுவதாவது,

நான்கு நாட்களுக்கு முன் இங்கு நல்ல மழை பெய்தது. அதில் எங்கள் வீட்டு மாடியில் தண்ணீர் ஒழுகியது. அந்த மழையில் என் தம்பி தண்ணீரில் அளைந்ததினால் ஜலதோஷம் பிடித்துக்கொண்டது.

தீபாவளி எங்கள் வீட்டில் விசேஷமாய் நடந்தது. நான் யானைப் படாசைக் கையில் வைத்துக்கொண்டு சுட்டேன்.

அதினின்று பொறி வந்தது என் கையில் விழுந்தது.

விழுந்த இடத்தில் எனக்குக் காயம்பட்டது.

எங்கள் பள்ளிக்கூடத்தில் தினந்தோறும் இரவில் ஏழைகளுக்கு படிப்பு சொல்லிக் கொடுக்கிறார்கள். எங்கள் பள்ளிக்கூடத்தில் வருஷந்தோரும் பள்ளிக்கூடத்திலுள்ள பையன்களுக்கு ஒரு டாக்டர் வந்து ஊசி குத்துகிறார்.

எங்கள் பள்ளிக்கூடத்தில் வருஷந்தோறும் பொருள் காட்சி வைப்பார்கள். இந்த வருஷம் சீமையிலிருந்து 3 பேர் வந்து அந்தப் பொருள் காட்சியைப் பார்த்துவிட்டுப் போனார்கள். அப்போது எங்கள் வகுப்பில் சில பையன்கள் இந்தப் பொருள் காட்சிக்காக சிரமம் எடுத்துக்கொண்டார்கள்.

தினந்தோறும் காலையில் எங்கள் பள்ளிக்கூடத்தில் எல்லாப் பையன்களையும் வரிசையாக நிற்க வைத்து, உபாத்தியாயர்பிள்ளைகளுக்கு சில புத்திமதிகளை எடுத்து உரைப்பார்.

எங்கள் பள்ளிக்கூடத்தில் தினந்தோறும் Y. M. C. A. யிலிருந்து சில உபாத்தியாயர்களை வரவழைத்து எங்களுக்கு விளையாட்டு சொல்லிக் கொடுக்கச் சொல்லுகிறார்கள். அவர்கள் மிகவும் நேர்த்தியாகச் சொல்லிக் கொடுகிறார்கள்.

மகா-ா-ா-ஸ்ரீ
கோபாலசாமி அய்யர்
வக்கீல்
பழனி.

இப்படிக்கு,
உங்கள் பிரியமுள்ள
சுப்பிரமணியன்.
(வயது 10)

J. நீ சொல்லி சொல்லி சந்தோஷப்படுகிறதும் உனக்கு நன்றாய் ஞாபகத்திலுள்ளதுமான ஒரு கதையை எழுது. (ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதையை எழுதினார்கள்.)

குறிப்புகள் மேலே சொல்லப்பட்ட விஷயங்கள் பத்தும் சொந்த சக்தியை வருவிக்கக்கூடிய அப்பியாசங்களே என்று தெரிய வரலாயின. ஆயினும் அவர் எழுதும் முறையலிருந்து சிலசில விஷயங்கள் தோன்றலாயின. மேலே எழுதியுள்ள விஷயங்கள் பிள்ளைகளுடையதே யாகும், எழுத்துப் பிழை உச்சரிப்புப் பிழைகள் மாத்திரம் நீக்கப்பட்டிருக்கின்றன. சிலர் நல்ல தேர்ச்சி யுள்ளவர்களாகவும் மற்றும் சிலர் சிலர் தேர்ச்சி போதாதவர்களாகவும் காணப்படுகிறார்கள். பொதுவாகச் சொல்லுமிடத்து இங்குள்ள சுய அப்பியாசங்களிலிருந்து நாம் இவற்றில் அதிகத் தேர்ச்சியடையச் செய்ய மற்றும் சில விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவ்விஷயங்கள் குழந்தைகள் மனதிற்குப் படும்படிச் சரியான மார்க்கத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்றும் தெரியவரும். இவற்றை அடுத்த இதழில் விரிவாகச் சொல்லுவோம்.

(All rights reserved)

# வார்தா கல்வித் திட்டம்

## I. பொது விமர்சனம்

### முன்னுரை

சென்ற அக்டோபர் மாதக் கடைசியில் மார்வாரி வித்யா மண்டலத்தின் ஜூபிலி விழாவின் போது வார்தாவில் மகாத்மா காந்தியின் தலைமையில் ஒரு கல்வி மகாநாடு கூடிற்று. அம்மகாநாட்டிற்கு தேசீயக் கல்வித் துறையிலும், தொழிற் கல்வித் துறையிலும் வெகுகாலம் உழைத்து அனுபவம் பெற்ற பல பெரியோர்களும், மாகாண கல்வி இலாகா மந்திரிமார்கள் பலரும், கல்வி விஷயங்களில் சிரத்தையுள்ள இன்னும் பல்லோரும் விஜயம் செய்திருந்தினர். மகாநாட்டில் விவாதிக்கப் பட்டது "ஆரம்பக் கல்வி" என்ற விஷயம் தான். அதுவும் மகாத்மா காந்தியவர்கள் வகுத்த ஆரம்பக் கல்வி திட்டம் தான்.

### காந்திஜியின் கல்வித் திட்டம்.

இலவச கட்டாயக் கல்வியை நாட்டிலுள்ள எல்லாச் சிறுவர்களுக்கும் கொடுப்பதற்கு வேண்டிய திட்டங்களை வகுக்கவும், அந்த திட்டத்தை நாட்டின் நிலைமைக்கேற்பவும், ஜனங்களின் வாழ்க்கைக்குத் தகுந்தவாறு அமைக்கவும் வேண்டிய வழிகளைப் பற்றி யோசிப்பதற்காகவும் இந்தியர்கள் மகாநாடு கூட்டியது இதுதான் முதல் தடவை என்று சொல்லலாம். தன் அஹிம்சை இயக்கத்தால்) இந்தியாவுக்கு புத்துயிர் அளித்த மகாத்மா காந்தியவர்கள் நம் நாட்டிற்கு நலம் விளைவிக்கக் வேண்டி ஒரு ஆரம்பக் கல்வி திட்டத்தையும் வகுத்ததற்கு இந்தியர்கள் அனைவரும் என்றும் அவருக்கு கடமைப் பட்டவர்களாவார்கள்.

### தீர்மானங்கள்

இரண்டு நாட்கள் நன்றாக விவாதித்தபின், கீழ் கண்ட தீர்மானங்களை மகாநாடு நிறைவேற்றியது.

(1) இலவச கட்டாயக் கல்வி தேசமுழுவதும் எல்லாச் சிறுவர்களுக்கும் எழு வருஷங்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

(2) தாய் பாஷை மூலமாகத்தான் அக்கல்வி கற்பிக்க வேண்டும்.

(3) மகாத்மா காந்தியவர்கள் வகுத்த திட்டப்படி கல்வி யாதாவதொரு கைத்தொழிலை யொட்டிச் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். சிறுவர்களுக்கு மற்ற எல்லா விஷயங்களையும் அக்கைத்தொழிலை யொட்டி போதனை செய்யவேண்டும். அப்படி தேர்ந்தெடுக்கப்படும் கைத்தொழில் அந்தந்த கிராமங்களுக்கு ஏற்றவாறு இருக்கவேண்டும்.

(4) இவ்விதமான கல்விமுறையில் ஆசிரியர்களை வைத்துக்கொண்டு ஆதரிப்பதற்கு வேண்டிய பொருள் சிறுவர்கள் பள்ளிக்கூடத்தில் கற்றுக்

கொள்ளும் கைத்தொழில் மூலமாகவே கிடைக்குமென்று எதிர் பார்க்கப்படுகின்றது.

இத்தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டுள்ள ஆரம்பக்கல்வி இந்திய நாட்டிற்கு நன்மையே பயக்கும் என்பது பல அறிஞர்களுடைய அபிப்பிராயம். ஆரம்பக்கல்வி இலவசமாக அளிக்கப்படவேண்டு மென்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் விஷயம்; இந்நாட்டுச் சிறுவர்களுக்கு சட்ட மூலமாகக் கட்டாயப்படுத்தி அக்கல்வியை வழங்கவேண்டு மென்பதும் ஒத்துக்கொள்ளப்படுகின்றது. இதுகாறும் ஐந்து வருஷங்களுக்கே ஆரம்பக்கல்வி யளிக்கப்பட வேண்டியதென்பது அரசாங்கத்தின் நோக்கமாயிருந்துவந்தது. இப்போது மகாத்மா காந்திஜியின் திட்டம் அக்கல்வி ஏழு வருஷங்களுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறது. அக்கல்வியைப் பெறும் சிறுவர்கள் தற்போது ‘மெட்ரிகுலேஷன்’ என்று சொல்லப்படுகிற வகுப்பில் வாசிக்கும் மாணாக்கர்கள் பெறும் அறிவின் ஆற்றலும் விஷய ஞானமும் தம் தாய்பாஷை மூலமாகப்பெற வேண்டுமென்பது மகாத்மா காந்தியின் யோசனை. ஆகையால், அவருடைய திட்டத்தின்படி “ஸெகண்டரி கல்வி” என்பது இவ்வேழு வருஷக்கல்வியின் பின்பு தான் வரவேண்டியிருக்கும். மேலும் இப்புதிய திட்டத்தில், கல்வி ஒரு தொழிலின் மூலமாக போதிக்கப்படும். இம்முறை இந்நாட்டில் நவீனமாகத் தோன்றிய போதிலும், மேல் நாடுகளில் கையாளப்பட்டு வருகின்றது; நம் நாட்டு அறிஞர்களும் அம்முறையைப்பற்றி புகழ்ந்து தான் பேசுகின்றனர். ஆனால் கடைசியில் வருகின்ற நான்காவது தீர்மானம் உபாத்தியாயர்களுக்கிடையில் பெரும் மனக்கிளர்ச்சி உண்டாக்குமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அத்தீர்மானத்தின்படி “பள்ளிக்கூடத்தில் சிறுவர்கள் கற்றுக் கொள்ளும் தொழிலிலிருந்து வரும் ஊதியத்தைக்கொண்டு உபாத்தியாயர்களுடைய சம்பளங்களை கொடுப்பது சாத்தியமாகும்” என்று மகாநாடு நினைப்பது எல்லோருடைய சம்மதத்தையும் சுலபமாகப் பெறாது. காந்திஜியின் திட்டப்படி சிறுவர்கள் தம் 7-வது வயது முதல் 14-வது வயது வரையில் கல்வி கற்பார்கள். ஐந்தாம் பிராயத்திலேயே பள்ளிக்கூடத்துக்கு குழந்தைகளை அனுப்பும் வழக்கமுள்ள இந்நாட்டில் இரண்டு வருஷம் குழந்தைகளை என்னச் செய்யச் சொல்வது என்ற விஷயத்தையும் கவனிக்கவேண்டும்.

## புதிய கல்வித் திட்டம்

மகாநாடு நிறைவேற்றிய தீர்மானங்களை எடுத்துக்கூறியபின், இப்புதிய ஆரம்பக்கல்வி திட்டத்தைப்பற்றி சிறிது ஆராய்வோம்.

புதிய கல்வி திட்டம் அவசியமா ? என்பது முதல் முதல் எழும் கேள்வி. இப்போது இந்நாட்டில் இருந்து வரும் கல்வி திட்டத்தில் குறைகள் ஏதேனும் உண்டா ? கல்வி முறையைச் சீர்திருத்துவதிலும் கல்வியை பரவச் செய்வதிலும் ஊக்கங் கொண்டுள்ள அறிஞர்கள் தற்காலத்திய

147645
சென்னை-600 008.



கல்வியைப்பற்றிச் சொல்லாத குறைகளில்லை. இப்போது வழக்கத்தில் இருந்துவரும் கல்வித்திட்டம் முதன்முதல் ஏற்பட்டபோது இந்தியா இருந்த நிலைமை வேறு; அரசாங்கத்திற்கு வேண்டிய குமாஸ்தாக்களை பயிற்சி செய்வதற்குதான் அது ஆரம்பிக்கப்பட்டது. அன்னிய பாஷையாகிய ஆங்கிலேயத்தின் மூலம் கல்வி கொடுக்கப்பட்டதனால் சொல்ல முடியாத பாதகங்கள் ஏற்படலாயின. கற்கும் கல்விக்கும் நம்நாட்டு நாகரிகத்திற்கும் சம்பந்தமில்லாமல் போய்விட்டது. ஆங்கிலம் கற்றவர்கள் எல்லோரும் ஒரு தனி ஜாதியராக விளங்கலாயினர். தாம் கற்ற அறிவையும் விஷய ஞானத்தையும் பாமரராகிய தம் சகோதரர்களுக்குத் தேச பாஷையில் எடுத்துச் சொல்லும் ஆற்றல் அவர்கள் பெறவில்லை. புதிய புதிய விஷயங்களும், கருத்துக்களும் தேசபாஷைகளில் வராமல் நின்றன. தேசபாஷைகளைப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் கற்றோர் பயன் படுத்தாமையினால், அவைகள் வளர்ச்சியடையவுமில்லை; தம் உயர்ந்த நிலைமையையிழந்து பாமரர்களும் ஏழைகளும் பேசும் பாஷையாகவும் ஆய்விட்டது. மேலும் இந்தக் கல்வி திட்டம் தொழில் முறைகளைச் சற்றேனும் அனுசரியாமல் ‘ஏட்டுப்படிப்பை’யே ஆதரித்து வந்ததனால், கற்றோர் எனப்படுவரெல்லாம் குமாஸ்தா வேலைகளையும் சுகஜீவனத்தையும் நாடி வந்தார்களேயொழிய, கைத்தொழில் முறைகளை சீர்ப்படுத்த எத்தனித்தனரல்லர். கைத்தொழில்களைப் பின்பற்றி வாழ்ந்து வருபவர்களெல்லாம் கல்வியின்றி நிற்கும் பாமரர்களாதலின் கைத்தொழில் முறைகளும் சீரடைந்தபாடில்லை. மற்ற நாடுகளில், உதாரணமாக மேல்நாடுகளில், உயர்ந்த கல்வி கற்றவர்களில் பலபேர் கைத்தொழில்களில் அமர்ந்து உழைப்பதனால் தான் அங்கே தொழின் முறைகள் நாளுக்கு நாள் செம்மைப்பட்டு வருகின்றன. அந்நாடுகளும் கைத்தொழில் அபிவிருத்தியின் காரணமாக மேம்பாடு அடைந்திருக்கின்றன.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலாகிலும், மற்றும் உயர்தர கலாசாலைகளிலாகிலும் சொல்லிக் கொடுக்கும் கல்வி நாட்டின் நிலைமைக்கும் தொழிலுக்கும் யாதொரு சம்பந்தமும் இன்றி இருப்பதனால், அவ்வித கல்வியைப் பெறும் ஜனங்களினால், நாட்டுக்கு எவ்வித பயனும் விளைவதில்லை. இக்கல்வியைக் கற்றோர் வேலை யகப்படாமல் வீணாய்க் காலங்கழிக்கின்றனரேயன்றி ஏதாவதொரு கைத் தொழிலில் இறங்கி வாழ்க்கை நடத்துவதற்கு விரும்புவதில்லை. ஆகையினால்தான் இப்போதிருக்கும் கல்வித் திட்டத்தை திருத்தியமைக்க வேண்டுமென்று மகாத்மா காந்தியவர்கள் ஆரம்பித்திருக்கின்றார்கள்.

## நம் நாட்டின் நிலைமை என்ன ?

பல லக்ஷ கிராமங்கள் இத்தேசத்தில் இருக்கின்றன. நூற்றுக்கு 89 பேர் கிராம வாசிகள், 11 பேர் தான் நகரங்களில் வசிக்கின்றனர். முக்கியமான தொழில் விவசாயம். நூற்றுக்கு சுமார் 73 பேர் விவசாயத்

தொழில் மூலமாய்த் தான் ஜீவித்து வருகின்றனர். கிராம வாசிகளான முப்பத்தொன்றேகால் கோடி ஜனங்களின் வறுமை நிலையை எடுத்துக் கூறுதல் சுலபமன்று. கிராமங்களில் வசிக்கும் இவ்வளவு ஜனங்களும் வருஷத்தில் சுமார் ஆறு மாதங்கள் தான் ஏதாவது வேலை செய்கின்றனர். மற்றக் காலங்களில் தொழில் எதுவுமின்றி சோம்பிக் காலங்கழிக்கின்றனர். இந்த கிராம வாசிகளின் நிலைமை சீர்பட வேண்டுமானால், இவர்களை வரும் ஏதாவது ஒரு தொழிலில் முனைந்து தம் ஓய்வு நேரங்களில் வேலை செய்து சிறிதாவது பணம் சம்பாதிக்கவேண்டும். அப்படி ஏதாவது தொழிலில் சம்பாத்தியம் செய்வதற்கு கிராம ஜனங்களுக்கு தம் தம் வீட்டிலேயே செய்யும் தொழில் தான் மிகவும் சௌகரியமானது. இன்னும் பல பெரிய கைத் தொழில்சாலைகள் இந்நாட்டில் ஏற்பட்டபோதிலும், இந்த கிராமங்களில் வசிக்கும் கோடிக்கணக்கான ஜனங்கள் கிராமங்களிலேதான் இருந்து விவசாயத் தொழிலில் அமர்ந்து காலங்கழிக்க வேண்டியிருக்கும். அவர்கள் தமது வருமானத்தைப் பெருக்க ஒரே ஒரு வழி தான் உண்டு. அதாவது, ஒவ்வொரு கிராமவாசியும் ஏதாவதொரு சிறு குடிசைத் தொழிலை தன் ஒழிவு நேரத்தில் செவ்வனே செய்யும் ஆற்றல் பெறுவது தான்.

ஆகையினால் தான் மாகாத்மா காந்தியவர்கள் தம் கல்வி திட்டத்தில் கைத்தொழிலை அடிப்படையாக்கி யிருக்கின்றார் போலும். மேலும் ஜனங்கள் கற்றுக் கொள்ளும் கல்வி அவர்களுடைய ஜீவாதாரமான சமூக வாழ்க்கைக்கும் தொழிலுக்கும் பிரயோஜனப்படவேண்டுமல்லவா? கல்வி கற்றதன் பயனாக ஜனங்கள் தமது சமூக வாழ்க்கையை விட்டு, பட்டணம் சேர்ந்து வேலையகப்படாமல் திண்டாடும்படி நேர்ந்தால், அந்தக் கல்வி கல்வியாகாது. கல்வி கற்றவர் தமது தொழில்களைச் செவ்வனே நவீன முறையில் செய்வதும், தாம் செய்யும் பண்டங்களை நவீன முறையில் விற்று உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெறுவதும் சாத்தியமாகும். ஆகையால் கோடிக்கணக்கான கிராமவாசிகள் காலத்தின் போக்குக்கேற்ப தமது அபிவிருத்தியை தேடிக்கொள்ளும் பொருட்டுத் தான் யாதாவதொரு தொழிலின் மூலமாய் அவர்களுக்கு கல்வி புகட்ட வேண்டுமென்று சொல்லப்படுகின்றது. ஒரு சிறுவன் ஏழு வருஷகாலம் அக்கல்வியைப் பெற்றானாயின், பிறகு படிப்பு முடிந்தவுடன் தான் ஒரு தொழிலில் அமர்ந்து இனிதுவாழலாம். அல்லது மேலே படிக்க வேண்டும் மென்றாலும் அப்படிச்செய்யலாம். ஆனால் இந்நாட்டில் ‘மேல் படிப்பு’ என்று சொல்லப்படுகிற செகண்டரி அல்லது கலாசாலை கல்வியை நாடிச் செல்லும் ஜனங்கள் வெகு சொல்பம். ஆகையால் ஆரம்பக் கல்வி பெறும் ஒவ்வொருவரும் ஒரு தொழில் செய்யப் பயிற்சி பெறுவது அவசியமாகின்றது.

## தொழிலின் மூலமாக கல்வி போதிப்பது சரியான போதனாமுறையாகுமா?

கல்வி மாணாக்கர்களுக்கு போதிக்கும் முறை அப்போதைக்கப்போது காலத்திற்கேற்ப மாறுதலடைந்து வந்துள்ளது. தற்காலத்தில் சிறுவர்கள் கல்விபயிலும் போது கைவேலை (Hand-Work) ஏதாவது செய்துக் கொண்டுதான் வருகிறார்கள். அத்தகைய வேலைகளைச் செய்வதனால் அவர்களின் கைகளும் கண்களும் மனமும் பயிற்சி யடைவதல்லாமல், பொதுவாக எல்லாவித ஆற்றல்களும் உண்டாகின்றன என்று நம்பப்படுகிறது. ஆகையினால்தான் மேல் நாடுகளிற் ‘ப்ரோஜக்ட்’ முறையென்றும்



‘காம்ப்லெக்ஸ்’ முறை யென்றும் பல முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. காந்திஜி வகுத்திருக்கும் திட்டத்திலும் ‘கைவேலை’ முக்கியமாய் இருக்கின்றது. ஆனால் இந்த வேலைக்கும் தற்போது நடந்துவரும் ‘கைவேலை’ப் பயிற்சிக்கும் அதிக வித்தியாச முண்டு. இப்புதிய திட்டத்தில் சிறுவர்களுக்கு அத்தியாவசியமாகத் தோன்றும் ஒருதொழில் மூலமாக கல்வி புகட்டப்படுவதன் நோக்கங்கள் அதி உயர்ந்தவை என்று சொல்லலாம். கைகளும் கண்களும், அறிவும் பயிற்சியடைவதோடு, விளையாட்டாகச் செய்யும் தொழில் சிறிது பயனளிப்பதாகவும் இருக்கும்; பின்னால் வாழ்க்கையில் பிரயோஜனமுள்ளதாகவு மிருக்கும்; கிராம வாசிகளின் ஏழ்மையைத் துடைக்கும் மருந்தாகவும் விளங்கும்; தொழிலுடன் சிறுவர்கள் கல்வியும் பெறுவார்களாதலின், கிராமத்து கைத்தொழில் நவீன முறைகளில் அபிவிருத்தியாகவும் காரணமாகும். காந்திஜி கைத்தொழிலின் மூல்மாக கல்வி போதிப்பது எவ்வாறு சாத்தியமாகும் என்பதைவார்தா மகாநாட்டில் ஒரு உதாரணத்தால் விளக்கினார். அவர் சொன்னதாவது:

* “உதாரணமாக, தக்ளி மூலம் நூல் நூற்பதை எடுத்துக்கொள்ளுவோம். தக்ளியில் நூற்கச்சொல்லித் தரும்போது, பருத்திகளில் எத்தனை வகைகள் உண்டு என்பதையும், அவற்றின் பலம், தன்மை, முதலியவற்றைப் பற்றியும் சொல்லித்தரலாம். தவிர, பருத்தி விளையும் பலவிதமான பூமிகளைப் பற்றிச் சொல்லலாம். நம் நாட்டின் நூல் நூற்றல் நெய்தல் சம்மந்தமான தொழில்கள் அனைத்தும் க்ஷீணித்துப் போனதன் காரணத்தை ஆராயலாம். அப்பொழுது தொழில் க்ஷீணிப்பதற்கு ஒரு காரணமான பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முறைகளையும் பயிலலாம். தவிர, தக்ளியின் மூலம் கணக்கு முதலிய வற்றையும் சொல்லித்தரலாம். இம்மாதரி தக்ளியின் மூலம் என் பேரப்பிள்ளை ஒருவனுக்குக் கல்வி கற்பித்துக் கொண்டிருக்கிறேன். அவனுக்குப் பாடம் படிக்கிறதாகவே தோன்றுகிறதில்லை, எப்பொழுதும் விளையாடிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் பாடிக்கொண்டும் சுலபமாகவே கற்கிறான்............தக்ளி சுற்ற சொல்லிக்கொடுப்பதில் ஆரம்பித்து, நெசவு, அச்சுப்போடுதல், சாயம் போடுதல் உட்பட அதைப்பற்றிய எல்லா விஷயங்களும் ஏழு வருஷங்களில் சொல்லித் தரமுடியும் என்பது என் அபிப்பிராயம். வேறு தொழில்களையும் எடுத்துக்கொள்ளலாம். ஆங்காங்கு கிராம வசதிகளுக்கேற்றபடி தச்சு, காகிதம் செய்தல், சர்க்கரைசெய்தல் முதலிய கைத்தொழில்களை எடுத்துக்கொண்டு அவற்றின் மூலம் கல்வி புகட்டலாம்”

## ஆரம்பக் கல்வியும், பணச்செலவும்

ஒரு தொழில் மூலமாக கல்வி புகட்டவேண்டுமென்பது யாவரும் எடுத்துக்கொள்ளக்கூடிய விஷயம். ஆனால் அத்தொழிலின் மூலம் பள்ளிக்கூடங்கள் ஊதியம் பெற்று உபாத்தியாயர்களுடைய சம்பளங்களை கொடுக்கவேண்டும் என்று சொல்வது விசித்திரமான கொள்கையெனப் பலரால் எண்ணப்படுகின்றது. உண்மையில் மகாத்மா காந்தியின் மனதில் ஊதியம் என்றால் வெறும் ‘பணம்’ மாத்திரம் என்று தோன்றியிருக்காது. அவருடைய திட்டத்தை மனப்பூர்வமாக நடத்திப் பார்த்தால் நாட்டில் உண்டாகும் பலவித நலன்களெல்லாம் கல்வித் திட்டத்தினால் தான் என்று விளங்கும். அத்துணை நலன்களை நாடு பெற எவ்வளவு பணச்செலவு செய்யவேண்டியிருக்கும். அவ்வித நலன்களையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு தான் அவர் சுருக்கமாகத் தன் திட்டத்தை வெளியிட்டிருக்கிறார். ராஜ்யத்தை நடத்தும் காங்கிரஸ் மந்திரிகள் இத்திட்டத்தை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வார் என்று நம்புகிறோம்.

பொதுவாக இப்புதிய திட்டத்தில் சில நவீன அம்சங்கள் இருக்கின்றன. இதுவரையில் உலகத்தில் எந்த நாட்டிலும் இம்மாதிரி திட்டம் ஏற்பட்டதில்லை. இந்தியாவின் நிலைமையும் விசித்திரமாயிருக்கிறது. அதன் நிலைமைக்கேற்ப இந்த திட்டம வகுக்கப்பட்டிருக்கிறது. முதலில் நம்நாட்டில் உள்ள 3½ கோடி சிறுவர்களுக்கு இலவசக் கல்வி கற்பிப்பதற்குப் போதுமான பணம் கிடையாது. சுமார் 90 லக்ஷம் பிள்ளைகளுக்கு ஆரம்பக்கல்வி கொடுப்பதற்கு 1931-32 ல் 8 கோடி ரூபாய் செலவாயிருக்கின்றது. நான்கு மடங்கு அதிகப் பிள்ளைகளுக்கு ஏழுவருஷம் ஆரம்பக் கல்வி கொடுப்பதற்கு குறைந்தது ஐம்பது கோடி ரூபாயாவது வேண்டியிருக்கும். இப்பெருந் தொகை கிடைப்பது துர்லபம். ஆனால் ஆரம்பக் கல்வி விஷயத்தில் இன்னும் தாமதம் செய்வது நியாயமல்ல. நிலைமைக்கேற்றவாறு திட்டம் ஏற்படுத்துவதுதான் சரியான வழி. ஆதலால் தான் காந்திஜியின் திட்டம் பணவிஷயத்தில் இவ்வளவு முன் யோசனையுடன் வகுக்கப்பட்டிருக்கின்றது. இரண்டாவதாக சிறுவர்கள் கைத்தொழில் கற்கும்போது சில சாமான்கள் சந்தோஷமாகச் செய்வார்கள் என்பது உண்மை. அந்த வேலைத்திறனை ஏழைகளாகிய இந்தியர்கள் ஏன் சிறிது பலனளிக்கும்படிச் செய்யக்கூடாது. ஏழு வருஷம் கல்வி கற்ற பின் ஒரு சிறுவன் ஏதாவதொரு தொழிலில் இறங்கி காலங் கழிக்கலாம் என்று சொல்லும்போது, அச்சிறுவன் தான் கல்வி கற்கும் காலத்தில் குறைந்த பக்ஷம் மூன்று நான்கு வருஷங்களாவது நாள் ஒன்றுக்கு அரையணா முதல் இரண்டணா பெறக்கூடிய சாமான்களை செய்ய முடியாதா? இந்த சாமான்களை கிராம வாசிகளின் ஆதரவினாலும் அரசாங்கத்தின் ஏற்பாடுகளினாலும் விற்றால், தொழிற் கல்வி சிறிது ஊதியத்தையும் உண்டாக்கும் அல்லவா!

இவைகளிலிருந்து இப்புதிய திட்டம் ஏழை நாடாகிய இந்தியாவின் ஏழ்மையை நீக்குவதற்கு ஏற்பட்ட திட்டம் என்று தெரிகின்றது. ஆனாலும், அரசாங்கம் ஆரம்பக்கல்விக்கு இப்போது அதிக பணம் செலவழிப்பதில்லை. இனிமேல் ஆரம்பக் கல்விக்கென அதிக பணம் அரசாங்கத்தார் செலவழிப்பார் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

### பின்னுரை

முடிவில் இப்புதிய திட்டத்தைப்பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. மகாத்மா முதல் முதல் அஹிம்சா தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட கிளர்ச்சியின் மூலமாக இந்தநாட்டு சுதந்திரப்போர் தொடங்கிய காலத்தில் பலர் பலவாறு அவருடைய திட்டத்தைக் குறைகூறினர். இப்போது உலகெங்கும் யுத்த தாளவாடங்களின் சத்தம் தான் கேட்கிறது. ராணுவ ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருக்கின்றன. நாகரிகம் மிகுந்ததென கருதப்படும் மேல் நாடுகளில் யுத்த பயம் நிலவி வருகின்றது. இப்போது தான் இந்தியாவில் உண்டான அஹிம்சையிக்கத்தின் மேன்மையைப் பல நாட்டுப்பெரியோரும் அறிந்து வருகின்றனர். அஹிம்சை தர்மத்தை அஸ்திவாரமாகக் கொண்டதே இந்த வார்தா கல்வித் திட்டமும். அதேமாதிரி, இப்புதிய கல்வித் திட்டம் உலகுக்கே புதியதாகவும் விசித்திரமாகவும் காணப்பட்ட போதிலும், முடிவில் இந்திய நாட்டுக்கும், மற்ற நாடுகளுக்கும் ஒரு முக்கியமான வழிகாட்டியாக விளங்கி உலகததிலே எங்கும் அஹிம்சை தர்மம் ஓங்கி வளரக்கூடிய சக்தியுண்டாக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

# தமிழ்ச் செய்யுளும் கற்பிக்கும் முறையும்

---

வித்வான் சாரங்கபாணி அய்யங்கார், மயிலாப்பூர்

தமிழர் யாவருக்கும் தாய் மொழி தமிழ். இனிமை வாய்ந்த நம் மொழியில் பற்று இருத்தல் இன்றியமையாதது என்று கூறின் அது மிகையாகாது. தாய் மொழியை புறக்கணிப்பவர்கள் 'தாய்க் கொலை சால் புடைத்து' என்று கூறவும் துணிவார்கள். தாயிடத்தில் அன்பில்லாத மக்களும் உண்டோ? ஒரு மொழியின் மேன்மையை அளக்கும் அளவுகோல் மொழியில் உள்ள இலக்கண இலக்கிய நூல்களே. இவை வரம்பில் ஆகப் பல்கியிருக்குமதே, நம் மொழியின் பெருமைக்குப் போதிய சான்றாகும்.

தாய் மொழியின் பெருமை குன்றக் காரணம் என்ன:—நாட்டு மக்களின் அறிவை வளர்க்குமிடம் கலைக் கூடமே. அவ்விடங்களில் தாய் மொழிக்கு முதலிடம் வழங்கவேண்டும் என்பது எந்நாட்டினரும் எம் மொழியினரும் ஒப்புக்கொண்டதே. இந்தியாவில் அதற்கு மாறுபாடாக இருப்பதற்குக் காரணம் இந்நாட்டு அரசியல் மொழி வேறு மக்கள் மொழி வேறாக இருப்பதுவேயாம். அடிமை நாட்டில், அந்நாட்டின் மொழியும் அடிமைப்பட்டே இருக்கும். இந்தியாவை மொழி வாரியாகப் பல மாகாணங்களாகப் பிரித்து அவ்வம்மாகாணத்தில் அவ்வத் தாய்மொழி அரசியல் மொழியாகவும, நாடு முழுவதற்கும் பொதுவாக ஒரு மொழியும் இருப்பின், சிறிது உயர்வும் நன்மையும் உண்டாகும் என்பது திண்ணம். அக்காலம் அணித்து என்றே எண்ணுகின்றேன்.

இனி, கல்வியைக் கல்விக் கென்றே, அறிவு வளர்ச்சிக்காக கற்கும் காலம் மலை ஏறிப் போய்விட்டது. படிப்பு, பதவி பெற்று வாழ்க்கை நடத்துவதற்கே (உத்தியோகம்பெறுவதற்காகவே) என்ற மணப்பான்மை வேரூன்றிவிட்டது. பண்டைக்காலத்தில் ஆண் பெண், வாணிகன், வேளாளன், அரசன், அந்தணர் ஆகிய எப்பாலாரும், எக்குலத்தவரும், எத்தொழிலவரும் புலவராக விளங்கினர் என்பது அவ்வவர் பெயரை ஆராயின் நன்கு விளங்கும். முதலில் இளமையில் பொதுக் கல்வி யாவருக்கும் வேண்டும். பின்னர் அவ்வவர் ஊக்கத்திற்கும் மனப்போக்கிற்கும் தக்கவாறு வாழ்க்கைக்கு வேண்டிய தொழிற் கல்வி பெறலாம். வேறு மொழி அரசியல் மொழியாக இருக்கும் பொழுது, இக்காலத்தும் அம்மொழியின் மூலம் பிறபாடம் யாவும் நடைபெறும் போழ்து, பெற்றோரும் மற்றோரும் தமிழ் மொழிக்குப் பெருமை அளிக்க வேண்டும் என்று எண்ணுவது பாங்ஙனம் பொருந்தும்? நம் மொழி வாழ்க்கைக்கு ஒரு சிறிதும் பயன்

படாது என்ற எண்ணமே, அது உயர்விடம் பெற இயலாது போகின்றது. கலாசாலையில் கற்பிக்க வேண்டிய நேரமும் மிகக் குறைவு. மொழிப் பயிற்சியில்லையேல் பிற பாடங்களில் எவ்வாறு பிழையறப் பேசவோ எழுதவோ இயலும்.

## இளம் பருவத்தில் கற்க வேண்டியவை :—

எண், எழுத்து இரண்டுமே சிறப்பாகக் கற்பிக்கப்பட வேண்டும். (எண்—கணக்கு; எழுத்து—இலக்கண இலக்கியம்) இவ்விரண்டுமே கண் எனப் போற்றப்படல் வேண்டும். ஏழு எட்டு ஆண்டுகள் தாய் மொழியை ஐயம் திரிபு அற நன்கு கற்றவன் பிற நூல் அறிவுகளை (பூகோளம், சரித்திரம், அறிவு நூல்) மிக எளிதில் கற்றுக்கொள்ளக்கூடும். எழுத்துக் கூட்டிப் படிக்கத் திண்டாடும் மாணவர்கள் பலர் மேல் வகுப்புக்களில் இருப்பது கண் கூடு. அஸ்திவாரம் இல்லாமல் எழு நிலை மாடம் கட்டப் புகுவது பேதமை யன்றோ? மேலும் கீழ் வகுப்புக்களில் தாய்மொழியில் கற்பிக்க படுவனவே மேல் வகுப்புக்களில ஆங்கிலத்தில் கற்பிக்கப்படுகின்றன.

## சில மேற்கோள்கைகளைக் காட்கின்றேன் :—

"விதைகள் பரவும் விதமென்ன,"?—இவ்வினாவுக்கு ஐந்தாம் வகுப்பு மாணவன் விடையிறுக்கத் தட்டில்லை. இஃதே ஆறாவது பாரம் மாணவர்களுக்குச் சென்ற ஆண்டு இறுதிப் பரிக்ஷையில் வினாவாகக் காணப்பட்டது.

'வகுக்கும் எண் ஐம்பத்தாறு,' ஈவு வகுக்கும் எண்ணைப்போல் நான்கு மடங்கு; மீதி இருபத்தேழு. வகுக்கப்படும் எண் என்ன'?—ஐந்தாம் வகுப்பு மாணவன் செய்யக் கூடிய இக்கணக்கு ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டு ஒன்பதாவது மாணவனுக்கு வினாவாக விளங்குகிறது? இக்கூற்றுக்களால் அவைகளில் எனக்கு வெறுப்புண்டு என்று சிலர் ஐயுறலாம். சிறிதுமில்லை. இவற்றால் காலமும் பொருளும் வீணாக செலவிடப் படவில்லையா? ஆதலின் யாவும் தமிழ்மொழியின் மூலம் கற்பிக்கப்பட வேண்டும்; காலத்திட்டத்தில் தமிழுக்குத் தலைமை இடம் அளிக்க வேண்டும்.

## செய்யுள் என்றால் என்ன ?

இதற்கு விடையளிப்பது எளிதன்று. செய்யுளின் இலக்கணத்தை விளக்கமாக ஒரு புலவரும் வரையறுத்துக் காட்டிப்போந்தாரில்லை. "பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல்போல் பலசொல்லால் பொருட்கு இடனாக உணர்வினின் வல்லோர் அணிபெறச்செய்வன செய்யுள்" என்பது நன்னூல் சொற்செறிவு, பொருட்செறிவு, எழுத்து அடிவரையறை, ஓசையின்பம் முதலியன பொருந்தி நிருத்தலோடு, உட்பொருள் (குறிப்புப் பொருள், த்வனி) கொண்டு விளங்குவதே தலைச்செய்யுளாகும். சிறந்த



செய்யுள் நெஞ்சை யள்ளும்; உள்ளத்தைக் கவரும். செய்யுளை உணரலாம்; உணர்த்த இயலாது. செய்யுள் சொல் ஓவியம். உரை நடையிலுள்ள சொல்லே செய்யுளில் காணப்படினும் இரண்டினுக்கும் உள்ள வேற்றுமை மலைக்கும் மடுவுக்குமுள்ள வேற்றுமையே யாகும். நாட்டின் வளர்ச்சியையும் நாகரிகத்தையும் கண்ணாடிபோல் காட்டுவது கற்பனைக் களஞ்சியமான செய்யுளே. சிறந்த செய்யுள்களுக்கு மேற்கோள் காட்டின் இக்கட்டுரை. விரியும் என்று அஞ்சிவிடுக்கப்பட்டது. செய்யுள் கடவுள் வழிப்பாட்டுக்கு உற்ற ஆசிரியன்; அறிவு ஒழுக்க வளர்ச்சிக்குத் தாய்; ஊக்கமற்ற உள்ளத்துக்கு உற்றதோழன். செய்யுளே வாழ்வு. வாழ்வே செய்யுள், தன்மை நவிற்சியில் வல்ல சங்கப்புலவர் செய்யுளும், மதங்களை வளர்த்த ஆழ்வார் நாயன்மார பாடல்களும், உயர்வு நவிற்சியில் சிறந்த பிற்காலப் புலவர் பாக்களும், தமிழரிடை உரிமை உணர்ச்சியைத் தட்டியெழுப்பிய பாரதியார் பாடல்களும், படிக்கப்படிக்கத்தெவிட்டா.

முற்காலத்தில் உரை நடையைக் காண்பதே அரிது. இலக்கணம் இலக்கியம் யாவும் பாவால் ஆக்கப்பட்டனவே.

**சிறுவர்க்குத் தற்காலம் போதிக்கப்படும் செய்யுட் பாடம் ஏற்றதா.** முதல் நாலைந்து வகுப்புகளுக்குச் செய்யுட்பாடம் முழுவதும் நீதி நூல்களை ஆண்டுக்கு பத்து பதினைந்து பாடங்களுக்கு மேல் கற்பிக்கப் படுவதில்லை. ஓரடி ஈரடிச்செய்யுள்களைப் பிள்ளைகளுக்குப் பதவுரை முதலிய கூறி அவர்களைத் துன்பத்திலாழ்த்தி வருத்துவதைக்காண மனம் வருந்துகிறது. அவர்களுக்கு அந்நீதி நூற்கருத்து விளங்குமா? உயர்ந்த கருத்துக்கள் அடங்கியவை என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவையாவும் பொன்போலப் போற்றத்தக்கனவே. ஆயினும் மாணவர் நிலையில் அவை எவ்வாறு பயன் அளிக்கும். 'அஃகம் சுருக்கேல்' "நைப்போல் வளை" "மண் பறித்து உண்ணேல்," "இல்லறமல்லது நல்லறமன்று," "சந்திக் கழுகு வந்தி செய்யாமை," "மைவ்விழியார் தம்மனை யகன்றொழுகு," முதலிய பாடல்கள் சிறுவர்களுக்கு ஏற்றனவா?

"இவற்றை முழுவதும் பாடமாக வைப்பதில்லையே; சில எளிய செய்யுள்களே பாடமாக வைக்கப்படுகின்றன" என்று சிலர் கூறலாம். எவ்வாறாயினும், பதப்பொருளும், கருத்தும் ஏற்றுக்கொள்ளும் காலம் அது அன்று. இளம்பருவத்தில் எவ்வளவுக் கெவ்வளவு மனப்பாடம் செய்விக்க முடியுமோ அவ்வளவுக் கவ்வளவு செய்தால் பிற்காலத்தில் நன்மை பயக்கும்; பசு மரத்தாணிபோல் பதியும். அவைகளின் பொருள் பின்பு விளங்கும். ஐந்தாண்டு முதல் பதினான்காண்டளவும் மனப்பாடம் பண்ணவேண்டிய காலம்; வேதாப்யாஸகாலம், சந்தை சொல்லி உருப்போடவேண்டிய காலம். இக்காலத்தை வீணே கழிக்கலாகாது. முற்காலத்தில் பால்யப் பருவத்தில் தமிழர் நிகண்டு கற்று, இலக்கிய இலக்கணங்களை மனப்பாடம் பண்ணி வயது முதிர்ந்த பிறகு பொருளைக்

கேட்டுத் தெளிவர். இக்கொள்கையை சிலர் இழிவுபடுத்தலாம். கொள்கை மாறுபாடு உலகில் இருப்பது புதிதன்று.

### செய்யுட் பாடம் எவ்வாறு இருத்தல் வேண்டும்?

கதையை ஒட்டி, எளிய நடையில் உள்ள பாடல், நாட்டுப்புறங்களில் வழங்கும் பாடல், விடு கதை, பொருட் செறிவில்லாத வேடிக்கைப் பாடல்கள் (Non sensical Rhmyes) குழந்தைத் தாலாட்டு (Nursery Rhymes) பார்தியார் பாபா பாட்டு, முரசு, சதகம், மாலை இவைபோன்ற மக்கள் மனத்தை இழுக்கும் செய்யுட்கள் சாலச்சிறந்தவை. இம்மாதிரிப் பாடல்கள் தமிழில் எண்ணிறந்தன இயற்றப்படவேண்டும்.

### கற்பிக்கும் முறை :

தற்பொழுது இருக்கும் செய்யுட் பாடத்தைக்கற்பிக்கும் முறையை ஆராய்வோர் கூடியவரை நீதிச் செய்யுட்களைத் தழுவிய கதையைக் கூறி கதையைச் சொல்லும்போதே செய்யுளில் வந்து அரும்பதங்களை ஊடே ஊடே கலந்து விடுதல் நலம். பிறகு முன்னரே எழுதி வைத்த பாடலைப் படிக்கச் செய்து, பொருளைக் கற்பிக்கலாம். கற்பிக்கும் முறை இதுவே என்று விதித்தல் அரிது.

பாடல், சந்தர்ப்பம், ஆசிரியர் அதை இயற்றியதன் நோக்கம், வகுப்பு இவைகளுக்குத் தக்கவாறு முறையைக் கையாளல் வேண்டும்.

மேல் வகுப்புக்களில் இசையோடு படிக்கச் செய்வது இனிமை பயக்கும். செய்யுளில் வரும் கருத்து பழக்கப்பட்டதாக இருப்பின் மாணவர்களோடு உரையாடி, பின்னர் கற்பித்தல் நலம். அரும்பதங்களையும் தொடர்களையும் வாக்கியத்தில் அமைக்கச் செய்யவேண்டும். மௌனமாகப் படிக்கச் செய்தால் மிகப் பயனளிக்கும். செய்யுட்களில் காணப்படும் சரித்திரங்களையும் விவரிக்கவேண்டும். சிறிது இலக்கண அறிவு உள்ள இம்மேல் வகுப்புக்களில் இலக்கணப் பயிற்சியும் அளிக்கலாம்.

செய்யுளைப் போதிக்கும்போது, இலக்கணத்தைப் புகுத்தலாகாது என்பது மொழி வல்லோர் சிலர் கொள்கை. இலக்கண விசேடங்களைக் காட்டிக் கற்பித்தால் எங்கு மாணவர்க்கு எளிதாக விளங்குமோ அங்கு அவ்வாறு செய்தல் நலம்.

உயிருள்ள செய்யுளை உயிரற்றதாகச் செய்யாமல், அதைக் கற்க வேண்டும் என்னும் அவாவை மாணவர் உள்ளத்தில் எழுப்பி, ஊக்கமளித்து, உள்ளம் உரைசெயல், மூன்றிலும் உயர்ந்தவனுக்குதல் ஆசிரியர் கடமை.

## குழந்தைகளின் கைவேலை

### சாதாரண பனை ஓலை விசிறி




முன் தடவை செய்த விசிறிபோல் அல்லாமல் இந்தத் தடவை வேறு ஒருவித விசிறி செய்யக் கற்றுக் கொள்வோம். இதற்குத் தனித் தனியாக 12 துண்டுகளும், (படம் A, B) இரட்டிப்பான 4 துண்டுகளும் (படம் C D) தேவை. பின்னுற் சொன்னப்பட்டவை விசிறியைச் சேர்க்கக்கூட உபயோகப்படும்.

9 அங்குல நீளம் உள்ள தனித் துண்டுகள் 5 எடுத்துக்கொள். இரண்டு துண்டுகளில் அங்குல அங்குலத்திற்கு ஒரு அடையாளம் செய்து கொள். படத்தில் காட்டியபடி S போன்ற 4 துவாரங்கள் செய்துகொள்.

அதாவது ஒரு அங்குலம் இடை வெளிவிட்டு அடுத்த அடுத்த இடத்தில் கீறிக்கொள். இரண்டு நுனிகளிலும் இம்மாதிரி கீறிக்கொள்ளவேண்டாம்.

பிறகு 7 அங்குல நீளமுள்ள 7 தனிப்பட்ட துண்டுகள் எடுத்துக் கொண்டு 3 துண்டுகளில் மாத்திரம் அங்குலம் அங்குலமாக அடையாளம் செய்துகொள். ஒரு அங்குலம் விட்டு அங்குலத்தில் படத்திற் காட்டியது போல கீறிக்கொள். (படம் A பார்)

பிறகு 9 அங்குலம் நீளமுள்ள 3 சாதாரணத் துண்டு எடுத்துக் கொள். இவைகளில் கீறல் வேண்டாம். (b, d, f, e) மறுபடி c,e போன்ற 2 துண்டுகள் எடுத்து கீறிக்கொள். இந்த இரண்டும் ஒவ்வொன்று 9 அங்குலம் உள்ளவை.

இவைகளை இரட்டிப்பான (4) ஓலையில் E படம் மாதிரி நெருக்கமாக வை. பிறகு நூல் எடுத்துத் தைத்துவிடு.

பிறகு சாதாரண 7 அங்குலத்துண்டு (படம் E g) எடுத்து அதை F வழியாய்க் கொண்டுபோய் e கீறல் வழியாய்ச் செலுத்து. மறுபடி d மேல் போட்டு c கீறல் வழியாய்ச் செலுத்து. மறுபடி D மேல் போடு. பிறகு h அடையாளமுள்ள கீறல் கொண்ட 7 அங்குலத் துண்டை எடு h கீறல் வழியாய் b, d, f துண்டுகளை உள்ளூரச் செலுத்து. h-ஐ gக்குக் கிட்டக் கொண்டுவா. பிறகு சாதாரண ஒரு 7 அங்குலத் துண்டு எடுத்து g-ஐச் செய்தது போல் கோத்து வா. பிறகு 7 அங்குலத் துண்டு எடுத்து h-ஐச் செய்தது போலச் செய்.

இம்மாதிரி 7 அங்குலத் துண்டுகள் எல்லாவற்றையும் விசிறியில் கோத்து வாங்கு. இரட்டிப்பு துண்டுகள் மூன்றையும் பாக்கி 3 பக்கங்களில் வைத்து a-யில் காட்டிய பிரகாரம் தைத்துவிடு.

### கைப்பிடி செய்துகொள்ளும் வழி

16 அங்குலம் நீளமுள்ள ஒரு பச்சை மூங்கில் துண்டு எடுத்து அதைத் தட்டையாகச் சீவு. அதில் 9 அங்குல நீளமுள்ள ஒரு கீறல் செய். விசிறியை இந்தக் கீறலில் பதியவைத்து நன்றாக இறுகக் கட்டு, இப்பொழுது இந்த விசிறியால் நீ விசிறிக் கொள்ளலாம்.

(*All right reserved*)

K. S.

# பத்திராதிபர் குறிப்பு

---

**ரேஞ்சுச் சங்கங்கள்.**

பல விடங்களிலிருந்து. ரேஞ்சுச் சங்கங்களைப்பற்றி புகார் வந்து கொண்டிருக்கிறது. வெகு நாட்களுக்கு முன்பு கல்வி இலாகாத் தலைவரின் உத்திரவின்பேரில் இச்சங்கங்கள் தோன்றியுள்ளன. ஆரம்ப ஆசிரியர்களுக்குப் போதனை முறையை விளக்குவது இச்சங்கங்களின் நோக்கமாம். இவைகளின் தலைவர்கள் ஆங்காங்குள்ள டிப்டி இன்ஸ்பெக்டர்கள். சங்கங்கள் சரியானபடி உழைக்கவில்லையெனப் பலர் கூறுகின்றனர். சங்கத்தால் பெரிய பயனை அடைவதாக ஆசிரியர்கள் நினைக்கவில்லை. இன்ஸ்பெக்டரே சங்கத்திற்குத் தலைவராயிருக்க வேண்டுமென்ற நிபந்தனையைப் பல ஆசிரியர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள். இந்த ஆக்ஷேபனையிலிருந்து இன்ஸ்பெக்டரிடம் ஆசிரியர்களுக்குத் துவேஷமென்றோ பிரியக் குறைவென்றோ நினைத்தல் தவறாகும். அநேக இடங்களில் இன்ஸ்பெக்டர்கள் வேண்டிய உதவியைச் செய்யத் தயாராயிருக்கிறார்கள். ஆயினும் இவர்கள் தலைவராயிருப்பது திருப்தியில்லையெனத் தோன்றுகிறது.

ஆசிரியர்கள் ஆக்ஷேபனையின் உண்மையை எல்லோரும் அறிய வேண்டும். ஆசிரியர்கள் சிறிய மாணவர்களல்ல. சங்கத்தின் பொறுப்பை வகிக்கக் கூடியவர்களே. வகிக்கமாட்டார்களென அதிகாரிகள் நினைப்பின் அவர்களை வகிப்பதற்கான வசதிகள் கொடுப்பது அதிகாரிகளின் கடமையாகும். கல்வி சம்பந்தமான பல விஷயங்களைத் தாமே சங்கத்தில் ஆலோசனைக்குக் கொண்டுவரும் சுதந்திரத்தை ஆசிரியர்கள் விரும்புவது தவறென்று சொல்லக் கூடுமா? தம்முடைய சங்கத்திற்குத் தலைவரைத் தாமே நியமித்து ஆரம்பக் கல்வி சம்பந்தமான தீர்மானங்களை அப்போதைக்கப்போதுக் கவனித்துவரும் உரிமையை ஆசிரியர்கள் விரும்புவது நியாயமல்லவா? வெளியே சென்று கல்வியின் அவசியத்தையும் கிராம முன்னேற்றத்தின் அவசியத்தையும் பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டுவது ஆரம்ப ஆசிரியர்களின் கடமை யென்று தலைவர்களும் கனம் ஸ்டேதாம் அவர்களும் கூறியுள்ளார்கள். ரேஞ்சுச் சங்கத்தில் செவ்வையாய் விஷயங்களைக் கவனித்து ஆராய்ச்சி செய்தாலல்லவோ ஆசிரியர்கள் தம் கடமையைச் செய்ய முடியும். சுதந்திரமில்லாததாலேயே

ரேஞ்சுச் சங்கங்களில் ஆசிரியர்களுக்கு உத்ஸாகமில்லை யென்று பலர் கூறுகிறார்கள்.

தென் இந்திய ஆசிரியச் சங்கத்தின் கிளைகளான ஜில்லா ஆசிரியச் சங்கங்களுடன் சேர்ந்து ஆலோசனை செய்யவேண்டுமென்னும் அவாவும் ஆரம்ப ஆசிரியர்களிடம் ஏற்பட்டிருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்கள் உயர் தரப் பள்ளிக்கூடத்திலுள்ள ஆசிரியர்களுடன் கலந்து கல்வி விஷயத்தை ஆலோசிப்பது நன்மை பயப்பதாகும். தனி மெம்பராக ஆரம்பாசிரியர் ஜில்லாச் சங்கத்துடன் சேர்வது கடினமாகும். ரேஞ்சுச் சங்கங்கள் பக்கத்தேயுள்ள ஜில்லாச்சங்கத்தோடு சேர்வதால் ஆரம்ப ஆசிரியர்கள் முன்னேற்ற மடைவார்கள். இத்தகைய உணர்ச்சியைப் போற்றுவது சரியான முறையாகும். ஆனால் சிற்சில இடங்களில் அதிகாரிகள் தடை செய்வதாக நாம் அறிகிறோம். இவ்வதிகாரிகள் தென் இந்திய ஆசிரியச் சங்கத்தின் நோக்கத்தையும், உழைப்பையும் சரியாயறியவில்லையென்றே நினைக்கிறோம். தென் இந்தியச் சங்கத்திலும் அதன் கிளைச் சங்கங்களிலுமுள்ள அங்கத்தினர்களான ஆசிரியர்கள் அதிகாரிகளின் பொது விதிகளுக்குக் கட்டுப்பட்டவர்கள்.இச்சங்கத்துடன் ரேஞ்சுச் சங்கங்கள் சேர்ப்பதை அதிகாரிகள் அங்கீகரிப்பதுடன் வேண்டிய உதவியையும் செய்ய வேண்டும். சென்ற மேமீ தஞ்சையில் நடந்த மாகாணக் கல்வி மகா நாட்டுக்குத் தலைமை வகித்தவர் இப்போது நமது பிரதம மந்திரியாயிருக்கும் ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியாரே.

ஆரம்ப ஆசிரியர்கள் முன்னேற்றமடைவது அவசியம். அவர்களுக்குத் தகுந்த உரிமையை அளித்தல் மிகவும் அவசியம். அப்போது தான் ஆசிரியர்கள் பொதுஜனங்களின் நன்மதிப்பை அடைவார்கள். உயர்தர ஆசிரியர்களுடன் கலந்துகொள்வதால் ரேஞ்சுச் சங்கங்களிலுள்ள ஆசிரியர்களின் நோக்கம் விரிவடையும். ஆரம்பக்கல்வியின் பொறுப்பை தாம் வகிக்கக்கூடும் என்ற தைரியமும் ஆரம்ப ஆசிரியர்களுக் கேற்படும். எல்லோரும் வேண்டுவது அதுவே.ரேஞ்சுச் சங்கங்களின் சீர்திருத்தத்தை உடனே கவனிக்குமாறு நமது டைரக்டர் கனம் ஸ்டேதாம் துரை அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

147645
சென்னை-600 008.

*Wanted publishers to purchase the following manuscripts written by C. S. Ramaswamy Iyer, Retired Teacher and author of Child's History of India, Heroines of Ind, etc.*

| | |
|---|---|
| English Conversation Book I | for Class IV |
| do. do. Book II | do. V |
| Arithmetic for Beginners ... ... | in Tamil |
| Domestic Hygiene ... ... | in Tamil |
| Stories from Indian History ... ... | for Class V |
| Tamil Primer for Beginners ... | ... ... |

For terms, please write for outright purchase of the Copyright of the above

to The Editor of this Magazine or to:

**C. S. RAMASWAMY IYER** *(Retired Teacher)*

**2/12-A, Alangatha Pillai Street : : Triplicane, Madras**

---

A NEW SERIES OF ENGLISH READERS FOR SCHOOLS IN INDIA

## The Coronation English Readers

**Edited by Prof. J. C. ROLLO, M.A.**

*Principal, Maharaja's College, Mysore*

| | | |
|---|---|---|
| Primer, Part I | (3rd Class) | Annas 3 |
| Primer, Part II | (4th Class) | Annas 3 |
| Primer, Parts I & II | | Annas 6 |
| Book I | (5th Class) | Annas 6 |
| Book II | (1st Form) | Annas 8 |

Books III & IV will be ready shortly.

The above series of English Readers are the result of thorough study of the present day needs of pupils learning English at the early stages. The books are well got up with many illustrations. A perusal of the books will convince any teacher of their special merits.

Applications for specimens from teachers will be attended to immediately.

**B. G. PAUL & Co., Educational Publishers**

12, Francis Joseph Street, G.T., MADRAS

Regd. No. M. 3473

நீங்கள் செலுத்துவது

# மாதம் ஒரு ரூபாய்

உங்கள்

வார்சுகளுக்குக் கிடைப்பது

ரூ. 250-லிருந்து ரூ. 375-வரையில்

# தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதியில்

உடனே சேருங்கள்

41, சிங்கராச்சாரி தெரு,

திருவல்லிக்கேணி, மதருஸ். கௌரவ காரியதரிசி.

Printed by K. Sadagopachariar at the Liberty Press, 7, Sunkurama Chetty St., G.T., & Published by Mr. M.S. Sabhesan, M.A. For The South India Teachers' Union, 41, Singarachari St., Triplicane, Madras.